# Anglo-Chinese Junior College

# JC2 Preliminary Examination 2018

# Tamil Language & Literature “H2”

**Subject : Tamil ( H2 )** பெயர் --------------------

**Subject code : 9574/1** வகுப்பு ______________

**Date : 15/08/2018**

**Duration : 2h 15min ( 08.15 – 10.30 )**

**Paper-1** முக்கிய குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து, நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.
2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் எழுத வேண்டும்.
3. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைத்தாளின் மேற்பகுதியில் உம் பெயரையும், வகுப்பு எண்ணையும் தெளிவாகவும், சரியாகவும் எழுதுக.
4. விடைத்தாளுடன் இந்தப் பக்கத்தை மட்டும் இணைத்துக் கொடுக்கவும்.

| Question.No | Marks |
| --- | --- |
| | |
| | |
| | |
| | |
| | |
| Total | |

Anglo – Chinese Junior College

JC2 Preliminary Examination 2018

Tamil Language Paper – 1 ( H2 ) ( PART – 1 )

உயர்தரம் – 2 , தாள் – 1 ( பகுதி – 1 )

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக.**

**( 35 மதிப்பெண்கள் )**

1. எதிலும் எதிர்மறையான சிந்தனை கொண்ட மனிதரை விடப் பாதகமானது வேறொன்றும் இருக்க முடியாது – மார்க் டுவைன். ------ கருத்துரைக்க.
2. எல்லைகள் அற்ற உலகமயச்சூழல் நம் கலாசாரத்தை அழித்து வருகிறது ---- விவாதிக்க.
3. இன்றைய உலகில் சிறந்த பண்புள்ளவரைவிடச் செல்வரே மதிக்கப்படுகிறார்கள் --- ஆராய்க.

( அடுத்த பக்கம் பார்க்க )

4. கீழ்க்காணும் படம் உணர்த்தும் செய்தி யாது? உன் கருத்தை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.



Thanks : Yang Chuyi.

முற்றும்

# PART – 2

## <u>“அ” பிரிவு</u>

### <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> ( 5 மதிப்பெண்கள் )

பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

உழைப்பும் வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பவை. இரண்டிற்கும் அதிக இடைவெளி கிடையாது. உழைப்பில் இருந்து ஒதுங்குகிறவன் Q1________________ இருந்து ஒதுங்குகிறான். நாம் உழைக்க வேண்டிய அவசியம் இல்லாதபடி உடல் உழைப்பிற்கு ஆள் வைத்திருப்பவர்களை அதிர்ஷ்டசாலி என்று புகழுகிறோம். உண்மையில் இது முட்டாள்தனம். சிறு வேலைகள் கூட செய்ய சிலர் Q2________________ இல்லாததால் சிலர் வெகு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஜப்பானிய ஜென்குரு முதுமை அடைந்த பின்னரும் தோட்டத்தில் வேலை செய்ய வந்து விடுவார். எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லையே என்று Q3________________ சீடர்கள் மண்வெட்டி, கடப்பாரை ஆகியவற்றை ஒளித்து வைத்துவிட்டார்கள். காலை, தோட்ட வேலைக்கு வந்த குரு ஏமாற்றம் அடைந்தார். அன்று முழுவதும் சீடர்கள் வற்புறுத்தியும் உண்ணவே இல்லை. உழைக்காத எவனுக்கும் உணவு உண்ண உரிமை இல்லை என்று Q4________________ சொல்லிவிட்டார். வேறு வழியின்றி மறுநாள் மண்வெட்டியும், கடப்பாரையும் அவரிடம் தரப்பட்டது. Q5________________ மூலம் சக்தி விரயமாவதாகப் பலர் தவறாக நினைக்கிறார்கள். இல்லை அது மேலும் பலமடைகிறது. உடலும் நலிவடைவதில்லை. அது மேலும் பொலிவடைகிறது.

( அடுத்த பக்கம் பார்க்க )

## "ஆ" பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் ( 1 )** **( 30 மதிப்பெண்கள் )**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

முடிவெடுக்கும்போது நாம் பல விஷயங்களையும் ஆராய்கிறோம். "இது எனக்குப் பிடித்திருக்கிறது", என்று ஒரு எண்ணத்தை மட்டும் கொண்டு எதையும் தீர்மானித்து விடுவதில்லை. நமது முடிவெடுக்கும் தன்மையைப் பல விஷயங்கள் பாதிக்கின்றன. மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப எல்லாவித முடிவுகளிலும் ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவும். "இது இப்படித்தான் போகும்", என்று உறுதி செய்துகொண்டு நாம் முடிவெடுக்க முடியாது. ஒரு அனுமானத்தில்தான் முடிவெடுத்துப் போய்க்கொண்டே இருக்கவேண்டும். அதிர்ஷ்டம் என்பதும் எதிர்பாராது அமையும் சம்பவங்களும் நமது முடிவைப் பாதிக்கலாம். நமது முடிவைச் சமூகச் சூழ்நிலைகள் பல சமயம் நெருக்கக்கூடும். எனினும் முக்கியப் பொறுப்புகளில் உள்ளவர்கள் அவசரமாக அவசியமாக முடிவெடுக்கவேண்டிய விஷயத்தில் அலட்சியம் காட்டித் தள்ளிப்போட்டுக் கொண்டே போவார்களேயானால், அதனால் ஒரு தலைமுறையினரின் முன்னேற்றம் பாதிக்கப்படக்கூடும்.

எல்லாவற்றையும் ஆராய்ந்து, விவாதித்து முடிவெடுக்க எல்லாரும் தத்துவஞானிகள் அல்லர். முடிவெடுக்கும் நாம் ஒரு நடைமுறைவாதி. மனிதன் இவ்வுலகில் வாழ விரும்புகிறான், வாழ்வதைச் சிறப்பாக வாழ விரும்புகிறான். அதற்காக என்ன செய்யவேண்டுமோ அதைச் செம்மையாக்கிச் செய்கிறான். உடனுக்குடன் முடிவெடுத்து மேலே போய்க்கொண்டே இருக்கிறான். அப்படிப்பட்டவனைத்தான் செயல்திறன் கொண்டவன் என்று பாராட்டுகிறோம். இத்தகைய குணம்தான் ஒரு வியாபாரிக்கு, தொழில் அதிபருக்கு, ஆட்சியாளர்களுக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தருகிறது. இத்தகைய மக்கள் உள்ள சமுதாயமே துடிப்புமிக்க சமுதாயமாகும்.

இக்கால இளையோர்களிடம் பெற்றோர்கள் தங்கள் காலத்து அனுபவங்களுக்கேற்ப இளையர்கள் செயல்பட வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது சரியல்ல. ஏனெனில் அவரவர் வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயங்களில், சம்பந்தபட்டவர்களே முடிவெடுக்கவேண்டும். "நான் அனுபவசாலி, நான் சொல்வதைக்கேள்", என்று நமது முடிவைச் சிலர் திசைதிருப்ப முயலக்கூடும். ஒரு விஷயத்தை ஒரு மனிதன் எப்படி ஏற்றுக்கொள்கிறான் என்பதைப் பொறுத்து அனுபவங்கள் பல்வேறு விதமாய் அமையலாம். வெகு சிலரது பொது அனுபவங்களே எல்லாருக்கும் பொதுவானது என்று எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும். எனவே, புதியன காணும் மனோபவத்தை இந்த அனுபவம் முடக்கிவிடாமல் இருக்கவேண்டும்.

முடிவெடுக்கும்போது அறிவு, உணர்ச்சி இரண்டின் பாதிப்பையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும் அதே வேளையில் அறிவுக்கும் மதிப்பளித்து முடிவெடுக்கவேண்டும். சிலப்பதிகாரத்தில், பாண்டியன் நெடுஞ்செழியன் சிலம்பைக் கண்டதும், அது தன் மனைவியின் சிலம்புதான் என்று உணர்ச்சிவசப்பட்டு உத்தரவிட்டானே! அந்த முடிவு, வெறும் உணர்ச்சி ஏற்படுத்திய முடிவு. கண்ணகி சீறியெழுந்து, தனது மாணிக்கக் கற்களால் ஆனது, அரசியின் சிலம்பு முத்துக்களால் ஆனது என்று கூறிச் சிலம்பினை உடைக்கிறாள், அரசனுக்கும் தவற்றை உணர்த்துகிறாள், நீதிக்காக, அறிவுடனும் உணர்ச்சியுடனும் அவள் போராடுகிறாள். அப்போராட்டத்தில் வெற்றியும் பெறுகிறாள். எனவே, நமது முடிவு உணர்வுப் பூர்வமானதாக மட்டுமன்றி அறிவுப்பூர்வமானதாகவும் இருத்தல் வேண்டும்.

**வினாக்கள்** **( 24 மதிப்பெண்கள் )**

Q6.முடிவெடுப்பதைப் பாதிக்கும் அம்சங்கள் யாவை?

1. ( 6 மதிப்பெண்கள் )

Q.7.துடிப்புமிக்க சமுதாயம் எவ்வாறு திகழ வேண்டும் ?

2. ( 6 மதிப்பெண்கள் )

Q8.ஆசிரியர் புதியன காணும் மனோபாவத்தை முடக்கி விடும் என்று எதனைச் சுட்டுகிறார்? ( 6 மதிப்பெண்கள் )

Q9.கண்ணகியின் கதை எதற்கு எடுத்துக்காட்டாய்க் கொடுக்கப்பட்டுள்ளது?

3. (6 மதிப்பெண்கள் )

**Q10.சொற்பொருள்** **( 6 மதிப்பெண்கள் )**

அ. தீர்மானித்து.

ஆ. செம்மையாக்கி.

இ. பாதிக்கும்.

நன்றி – தொடக்கக்கல்லூரி ஆசிரியர்கள்.

________________முற்றும்________________

# Anglo-Chinese Junior College

# JC2 Preliminary Examination 2018

# Tamil Language & Literature “H2” E-Exam

**Subject : Tamil ( H2 )** பெயர் --------------------

**Subject code : 9574/2** வகுப்பு ______________

**Date : 15/08/2018**

**Duration : 1h ( 11.15 – 12.15pm )**

**Paper-2** முக்கிய குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து, நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.
2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் எழுத வேண்டும்.
3. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைத்தாளின் மேற்பகுதியில் உம் பெயரையும், வகுப்பு எண்ணையும் தெளிவாகவும், சரியாகவும் எழுதுக.
4. விடைத்தாளுடன் இந்தப் பக்கத்தை மட்டும் இணைத்துக் கொடுக்கவும்.

| Question.No | Marks |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| Total | |

## “இ” பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் ( 2) ( 30 மதிப்பெண்கள் )**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

பனுவல் ஒன்று

குடும்பம்

குடும்ப ஒற்றுமையின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர வலியுறுத்தி, 1992-ம் ஆண்டு மே 15 முதல் ஐக்கிய நாடுகள் சபை சார்பில் சர்வதேச குடும்ப தினம் கொண்டாடப்படுகிறது. ஒரு மனிதன் எந்தச் சூழ்நிலையிலும், எந்த வயதினிலும், குடும்பத்தைக் கைவிடாமல் ஆதரவளிக்க வேண்டும் என்பதை சர்வதேச குடும்ப தினம் வலியுறுத்துகிறது. குடும்ப ஒற்றுமையை உலகிற்கு முதலில் சொன்னது தமிழர்கள்தான். “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை”, என்பது தமிழ் பழமொழி. “யாதும் ஊரே யாவரும் கேளிர்”, என்று புறநானூறு பாடலில் சொன்னார் கணியன் பூங்குன்றனார். ஒரு கூட்டு கிளியாக ஒரு தோப்பு குயிலாக நமக்குள் சந்தோஷங்கள், சிறு சிறு சண்டைகள், சமாதானங்கள் என அனைத்தும் நிறைந்த அற்புத அமைப்பு குடும்பம். அது அனைத்து உறவுகளும் சங்கமித்திருக்கும் சமுத்திரம். ஆனால் இன்று சமூக வளைத்தளங்களில் மட்டும்தான் ( பேஸ்புக், வாட்சப் உருவாக்கி ) உறவுகள் கூட்டாக வாழ்கின்றனரே தவிர, கூட்டுக் குடும்பமாக வாழ்வது என்பது அதிசயமாக உள்ளது. ஷாப்பிங், பார்ட்டி, பார்க், பீச், சினிமா இவைகளைத் தாண்டி மனிதனுக்கு ஒரு சந்தோஷம் உண்டென்றால் அது கூட்டுக் குடும்பத்தில் மட்டுமே. நாம் இழந்துவரும் பண்பாடுகளில் தற்போது மிக முக்கியமானது கூட்டுக் குடும்பமாகும். குடும்பங்களுக்குள் ஒற்றுமை இருக்கும்வரை, மனிதனுக்கு வாழ்க்கையில் கவலை இருப்பதில்லை. இன்றோ, தனி மனிதனின் சுதந்திரம் என்று தனிக் குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ ஆசைப்படுகிறார்கள். இதனால் பல கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து போயின. தனிக்குடும்ப வாழ்வில் நாம் மட்டும் விலகி நிற்கவில்லை. அன்பு, பாசம், நேசம் யாவற்றிலிருந்தும் நாம் சிறிது சிறிதாக விலகி தூரமாக்கப்பட்டு விடுகிறோம். அன்று கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்த காலத்தில் முதியோர் இல்லம் இருந்ததா? இன்றோ காணும் இடங்களில் எல்லாம் முதியோர் இல்லம் முளைத்துள்ளதே! பொருளாதார தேடலுக்காக பிரிந்திருந்தாலும், அவ்வப்போது கூடி மகிழ்ந்து உறவுகளைப் போற்றுவோம் என இந்தச் சர்வதேச குடும்ப தினத்தில் உறுதியேற்போம்.

பனுவல் இரண்டு

குடும்பங்களின் ஒற்றுமை

இன்றைய நவீன உலகில், வாழ்வாதாரத்திற்காக, சொந்த இடங்களை விட்டு, வெவ்வேறு இடங்களில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக இருப்பது அரிதாக உள்ளது. குடும்ப கட்டமைப்பிலும் விரிசல் உருவாகிறது. உலகளவில் சொந்த இருப்பிடத்தை விட்டு, உள்நாட்டுக்குள் அல்ல, வெளிநாடுகளில் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களது குடும்பம், இவர்களைச் சார்ந்து உள்ளது. என்ன தான் இவர்கள், குடும்பத்திற்கு வருமானத்தை அங்கிருந்து அளித்தாலும், அருகில் இல்லாதது அவர்களது குடும்பங்களுக்கு ஏமாற்றமாகவே இருக்கும். குடும்பங்களுக்குள் ஒற்றுமை இருக்கும் வரை, வாழ்க்கையில் கவலை இருப்பதில்லை. குடும்பமே முதல் வேலை. ஒருவர் எந்த சூழ்நிலையிலும், எந்த வயதினிலும், எவருக்காகவும், குடும்பத்தைக் கைவிடாமல் ஆதரவளிக்க வேண்டும். தனிக்குடும்ப வாழ்க்கை, விவாகரத்துகள், தாய், தந்தை இல்லாத குழந்தைகள், ஒருங்கிணைப்பு இல்லாத குடும்பங்கள் போன்றவை அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இதைத் தடுப்பதற்குக் குடும்பங்களின் ஒற்றுமை அவசியம். நல்லதொரு குடும்பம். ராமநாதபுரம் சுதந்திரப் போராட்ட தியாகி பி. ஆர். நவதி.மனைவி ரத்தினவள்ளி. இவர்களுக்கு நான்கு மகன், நான்கு மகள்கள். அனைவருக்கும் திருமணம் முடித்து பேரன், பேத்திகளுடன் ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்கின்றனர். கூடி பேசி நல்ல முடிவு எடுக்கிறோம். நவதியின் மூத்த மகன் முத்துராமலிங்கம். 48 ஆண்டுகளாகக் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறோம். அப்பா மறைவுக்குப் பின், அம்மாவின் தலைமையில் விவசாயம் மற்றும் தொழில்களைக் கூட்டாகவே செய்து வருகிறோம். வீட்டில் அனைத்து செலவுகளுக்கும் சேர்த்து ஒரே பட்ஜெட் தான். யாருக்கு, எப்ப, என்ன தேவை என்பதை அம்மாவிடமோ, என்னிடமோ தெரிவிப்பார்கள். தேவையின் முக்கியத்துவம் கருதி, செய்து கொடுப்போம். எந்த ஒரு பிரச்சினையானாலும், கூடி பேசி நல்ல முடிவு எடுக்கிறோம். கூட்டுக் குடும்பம் என்பதே எங்களுக்குப் பெரிய பலம். பிறருடன் எப்படி பழக வேண்டும், பேச வேண்டும் என்பதைப் பெரியவர்கள் கற்றுத் தருகின்றனர். யார் தவறு செய்தாலும் உடனே கண்டித்துத், தவற்றை உணர்ந்து திருத்திக் கொள்கிறோம்.

வினாக்கள்.

11. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. ( பனுவல் ஒன்று ) ( 4 மதிப்பெண்கள் )

“குடும்பங்களுக்குள் ஒற்றுமை இருக்கும் வரை, மனிதனுக்கு வாழ்க்கையில் கவலை இருப்பதில்லை”.

( அ ) தொழிற்பெயர் ---

( ஆ ) நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ----

12. அக்காலத்தில் குடும்பம் என்பது எவ்வாறு இருந்தது? என்பதற்கு ஆசிரியர் கூறும் கருத்துக்கள் யாவை? ( பனுவல் ஒன்று )

( 6 மதிப்பெண்கள் )

13. எதற்கு குடும்ப ஒற்றுமை அவசியம்? என்று பனுவல் இரண்டு கூறக் காரணங்கள் யாவை?

( 6 தமிப்பெண்கள் )

14. கூடி பேசி நல்ல முடிவு எடுக்கிறோம் என்பதற்கு ஆசிரியர் கூறிய சான்றினையும், உனக்குத் தெரிந்த எடுத்துக்காட்டையும் விளக்கி உன் கருத்துகளை 140 சொற்களில் எழுதுக. ( பனுவல் இரண்டு )

( 14 மதிப்பெண்கள் )

முற்றும்

# Anglo-Chinese Junior College

## JC2 Preliminary Examination 2018

## Tamil Language & Literature "H2"

**Subject : Tamil ( H2 )** **பெயர்** --------------------

**Subject code : 9574/3** **வகுப்பு** ______________

**Date : 21/08/2018**

**Duration : 3h ( 14.00 – 17.00pm )**

**Paper-3** **முக்கிய குறிப்புகள்**

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து, நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.
2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் எழுத வேண்டும்.
3. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைத்தாளின் மேற்பகுதியில் உம் பெயரையும், வகுப்பு எண்ணையும் தெளிவாகவும், சரியாகவும் எழுதுக.
4. விடைத்தாளுடன் இந்தப் பக்கத்தை மட்டும் இணைத்துக் கொடுக்கவும்.

| Question.No | Marks |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| Total | |

# Anglo – Chinese Junior College

## JC2 Preliminary Examination 2018

## Tamil Language & Literature ( H2 )

## உயர்தரம் – 2

## தமிழ்மொழி இலக்கியம் ( தாள் – 3 )

<u>தேர்வு எழுதுவோருக்கான முக்கியக் குறிப்புகள்</u>.

அ. மொத்தம் <u>நான்கு</u> வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

ஆ. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் <u>ஒரு</u> வினாவிற்கு விடை எழுத வேண்டும்.

இ. ஒவ்வொரு வினாவிற்கும் <u>25</u> மதிப்பெண்கள் வழங்கப்படும்.

### <u>“அ” பிரிவு</u>

<u>நாவல்</u>

1. “பால் மரக்காட்டினிலே,” என்ற நாவலின் கருப்பொருளை ஆசிரியர் அகிலன் நாவலில் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை விளக்கி எழுதுக. ( 25 மதிப்பெண்கள் )

அல்லது

2. “பால் மரக்காட்டினிலே,” நாவலில் இடம் பெற்றுள்ள பெண் கதாமாந்தர்களில் உன் மனதில் பாதிப்பை ஏற்படுத்திய கதாமாந்தர் யார்? உன் விடைக்கான காரணங்களைச் சான்றுகளுடன் விளக்குக. ( 25 மதிப்பெண்கள் )

### <u>“ஆ” பிரிவு</u>

<u>சிறுகதை</u>

3. “ஆயிஷா”, என்ற சிறுகதையின் கருப்பொருள் யாது? அதை ஆசிரியர் எவ்வாறு வெளிக்கொணர்கிறார்? விளக்குக. ( 25 மதிப்பெண்கள் )

அல்லது

4. “நாடோடிகள்”, என்னும் சிறுகதை இக்காலச் சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது என்று கூறலாமா? ஆராய்க. ( 25 மதிப்பெண்கள் )

( அடுத்த பக்கம் பார்க்க )

## "இ" பிரிவு

### நாடகம்

5. "காதல் என்ன விலை?", என்ற நாடகத்தில் இடம்பெறும் வள்ளியம்மை என்னும் கதாப்பாத்திரம் இக்கால இளம் பட்டதாரி பெண்களைச் சித்தரிக்கின்றது என்று கூறலாமா? – கருத்துரைக்க. ( 25 மதிப்பெண்கள் )

அல்லது

6. "சிங்கப்பூர் மாப்பிள்ளை" , "காதல் என்ன விலை", ஆகிய இரு நாடகங்களும் இக்காலச் சிங்கப்பூர் இளையர்களுக்கு வலியுறுத்தும் கருத்துக்கள் யாவை? – ஆராய்க. ( 25 மதிப்பெண்கள் )

## "ஈ" பிரிவு

### கவிதை

7. பாவேந்தர் பாரதிதாசன் அன்று கண்ட கனவுகள் இன்று நிறைவேறி வருகின்றன – என்று கூறலாமா? "எந்நாளோ", என்ற கவிதை வழி நின்று விளக்குக. ( 25 மதிப்பெண்கள் )

அல்லது

8. புறநானூற்றுப் பாடல்களில் உள்ள இலக்கிய நயத்தைப் பாராட்டுக. ( 25 மதிப்பெண்கள் )

முற்றும்

# ANDERSON JUNIOR COLLEGE
# அண்டர்சன் தொடக்கக் கல்லூரி
## PRELIMINARY EXAMINATION- 2018
## முன்னோட்டத் தேர்வு

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்<br>தாள் - 1 (பகுதி 1)<br><br>**HIGHER 2 TAMIL LANGUAGE, LITERATURE**<br>**PAPER -1( Part 1)** | **9574/01**<br>**13/09/2018**<br><br>Duration: 1 hr 15 mins |

## <u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

**1.** இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு **<u>2.15 மணிநேரம்</u>** வழங்கப்பட்டுள்ளது.

**2.** முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

**3.** அகராதியைப் பயன்படுத்துதல்:

அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம்.

ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

இ) நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

**4.** ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

**5.** பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

**முதல் பகுதியின் 4 கட்டுரைத் தலைப்புகள் பக்கம் 2-இல் அச்சிடப்பட்டுள்ளன.**

I.பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை வரைக. (35 மதிப்பெண்கள்)

***Q1.அடியில் கொடுக்கப்பட்டுள்ள படக்காட்சியினை அடிப்படையாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.***




**Q2. *"நேற்றைய இழப்புகளை மறந்து, நாளைய வெற்றியினை நோக்கி, இன்றைய பொழுதினைத் தொடங்குவோம் நம்பிக்கையுடன்"***

**- கருத்துரைக்க.**

**Q3. சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்கள் பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டால் கருத்துச் சுதந்திரம் பாதிக்கப்படும். - விவாதிக்க.**

**Q4. வாழ்க்கைச் செலவினங்களைக் (Cost of living) கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை ஆராய்க.**

<table>
<tr><td rowspan="2"></td><td>

# ANDERSON JUNIOR COLLEGE

## அண்டர்சன் தொடக்கக் கல்லூரி

## PRELIMINARY EXAMINATION- 2018

## முன்னோட்டத் தேர்வு

</td></tr>
</table>

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்<br>தாள் - 1 (பகுதி 1)<br><br>**HIGHER 2 TAMIL LANGUAGE, LITERATURE**<br>**PAPER -1( Part 2)** | **A**<br>**9574/01**<br>**13/09/2018**<br><br>Duration: 1 hr |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1.கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டுஅவற்றின்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2.விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ளவிடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3.பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

## ‘அ பிரிவு‘

**<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>** **(5 மதிப்பெண்கள்)**

### பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

எப்பொழுதோ நிகழ்ந்ததை நிகழ்ந்தது நிகழ்ந்தவாறு இப்பொழுதும் நாம் அறிந்து கொள்ள உதவுவது புத்தகங்களே. எவரோ அறிந்ததை நாமும் தெரிந்துகொள்ள 1.________________________ நிற்பவை நூல்கள் தாம். விலங்குகளின் வாழ்க்கை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எப்படியோ அப்படியே தான் இன்றும் உள்ளது. எப்படியும் வாழலாம் என்பது விலங்குகளின் வாழ்க்கை. ஆனால் 2.________________________ வாழவேண்டும் என்பது மனித வாழ்க்கை. ஆயிரமாயிரம் கருத்துகளின் சேகரமே புத்தகங்கள். இவை வெறும் காகிதங்களின் கற்றையல்ல. அவை உண்மைகளின் உறைவிடம். புத்துலகு நோக்கி மனிதனை வழி நடத்துபவை. புத்தகத்தைத் திறப்பவன் அறிவுச் சுரங்கத்தின் வாயிலைத் திறக்கிறான். காலத்தையும் விஞ்சி நிற்கிற கருத்து மணிகளை உள்ளடக்கியிருக்கிற நூல்களைப் போல உயர்ந்த பண்புகளை உடைய நல்ல நண்பர்களைப் பெறுதல் 3.___________________________. நண்பர்கள் கூட சில சமயங்களில் சறுக்கிட நேரலாம். ஏமாற்றி விடக்கூடும். ஆனால் நம்மை எப்போதும் 4.________________________ நல்ல நண்பர்கள் புத்தகங்களே. “நாளும் பொழுதும் என்னோடு நாவாடிக் கொண்டிருக்கிற என்னை எப்போதும் வீழ்த்திடாத நண்பர்கள் புத்தகங்களே” என்றார் கவிஞர் ராபர்ட் கதே. சிறந்த நூல்களை, சிந்தனையைத் தூண்டி வளர்க்கும் நூல்களை, மனதை உழுது பண்படுத்திப் பயன் விளைக்கும் நூல்களை நாம் தொடர்ந்து படிக்க வேண்டும். முன்பு வாழ்ந்தவர்களின் 5.__________________________ அறிவையும் எடுத்துக் கொண்டு அவர்கள் விட்ட இடத்திலிருந்து வாழ்வைத் தொடர்வதால்தான் மனித வாழ்க்கை தொடர்ந்து வளர்ச்சியைப் பெற்று வருகிறது.

## <u>‘ஆ பிரிவு‘</u>

**<u>சுயவிடைக் கருத்தறிதல் (1)</u>** **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை தருக.**

1. உலகம் முழுவதும் காற்று மாசு அதிகரித்து வருகிறது. வாகனங்கள், தொழிற்சாலைகள் வெளியிடும் புகையால் மனிதனால் இன்று நிம்மதியாக சுவாசிக்க முடிவதில்லை. சுத்தமான காற்றுக்கு இன்று பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. உலக சுகாதார மையம் நடத்திய ஆய்வில் உலக மக்கள் தொகையில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் சுகாதாரமற்ற காற்றைச் சுவாசிப்பதாகவும் அதனால் மக்களின் ஆயுட்காலம் குறைந்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. தொழிற்புரட்சி ஏற்படும் முன் உலகின் காற்று மாசு அளவு 280 பிபிஎம் ஆக இருந்தது. அதன் பின் தொடர்ந்து அதிகரித்து கடந்த ஏப்ரல் மாதம் முதல் காற்று மாசு அளவு 400 பிபிஎம்(ppm) விட அதிகரித்து காணப்படுகிறது. இந்த நிலை நீடித்தால் வரும் 2050ம் ஆண்டுக்குள் கரியமில வாயு அளவு 545 முதல் 585 பிபிஎம் ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிபிஎம் என்பது காற்றில் உள்ள மாசு

பொருட்களின் அளவைக் குறிப்பிடும் அளவுகோல். இதனால், பூமிப்பந்து மெல்ல மெல்ல சூடாகி வருகின்றது.

2. புவி வெப்பம் அதிகரிப்பதால் பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. அதன் காரணமாக உலகளவில் புயல், சூறாவளி, வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. நவீன கால மனிதர்கள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதால் தான் தற்போது காற்று மாசு அதிகரித்து வருகிறது. இதனால் மனிதர்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் எந்த அளவு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றி சர்வதேச அளவில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. காற்று மாசால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏராளம்.

3. காற்று மாசு அதிகரித்து வருவதால் காற்றில் கரியமிலவாயுவின் அளவு அதிகமாக விடுகிறது. இதன் தாக்கம் விவசாயத்திலும் பயிர் உற்பத்தியிலும் எதிரொலிக்கும் என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பொதுவாக செடிகள் காற்றில் உள்ள கரிமிலவாயுவைச் சுவாசித்து அதன் மூலம் உணவைத் தயாரிக்கின்றன. தற்போது காற்றில் கரிமிலவாயுவின் அளவு அதிகரித்து வருகிறது. இந்தச் சூழல் செடிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்பது **<u>நிதர்சனம்</u>**. முக்கியமாக கரியமிலவாயுவின் அளவு அதிகரிப்பதால் உணவுத் தானியங்களின் விளைச்சல் அடுத்த 50 ஆண்டுகளில் பல மடங்காக உயரும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது மக்களுக்கு நல்லது தானே என அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசியல் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் முக்கியமான விஷயத்தை உணரவில்லை. ஒரு பொருளின் எண்ணிக்கை அல்லது அளவு அதிகரித்தால் மட்டும் போதுமா? அதன் தரமும் உயர்ந்தால் தானே மக்களுக்கு அது பலனளிக்கும். தானிய உற்பத்தி அதிகரிப்பதோடு அதன் ஊட்டச்சத்து தரமும் உயர்ந்தால் தான் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கை பாதுகாக்கப்படும்.

4. அமெரிக்காவைச் சேர்ந்த இராகி லோலாட்சி என்ற கணித நிபுணரின் மனதில் முதன் முதலாக 17 ஆண்டுகளுக்கு முன் இது பற்றிய கேள்வி எழுந்தது. அதன் பின் கணித படிப்புடன் அவர் தாவரவியல் சார்ந்த ஆராய்ச்சிகளிலும் கவனம் செலுத்தினார். காற்றில் அதிகரிக்கும் கரியமிலவாயு காரணமாகவே உணவுப் பயிர்களின் ஊட்டச்சத்து அளவு வெகுவாக குறைவதாக இராகி லோலாட்சி உறுதியாக நம்பினார். அவர் தேடியெடுத்த ஆயிரக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளில் 1997ம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் மட்டும் அதிகரிக்கும் கரிமிலவாயுவால் அரிசியில் இரும்பு மற்றும் துத்தநாகத்தின் அளவு குறைவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதியில் இராகி லோலாட்சி தான் **<u>திரட்டிய</u>** தகவல்களின் அடிப்படையில் கரியமிலவாயு அதிகரிப்பதற்கும் உணவுப் பயிர்களின் ஊட்டச்சத்து குறைப்பாட்டிற்கும் தொடர்பு இருப்பதை எழுதி ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். இந்த விவகாரம் குறித்து முதல் ஆய்வுக் கட்டுரை சமர்பித்தவர் இராகி

லோலாட்சி. கரியமிலவாயு அதிகரிப்பால் உணவுத் தானியங்களும் துரித உணவு போல் ஊட்டச்சத்து இல்லாமல் மாறி வருவதைத் தன் கட்டுரையில் தெரிவித்தார்.

5. உலகளவில் நடத்தப்பட்ட பல்வேறு ஆராய்ச்சிகள் காற்றில் அதிகரிக்கும் கரியமிலவாயுவால் நாம் தினமும் சாப்பிடும் அரிசி, கோதுமை, சோயா உள்ளிட்ட பல உணவுப் பயிர்களில், புரதம், இரும்புசத்து, துத்தநாகம் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துகளின் அளவு குறையும் என்பதைக் கண்டறிந்தன. அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் வரும் 2050ம் ஆண்டுக்குள் அரிசி, கோதுமை, சோளம், சோயாபீன்ஸ், பயிறுவகைகளின் ஊட்டச்சத்துகள் குறையும் என கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின் முடிவுகளின்படி வரும் 2050ம் ஆண்டுக்கு பின் காற்று மாசு அதிகம் உள்ள இடங்களில் விளையும் அரிசியில் புரதம், வைட்டமின்களான பி1, பி2, பி5 மற்றும் பி9, தாது உப்புகளான இரும்பு, துத்தநாகம் ஆகிய ஊட்டச்சத்துகளின் அளவு குறைவாக இருக்கும் என விஞ்ஞானிகள் உறுதிசெய்துள்ளனர். காற்று மாசை கட்டுப்படுத்தவதன் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். பிறருக்கும் இதை உணர்த்த வேண்டும் வருங்கால **<u>சந்ததியினருக்கு</u>** ஒரு சிறந்த எதிர்காலத்தை விட்டுச் செல்ல வேண்டியது நமது கடமையாகும். பொதுமக்களிடம் பெரிய அளவில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

**<u>வினாக்கள்</u>**

6. காற்றில் மாசு அதிகரித்து வருவதற்கு என்ன காரணம்? அதனால் ஏற்படும் பாதிப்புகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

7. காற்றில் கரியமிலவாயுவின் அளவு அதிகரித்து வருவதால் விவசாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை? (6 மதிப்பெண்கள்)

8. விஞ்ஞானி இராகி லோலாட்சி, தமது ஆய்வு வழி எதைக் கண்டுபிடித்தார்? (6 மதிப்பெண்கள்)

9. வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க நாம் என்ன செய்ய வேண்டும்? (6 மதிப்பெண்கள்)

10. சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றிற்கான பொருளை எழுதுக.**

**அ.** நிதர்சனம் **ஆ.** திரட்டிய **இ.** சந்ததியினருக்கு

**முற்றும்**

# ANDERSON JUNIOR COLLEGE
## அண்டர்சன் தொடக்கக் கல்லூரி
## PRELIMINARY EXAMINATION - 2018
## முன்னோட்டத் தேர்வு

| | |
|---|---|
| **உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்**<br>**தாள் - 3**<br>**HIGHER 2 TAMIL LANGUAGE, LITERATURE**<br>**PAPER -3** | **9574/03**<br>**10/09/2018**<br>Duration: 3 hours |

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

**1** கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

**2** விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

**3** பயன்படுத்தபட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள **8** வினாக்கள் பக்கம் 2 முதல் 3 வரை அச்சிடப்பட்டுள்ளன.

# <u>உயர்தரம் 2 தமிழ் மொழி, இலக்கியம் - தாள் 3</u>

## <u>**முக்கியக் குறிப்புகள்**</u>

1. மொத்தம் <u>**நான்கு வினாக்களுக்கு**</u> விடையெழுத வேண்டும்.
2. ஒவ்வொரு வினாவிற்கும் <u>**25 மதிப்பெண்கள்**</u> வழங்கப்படும்.
3. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும்.

### <u>‘அ’ பிரிவு</u>

<u>நாவல்</u>

**Q1.** முரண்பட்ட கதைமாந்தர்கள் பால்மரக்காட்டினிலே நாவலில் இடம்பெற்றுள்ள பாங்கினை ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

**Q2.** மலேசியத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டங்களைப் பால்மரக் காட்டினிலே நாவல் வலுவான முறையில் சித்தரிக்கின்றதா? -ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

### <u>*‘ஆ’ பிரிவு*</u>

<u>சிறுகதை</u>

Q3. ‘காலத்தை வென்று நிற்கும் சிறந்த சிறுகதை கு.ப.ரா. எழுதிய ‘விடியுமா?’ என்னும் சிறுகதையாகும். இக்கருத்தை ஆதாரங்களுடன் நிறுவுக. (25 மதிப்பெண்கள்)

Q4. ‘தமிழுக்கு அமுதென்று பேர்’ என்ற சிறுகதை மூலம் அக்கதையின் கருப்பொருளை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர் கனகலதா, எத்தகைய உத்திகளைக் கையாண்டு அச்சிறுகதையைப் படைத்துள்ளார்?(25 மதிப்பெண்கள்)

## <u>'இ' பிரிவு</u>

**<u>நாடகம்</u>**

**Q5.** சிங்கப்பூர் மாப்பிள்ளை என்னும் நாடகத்தில் வெளிப்படும் கருத்துகள் இக்கால வாழ்வியல் சூழலுக்கும் பொருந்துகிறதா? - ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

**Q6.** சிங்கப்பூரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய சில உண்மைகளை, டி.டி.தவமணி அவர்களின், 'காதலுக்கு என்ன விலை?' என்னும் நாடகத்தில் வரும் சில நிகழ்வுகளைக் கொண்டு விளக்குக. (25 மதிப்பெண்கள்)

## <u>'ஈ' பிரிவு</u>

**<u>கவிதை</u>**

Q7. தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளான காதலும் வீரமும், சங்க காலக் கவிதைகளில் எவ்வாறு எடுத்துக்கூறப்பட்டுள்ளன என்பதை உமது பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள குறுந்தொகை, புறநானூறு கவிதைகள் வழிநின்று ஆராய்க.

**Q8.** இயற்கை இன்பம், சாந்தி தரும் அந்தி ஆகிய இரு கவிதைகளில் இயற்கையை கவிஞர்கள் அழகுற வர்ணிக்கும் பாங்கினை ஆராய்வதோடு அக்கவிதைகளின் இலக்கிய நயத்தையும் எடுத்துரைக்க.

## (முற்றும்)

EUNOIA JUNIOR COLLEGE
JC2 Preliminary Examination 2018
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம் 9574/01

தாள் 1, பகுதி 1

**18 September 2018**

**1 hour 15 minutes**

Additional Materials: Answer Paper

Authorised Tamil-Tamil dictionaries may be taken into the examination room.

<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

**1.** இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

**2.** முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

**3.** அகராதியைப் பயன்படுத்துதல்:

அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம்.

ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

இ) நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

**4.** ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

**5.** பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

முதல் பகுதியின் 4 கட்டுரைத் தலைப்புகள் பக்கம் 2-இல் அச்சிடப்பட்டுள்ளன.

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக. (35 மதிப்பெண்கள்)**

1. 'எதிலும் எதிர்மறையான சிந்தனை கொண்ட மனிதரைவிடப் பாதகமானது வேறொன்றும் இருக்க முடியாது' – மார்க் டுவைன். கருத்துரைக்க.

2. மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க இளையர்கள் அதிகமானோர் ஆர்வத்துடன் முன்வர வேண்டும். கருத்துரைக்க.

3. 'வாய்மையே வெல்லும்'- இக்கூற்று எக்காலத்திற்கும் பொருந்துமா? ஆராய்க.

4. பின்வரும் தகவல்களைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.




(முற்றும்)

EUNOIA JUNIOR COLLEGE
JC2 Preliminary Examination 2018
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம் 9574/01

தாள் 1, பகுதி 2

**18 September 2018**

**1 hour**

Additional Materials: Answer Paper

<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி 2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2. பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப்படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

4. அகராதியைப் பயன்படுத்துதல் :

   அ. பகுதி 1-க்கு விடையளிக்கும் போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப்பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள் மட்டுமே.

   ஆ. பகுதி 2-க்கு விடையளிக்கும் போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

**"அ" பிரிவு**

**A1 <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> (5 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

மனிதன் தன் வாழ்வுக்கு உதவியாக என்னென்னவோ தேடி அலைகிறான். இவற்றால் எல்லாம் அவன் ஒரு நாளும் அமைதி அடைவதே இல்லை. ஆனால், Q1________________________ கருத்துள்ள நட்பை பெற்றால் அமைதி அடைகிறான். கருத்தொத்த நண்பர்கள் உலகில் கிடைப்பது அரிதாகவே உள்ளது. ஆகையால் அத்தகைய நல்ல நண்பர்களோடு அடிக்கடிப் பழகி Q2____________________ முடியாமல் போய்விடுகிறது. இந்தத் தொல்லை சாதாரண மனிதனுக்கு இருப்பதைவிட சிறந்த அறிஞனுக்கு மிகுதியாக உள்ளது.

அறிஞன் பலதுறை கருத்துகள் நிரம்பி வாழ்வதால் ஒத்த கருத்துடைய நட்பு இல்லாத போது மிக மிக Q3________________________ போகிறான். அத்தகைய நல்லவர்கள் நட்பைப் பற்றித் திருவள்ளுவர் தம் குறளில் குறிப்பிடுகிறார். அவர்களின் தொடர்பு பழகப் பழக இன்பம் பயக்கும் என்று அவர் எடுத்துரைக்கிறார்.

பண்புடையார் நட்பு உலகில் கிடைப்பதற்கு அரிது. கிடைத்தாலும் அவருடன் Q4____________________ பழகி வாழும் வாழ்க்கை அமைவது அதைவிட அரிது. இவர்களின் தொடர்பு நிலையாமை உடையது. ஆனால், எவ்வளவு சிறந்த பண்புடையவர்களாக இருந்தபோதும் அவர்களிடம் சிறு குறை ஏதேனும் இருக்க Q5______________________. குறையே இல்லாதவர்களை எங்கும் காண முடியாது. ஆகையால், நண்பர்களிடம் காணும் சிறுசிறு குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களுடன் இணக்கமாக வாழ்வதே அறிவுடைமையாகும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

## “ஆ” பிரிவு

**B2** **<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>** (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

‘ஒரே சிங்கப்பூர் மக்கள்’ என்பது குறித்து அண்மையில் சமூக மன்றங்களில் கலந்து ஆலோசிக்கப்பட்டது. சமுதாயம் ஒற்றுமையுடன் திகழவும் நாட்டு மக்கள் ஓர் அணியாகத் திரளவும் வேண்டும். தங்கள் இனத்தைத் தாண்டி ஒவ்வொருவரும் பிற இனத்தவருடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியம் என்று அமைச்சர் அறைகூவல் விடுத்தார். நல்ல சிங்கப்பூரர்கள் உருவாவதற்குச் சமூகத் தலைவர்களுக்கு மட்டுமல்லாது, அடித்தளத் தலைவர்களுக்கும் பெரும்பங்கு உண்டு என்று அப்போது அவர் கூறினார்.

பல்வேறு இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வினை இளம்வயதிலேயே மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்களின் பெற்றோரும் பெரும் உந்துசக்தியாகத் திகழ்வது அவசியமாகும். பள்ளிகளில் நடத்தப்பெறும் இன நல்லிணக்க நாள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுவதோடு நின்றுவிடக்கூடாது; அக்கொண்டாட்டத்தின் நோக்கம் மாணவர்கள் மனத்தில் நிலைபெறுவதுதான் முக்கியம் என்றார் அமைச்சர். மாணவர்களே நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து, நிகழ்ச்சியை வழிநடத்தும்போது குறிக்கோள் நிறைவேறுவது திண்ணம் என்றும் அவர் அறிவுறுத்தினார். இனங்களுக்கிடையே அமைதியும் நல்லிணக்கமும் உண்டாவதற்கு மாணவப் பருவம் முக்கியப் பங்காற்றவல்லது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

சிங்கப்பூரர்கள் கடின உழைப்பாளிகள். ஆனால், வீடு, வேலை என்று இருக்கும் அதே வேளையில் சமூக மன்ற நடவடிக்கைகளில் பலரும் அதிக ஈடுபாடு கொண்டிருக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இத்தகைய போக்கு பிற இனத்தவருடன் நெருங்கிப் பழகாத தன்மையை ஏற்படுத்தி விடுகிறது. வீரதீரச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் இளையர் குழுக்களிலும் பல இனத்தவர்கள் இடம்பெறாமையும் பொருத்தமாக இல்லை. இணையப் பயன்பாடு போன்ற தொழில்நுட்பச் சாதனங்களால் இன்றைய சந்ததியினர் ஆட்டிப்படைக்கப்படுகின்றனர். இதனால் குறுகிய வட்டத்திற்குள் இருந்து, பிற இன நட்பு வட்டத்தைக் குறைத்துக் கொள்கின்றனர். இத்தகைய நிலை மாற வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

அன்பும் அரவணைப்பும் நாட்டு மக்களிடையே நிலைபெற்றிருக்கும்போது, இனங்களிடையே வெறுப்புணர்வு தோன்றாது. சுமூகநிலையே தவழும்; நாட்டில் விரோத மனப்பான்மைக்கு வேலையே இல்லை. இனங்களைப் பிளவுபடுத்தக்கூடிய சமூக விரோத சக்திகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டால், நாட்டு மக்கள் எவ்வித மன சஞ்சலமுமின்றி நல்வாழ்வு வாழ முடியும். அதோடு, நாட்டின் வளத்திற்கு அனைவரும் தத்தமது பங்களிப்பை நல்கவும் இயலும். நம் நாட்டில் இன நல்லுறவு வலுப்பெறுவதற்குச் சீன, இந்திய, மலாய் மரபுடைமைச்சங்கங்கள் தத்தமது பண்பாட்டு நல்லியல்புகளையும், மரபுகளையும் எடுத்துக்கூறிப் பார்வையாளர்களைக் கவர்கின்றன. பண்டிகைக் காலங்களில் குறிப்பிட்ட வட்டாரங்களைக் கலாச்சார அடிப்படையில் அலங்கரித்தும் பண்பாட்டை விளக்கும் கலைநிகழ்ச்சிகளை நடத்தியும் வருகின்றன. இதனால் மக்களிடையே கலாச்சார விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. இச்சங்கங்களின் இந்த முயற்சிகள் இன வேறுபாடுகளைப் போக்கி எதிர்காலத்தில் இன நல்லிணக்கம் மிகுந்த சமூகத்தை நிச்சயம் உருவாக்கும்

**வினாக்கள்** (24 மதிப்பெண்கள்)

Q6 எத்தகைய சமூகப் பிணைப்பு ஏற்பட வேண்டும்? ஏன்? (6 மதிப்பெண்கள்)

Q7 இன ஒற்றுமை உணர்வு மேலோங்க மாணவர்கள் செய்ய வேண்டியவை யாவை? (6 மதிப்பெண்கள்)

Q8 ‘இத்தகைய நிலை மாற வேண்டும்’ என்னும் வாக்கியத்தில் ‘இத்தகைய நிலை’ என்பது எவற்றைக் குறிக்கின்றன? (6 மதிப்பெண்கள்)

Q9 மரபுடைமைச் சங்கங்களினால் ஏற்படும் நன்மைகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

Q10 **<u>சொற்பொருள்</u>** (6 மதிப்பெண்கள்)

அடியில் தரப்பட்டுள்ள சொற்கள் மேற்காணும் கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவை பகுதியில் தரும் பொருளினை எழுதுக.

அ) விமரிசையாக

ஆ) சஞ்சலமுமின்றி

இ) வலுப்பெறுவதற்கு

(முற்றும்)

**JC2 PROMO EXAMINATION 2018**

**உயர்தரம் 2, தாள் 1 பகுதி 2**

**விடைக்குறிப்பு**

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 மதிப்பெண்கள்)**

Q1 ஒத்த

Q2 இன்புற

Q3 நொந்து

Q4 ஒருங்கே

Q5 வாய்ப்புண்டு

**B2 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

Q6 எத்தகைய சமூகப் பிணைப்பு ஏற்பட வேண்டும்? ஏன்?
தங்கள் இனத்தைத் தாண்டி ஒவ்வொருவரும் பிற இனத்தவருடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் சமூகப் பிணைப்பு ஏற்பட வேண்டும். அப்போதுதான் - சமுதாயம் ஒற்றுமையுடன் திகழவும் நாட்டு மக்கள் ஓர் அணியாகத் திரளவும் முடியும்.

Q7 இன ஒற்றுமை உணர்வு மேலோங்க மாணவர்கள் செய்ய வேண்டியவை யாவை?
பல்வேறு இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வினை இளவயதிலேயே மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்களே இன நல்லிணக்க நாள் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து, நிகழ்ச்சியை வழிநடத்தும்போது குறிக்கோள் நிறைவேறுவது திண்ணம்.

Q8 ‘இத்தகைய நிலை மாற வேண்டும்’ என்னும் வாக்கியத்தில் ‘இத்தகைய நிலை’ என்பது எவற்றைக் குறிக்கின்றன?
சமூக மன்ற நடவடிக்கைகளில் பலரும் அதிக ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. வீரதீரச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் இளையர் குழுக்களிலும் பல இனத்தவர்கள் இடம்பெறாமை. இணையப் பயன்பாடு போன்ற தொழில்நுட்பச் சாதனங்களால் இன்றைய சந்ததியினர் ஆட்டிப் படைக்கப்படுவது.

Q9 மரபுடைமைச் சங்கங்களினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
நம் நாட்டில் இன நல்லுறவு வலுப்பெறுகிறது. மக்கள் தத்தமது பண்பாட்டு நல்லியல்புகளையும், மரபுகளையும் அறிகின்றனர். மக்களிடையே கலாச்சார விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது.

**Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)**

அ சிறப்பாக

ஆ குழப்பமுமின்றி

இ பலப்படுவதற்கு

முற்றும்

EUNOIA JUNIOR COLLEGE
JC2 Preliminary Examination 2018
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்

**9574/03**

தாள் 3

**21 September 2018**

**3 hours**

Additional Materials: Answer Paper

Set texts may be taken into the examination room. They may bear underlining or highlighting. Any kind of folding or flagging of pages in text (e.g. use of post-its, tape flags or paper clips) is not permitted.

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.
2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3. மொத்தம் **நான்கு வினாக்களுக்கு** விடையெழுத வேண்டும்.
4. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவிற்கு விடையெழுத வேண்டும்.
5. ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
6. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

## <u>'அ' பிரிவு</u>

**<u>கவிதை</u>** **(25 மதிப்பெண்கள்)**

Q1. அ. 'அன்புடைமை' அதிகாரத்தில் வள்ளுவர் முன் வைத்துள்ள கருத்துகள் இக்காலத்துக்குப் பொருந்துமா? கருத்துரைக்க.

(12 மதிப்பெண்கள்)

ஆ. 'இயற்கை இன்பம்' என்னும் கவிதையில் விரவி நிற்கும் கற்பனை அழகையும் இலக்கிய நயத்தையும் விவரிக்க. (13 மதிப்பெண்கள்)

Q2. 'மரம்' என்ற கவிதையின் இலக்கிய நயத்தைப் பாராட்டுக.

## <u>'ஆ' பிரிவு</u>

**<u>சிறுகதை</u>** **(25 மதிப்பெண்கள்)**

Q3. அ. 'விடியுமா' என்ற தலைப்பு இக்கதைக்கு எவ்வாறு பொருந்துகிறது?

(12 மதிப்பெண்கள்)

ஆ. 'நாடோடிகள்' என்னும் கதை சிறுகதைக்குரிய இயல்புகளைப் பின்பற்றி அமைந்துள்ளது – ஆராய்க. (13 மதிப்பெண்கள்)

Q4. 'A126629001' என்னும் கதையில் சத்தியமூர்த்தியின் மனசாட்சியை அவரின் சமூகவியல் பார்வை கொன்றுவிட்டது என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவுக.



(அடுத்த பக்கம் பார்க்க)

## ‘இ’ பிரிவு

**நாவல்** **(25 மதிப்பெண்கள்)**

Q5. இன்றைய சமுதாயத்தில் காதல் வாழ்க்கையில் ஈடுபடும் இளைஞர்களுக்கு முருகன் ராதா வாழ்க்கை ஒரு நல்ல படிப்பினையாக அமைந்துள்ளது. கருத்துரைக்க.

Q6. ‘சூழ்நிலைகள் மனிதர்களின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றிப் போட்டு விடுகின்றன’ – ‘பால்மரக்காட்டினிலே’ நாவலைக் கொண்டு விளக்குக.

## ‘ஈ’ பிரிவு

**நாடகம்** **(25 மதிப்பெண்கள்)**

Q7. ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ என்ற நாடகத்தில் செல்வியின் காதலான சுந்தரலிங்கமும் முறை மாப்பிள்ளையான மகாதேவனும் ஏதோ ஒரு வகையில் போற்றத்தக்கவர்களே என்று சொல்வது எவ்வகையில் பொருந்தும்?

Q8. ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’, ‘காதல் என்ன விலை?’ ஆகிய இரண்டு நாடகங்களிலும் பெற்றோர்கள் திருமணம் என்ற உறவை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை ஆராய்க.

(முற்றும்)

**Jurong Junior College**

**JC2 Preliminary Examination 2018**

**தமிழ் மொழி, இலக்கியம்** **9574 / 1**

தாள் 1 (பகுதி 1) (Part 1)

**H2 TAMIL LANGUAGE AND LITERATURE**

Paper 1 (Part 1)

27 August 2018

**2 hours 15 minutes**

(Total Time for Part 1 and Part 2)

**<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>**

1 இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2 பகுதி 1, 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப் புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

4 அகராதியைப் பயன்படுத்துதல்:

(அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம்.அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.

(ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

பெயர்:__________________ வகுப்பு: ____________________

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை வரைக.** (35 மதிப்பெண்கள்)

Q1 நாட்டு முன்னேற்றத்தில் இளையர்களின் பங்கு மிக அவசியம் - ஆராய்க

Q2 இன்றைய உலகம் பேரழிவை நோக்கிச் செல்கிறது என்பதற்கான காரணங்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் பற்றி விளக்கி எழுதுக.

Q3 ‘மனித நேயத்தோடு வாழ்ந்து பார், மனிதப் பிறவியின் அருமை புரியும்’ – கருத்துரைக்க.

Q4 பின்வரும் சூழலைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.




முற்றும்

**Jurong Junior College**

**JC2 Preliminary Examination 2018**

**தமிழ் மொழி,இலக்கியம்** **9574 / 1**

தாள் 1 (பகுதி 2) (Part 2)

**H2 TAMIL LANGUAGE AND LITERATURE**

Paper 1 (Part 2)

27 August 2018

**2 hours 15 minutes**

(Total Time for Part 1 and Part 2)

**<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>**

1 இரண்டாம் பகுதிக்கு விடை அளிக்க கொடுக்கப்பட்டுள்ள நேரம் **1 மணி** மட்டுமே.

2 முதல் பகுதியின் முகப்பு அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்.

பெயர்:__________________ வகுப்பு: _____________

## அ 'பிரிவு

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** ( 5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் உள்ள கோடிட்ட இடங்களை மிகப்பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

இவ்வுலகின் வளர்ச்சிபெற்ற சமூகங்கள் அனைத்தும் அறிவு என்ற அஸ்திவாரத்தின் மீதே எழுச்சி என்ற கட்டிடத்தை எழுப்பியுள்ளன. இங்கே அறிவுக்கு Q1____________ இருப்பது புத்தக வாசிப்பாகும். வாசிப்புக் குறையும் போது அறிவு குறைந்து, நம்மை Q2____________ அழிவு நெருங்குகிறது என்பதை நாம் உணர்தல் அவசியமாகும். பண்டைய காலத்திலும்கூட வாசிப்பு என்பது அறிவுத் தேடலாகவே இருந்திருக்கிறது. புத்தக வாசிப்பு என்பது தேடலாக இருந்தாலும் இன்றைய தகவல் தொழில் நுட்ப உலகில் அப்பழக்கம் நம்மிடம் குறைந்துகொண்டே வருகிறது. வாசிப்பு மனித வாழ்வின் ஆயுட்காலத்தை Q3____________ அதிகரிக்கச் செய்கிறது.

வாசிப்பு என்பது அறிவுக்கும் ஆன்மாவிற்கும் விருந்தாகவும் உள்ளத்திற்கு இன்பம் தரும் பொழுதுபோக்காவும் அமைகின்றது. ஆழான வாசிப்பு, காலங்கள் மற்றும் இடங்களுக்கிடையேயான Q4____________ நீக்கிவிடுகிறது. ஒரு நல்ல வாசகன் எங்கிருந்தாலும் எங்கு சென்றாலும் அங்குள்ள மக்களுடன் இரண்டறக் கலந்து உயிரோட்டத்துடன் பழுகுவான். அதுமட்டுமல்லாது அவனைக் குறுகிய உலக வாழ்வில் இருந்து Q5____________ சிந்தனை கொண்ட பரந்த உலகிற்குக் கொண்டு செல்லும். எனவே புத்தக வாசிப்பை நேசிப்போம். நம் ஆயுட்காலத்தை அதிகரிப்போம்.

## '**ஆ**'பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

. எந்தவொரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை காரணமாக விளங்குவன அங்குள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களே ஆகும். அவை அனைத்தையும் தாங்கிப் பிடித்து உயிர் கொடுப்பது, அந்நாட்டின் பாரம்பரிய பண்பாட்டு நெறிகளாகும். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஒருவரது கலாசாரத்தில் இருக்கின்ற வேறுபட்ட பழக்கவழக்கங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் பல நிலைகளில் அவை சிறப்பிக்கப்படுகின்றன. தாயின் வயிற்றுக்குள் கருவாக உருவானது முதல் கடைசி வரைக்கும் ஒவ்வொரு கால கட்டத்திலும் பல விதமான வழிபாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நம்மை வாழ்வின் அடுத்த கட்டத்துக்குத் தயார் செய்யும் வகையில் அமைந்துள்ளன.

அவ்வகையில் தமிழர்களின் வாழ்க்கை முறை **தொண்மையையும்** நீண்ட நெடிய பாரம்பரிய வரலாற்றையும் பல்வேறு சிறப்புக்களையும் பெற்றதாகும். குடும்பம் மற்றும் சமூக அமைப்பு முறைகள் தனித் தன்மைகளைப் பெற்றுள்ளன. அதற்குக் காரணம் அவை அனைத்தும் பல ஆண்டுகளாக, உலகின் பண்பாட்டு வளர்ச்சியில் பழமையும் பெருமையும் கொண்டு விளங்கியதே ஆகும். இவை யாவும் தமிழர்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் நமது கலாச்சாரத்தின் தாக்கத்தையே வெளிபபடுத்துகின்றன. குடும்பம் என்பது சமூகம் மற்றும் கலாச்சாரத்துக்கு மட்டுமின்றி பொருளாதாரத்துக்கும் அடிப்படை அங்கமாக அமைந்துள்ளது. வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் மனித வாழ்க்கை குடும்பதைச் சுற்றியே அமைகிறது. குடும்பத்தின் ஆதாரமாக தாய், தந்தை,மனைவி, கணவன், குழந்தைகள், தாத்தா, பாட்டி உள்ளிட்ட பல உறவுகள் இருக்கின்றன. இந்த உறவுகள் அனைத்துமே ஒழுக்க நெறிகளையும் அறநெறிப் பண்புகளையும் ஆதாரமாகக் கொண்டவை. அன்பு, பாசம், தியாகம், அர்ப்பணிப்பு, கடமையுணர்வு என்பதெல்லாம் அதன் வெளிப்பாடுகள். உறவுகளைப் பேணிப் பாதுகாக்கப்பதற்குப் பலவிதமான விழாக்கள், மற்றும் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன. எனவே நம்மை எல்லாவிதத்திலும் வாழ வைத்துக்கொண்டிருப்பது நமது கலாச்சார **அடித்தளங்கள்** என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

இன்றைய நவீன வாழ்க்கையில் போலித்தனம் மிகுந்துவிட்டது. இல்லாததை இருப்பதுபோலக் காட்டுவதே ஒரு நாகரிகமாக வளர்ந்துவிட்டது. வாழ்க்கையில் மனிதன் வெற்றி பெற விரும்புவதில் தவறில்லை அதற்கு நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமே தவிர போலித்தனமான, தவறான **அணுகுமுறைகளை** பின்பற்றக்கூடாது.போலித்தனம் என்பது ஏமாற்றுகின்ற முயற்சியின் வெளிப்பாடேயாகும். ஒரு பொருள் அமோகமாக விற்பனை ஆகிறது என்றால்,அது எந்தப் பெயரில் விற்பனை ஆகிறதோ, அதே பெயரில் போலிகள் வரத்தொடங்கிவிடுகின்றன. உடனே அந்தப் பொருளை உற்பத்தி செய்கின்ற நிறுவனத்தார் போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள் என்று விளம்பரம் கொடுக்கிறார்கள். **'உண்மையற்ற ஒன்றை நம்ப வைப்பதில் சிலர் திறமைசாலிகளாக இருக்கிறார்கள் '** என்பதை நாம் உணரத் தவறுகிறோம். ஆனால் நம்முடைய உறவு முறைகளில் போலித்தனம் வெற்றிபெறுவதில்லை. நாம் நாமாக இருப்பதில்தான் நமக்குப் பெருமை. பொய்யான வாழ்க்கை வாழ்கின்றபோது ஒரு பொய்யை மறைப்பதற்குப் பல பொய்களைச் சொல்ல வேண்டியிருக்கும்.எப்போது எந்தப் பொய் நம்மைக் காட்டிக்கொடுக்கும் என்று தெரியாது. எல்லா நேரத்திலும் எப்போதும் எச்சரிக்கையுடனும் அச்சத்துடனும் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும். சிந்தித்துப் பார்த்தால் போலித்தனமாக வாழ வேண்டிய அவசியமே இல்லை. நாம் எப்படி இருக்கிறோமோ அந்த நிலையில் உறவுகளுடன் இணைந்திருந்தால் அதுவே உறவை மேலும் பலப்படுத்தும். நாம் இருக்கின்றபடி நம்மை ஏற்றுக்கொண்டு நம்மிடம் உறவு கொள்கின்றவர்களே நல்ல உறவினர்களாக இருப்பார்கள். அவர்களே நிலைத்து நீடிக்கக் கூடியவர்கள். பலத்தையும் பலவீனத்தையும் தெரிந்கொண்ட பிறகு ஏற்படுகின்ற உறவுகளே இயற்கையான உறவுகளாகும். அவையே இனிய உறவுகளாகவும் அமையும்.

## வினாக்கள்

Q6 பண்பாடு தொடர்பானவை அனைத்தும் நம்மை வாழ்க்கையின் மற்றொரு நிலைக்குக் கொண்டு செல்கின்றன என்று ஏன் கூறப்படுகின்றது? (6 மதிப்பெண்கள்)

Q7 தமிழர்களின் வாழ்க்கையில் குடும்பம் என்பதே அடிப்படையான ஒன்று என்று சொல்லப்படுவதற்குரிய காரணங்கள் யாவை? (6 மதிப்பெண்கள்)

Q8 **‘உண்மையற்ற ஒன்றை நம்ப வைப்பதில் சிலர் திறமைசாலிகளாக இருக்கிறார்கள்’** என்ற தொடர் உணர்த்தும் கருத்து என்ன? ஏன்?
(6 மதிப்பெண்கள்)

Q9 உறவுகள் என்றும் நிலைத்திருக்க அவை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?
(6 மதிப்பெண்கள்)

Q10 சொற்பொருள்

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக. (6 மதிப்பெண்கள்)

அ) தொண்மையையும்

ஆ) அடித்தளங்கள்

இ) அணுகுமுறைகளை

முற்றும்

**Jurong Junior College**

**JC2 Preliminary Examination 2018**

**தமிழ் மொழி, இலக்கியம்** **9574/2**

தாள் 2

**H2 TAMIL LANGUAGE AND LITERATURE** 27 August 2018

Paper 2

**1 hour**

**<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>**

1 இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

2 கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

3 தேர்வாளர் கூறியதும் ‘ START ’ என்பதைக் கிளிக் செய்து தேர்வைத் தொடங்கவும்.

பெயர்:__________________ வகுப்பு: ______________

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

**பனுவல் ஒன்று**

சுற்றுச்சூழல்

இயற்கை – இது நமக்குக் கிடைத்த வரம், அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரம் என்று கூடச் சொல்லலாம். இயற்கைக்கு மனிதனைப் போன்று சுயநலமில்லை. அனைத்திலும் பொதுநலம் பார்க்கும் இயற்கையானது நமக்குத் தூய காற்றையும், நீரையும் வழங்குவதோடு உணவு, உடை, உறைவிடத்திற்குத் தேவையான அத்தனை மூலப்பொருட்களையும் வழங்கி, நம்மை வாழ்விக்கிறது. இவ்வாறு நமக்கு உதவி வரும் இயற்கையை நாம் பாதுகாக்கத் தவறுகிறோம். இயற்கை அழிக்கப்பட்டும், சுற்றுச்சூழல் நாளுக்கு நாள் பாதிப்படைந்தும் வருவதால் பாதிக்கப்படுபவர்கள் நம்மைச் சார்ந்தவர்களும், எதிர்காலச் சந்ததியினருமே என்பதை ஒரு போதும் நாம் மறக்கக்கூடாது. இன்று இயற்கை வளங்கள் சுற்றுச் சூழலைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி பூமி வெப்பமடைந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் பசுமை நிலங்கள் பாலைவனமாதல், உலக வெப்பநிலை மாற்றம், ஓசோன் படலம் பாதிப்பு, உயிர்களின் அழிவு போன்றவை மனிதர்களுக்குப் பெரும் சோதனைகளை ஏற்படுத்திச் சிறிது சிறிதாக நம்மை நெருக்கடிக்குள்ளாக்கி வருகின்றன.

அதைக் காப்பது நம் கடமை என்பதை உணர்ந்த கல்வி நிறுவனங்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயற்கையின் அவசியத்தை உணர்த்தும் சுற்றுச்சூழல் தொடர்பான நடவடிக்கைகளை நடத்தி வருகின்றன. தற்போது கணினியும், ஆடம்பரத்திற்குத் தேவையான பிற கருவிகளும் பெருகி வருகிறது. இவற்றைப் பயன்படுத்தும் போது சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்பதைப் பலரும் இன்று உணரத் தொடங்கினால் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும்.

இயற்கைக்கு மாறாக அதிகரித்து வரும் நகரமயமாதல், தொழில்மயமாதல், மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்களால் மாசுபட்ட நீர் நிலைகள், வறண்ட நீர் நிலைகள் என இயற்கை வளங்கள் குறைந்து வருகின்றன. மரங்கள் பெருமளவில் வெட்டப்படுவதால் கூடுகட்டி வாழும் பறவையினங்கள், நிழலில் ஒதுங்கும் விலங்கினங்கள் தங்க இடமின்றி அழிந்து போகின்றன. மரங்களின் எண்ணிக்கையும் குறைந்ததால் வெப்பம் அதிகரித்து உயிரினங்கள் அழிவைச் சந்தித்து வருகின்றன. இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டதால் இன்று அளவுக்கு அதிகமான வெப்பத்தை உணருகிறோம். இயற்கை வளங்கள், மனிதன் உயிர் வாழப் பல அற்புதங்களை நமக்கு அளித்து வருகின்றன. நாம் சுவாசிக்கும் காற்றிலிருந்து நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களையும் இயற்கை தருகிறது. ஆனால் அதைப் பாதுகாப்பது நம் கடமை என்பதை நாம் உணரத் தவறுகிறோம்.

**பனுவல் இரண்டு** **வலைப்பூ**

<table>
<tr><td colspan="5">கருத்துக்களம்</td></tr>
<tr><td>என்னைப்<br>பற்றி</td><td>என்னோடு<br>தொடர்புகொள்ள</td><td>என் படைப்புகள்</td><td>என் நண்பர்கள்</td><td>ஆவணங்கள்<br>• 2016<br>• 2017<br>• 2018</td></tr>
<tr><td colspan="5">22 ஏப்ரல் 2018</td></tr>
</table>

**உங்கள் கருத்து...**

ஐம்பூதங்கள் எனப்படும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்றவை, உலக உயிர்கள் நிலைத்தும், நீடித்தும் வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கித் தருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், அதற்குப் பிறகு நடந்த உலகப் போர்கள், தொழிற்புரட்சி, பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், உலக நாடுகளை மிகவும் கவலை அடையச் செய்துள்ளன. இதனால் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுகட்ட காடுகள், இயற்கை வளங்கள், நீர், நிலம், காற்று என்று ஒன்றையும் விடாமல் அழித்துவிட்டனர். உலகளாவிய இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப் பல நாடுகளும் ஒன்று சேர்ந்தன.

இயற்கையை அழிக்காமல் பாதுகாக்க ஆய்வுகள் மேற்கொண்டு தீர்வு காண எண்ணிய ஐக்கிய நாடுகளின் சபை ஆயிரத்து தொண்ணூற்று இரண்டில் சுற்றுச்சூழல் வளர்ச்சி மாநாட்டை நடத்தி, அம்மாநாட்டில் உலக நாடுகள் அனைத்தையும் கலந்து கொள்ளச் செய்தது. இதில் சுற்றுச்சூழல் கல்வியை, எல்லா நிலைகளிலும் கொண்டுவர வேண்டும் என்று உறுதி எடுக்கப்பட்டது. இதற்கு “அஜெண்டா-21” (Agenda – 21) என்று பெயரிடப்பட்டது. இதன் மூலம் இயற்கையைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பொது விழிப்புணர்வுப் பயிற்சி போன்றவை சுற்றுச் சூழலை மேம்படுத்தும் நோக்கத்தில் நடத்தப்பட்டன.

நேற்றைய இயற்கை அழிவிலிருந்து உலகினை மீட்டெடுக்கவும், இன்றைய இயற்கை அழிவிலிருந்து உலகைப் பாதுகாக்கவும், நாளைய அல்லது எதிர்கால உலகில், இயற்கை வளங்களினால் மனித சமூகத்துக்குக் கிடைக்கும் நன்மைகளில் பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் சமாளிக்கவும், ஆக்கப்பூர்வமான சுற்றுச்சூழல் கல்வி தேவைப்படுகிறது. இக்கல்வியின் மூலம், இருக்கும் வளங்களைக் கொண்டு, முன்னேற்றத்திற்கான வழிவகைகளைச் சிந்திப்பதும், அவற்றைச் செயல்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இயற்கையைப் பேணிக் காப்பதோடு கற்பித்தல் -கற்றல் என்ற இரண்டு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படும்போது முழுமையான பலனைப் பெற முடியும். மக்களின் வாழ்வும், தாழ்வும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளதை நம் பண்டைத் தமிழர்கள் உணர்ந்து இருந்ததை நாமும் உணர்ந்து நம்மால் முடிந்த அளவு சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம். இயற்கையைப் போற்றுவோம்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**வினாக்கள்**

Q1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று)

(4 மதிப்பெண்கள்)

அதைக் காப்பது நம் கடமை என்பதை உணர்ந்த கல்வி நிறுவனங்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயற்கையின் அவசியத்தை உணர்த்தும் சுற்றுச்சூழல் தொடர்பான நடவடிக்கைகளை நடத்தி வருகிறது

அ) சுட்டுப்பெயர்

ஆ) எழுவாய்

Q2 இயற்கையைப் பாதுகாக்காததால் மனிதனுக்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன? (பனுவல் ஒன்று)

(5 மதிப்பென்கள்)

Q3 கருத்துகள் அடிப்படையில் பனுவல் ஒன்று பனுவல் இரண்டிலிருந்து எவ்வாறு வேறுபட்டு இருக்கிறது?

(6 மதிப்பெண்கள்)

Q4 இயற்கையைப் பாதுகாப்போம் என்பது தொடர்பாக வலைப்பூவில் கூறப்பட்டுள்ள கருத்துகள் போதுமானவையா என்பது குறித்த உமது கருத்துகளை 140 சொற்களில் எழுது.

(15 மதிப்பெண்கள்)

**Jurong Junior College**

**JC2 Preliminary Examination 2018**

**தமிழ் மொழி,இலக்கியம்** **9574 / 3**

தாள் 3

**H2 TAMIL LANGUAGE AND LITERATURE**

Paper 3

11 September 2018

**3 hours**

**<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் வகுப்பையும் தெளிவாகவும் சரியாகவும் எழுதவேண்டும்.

பெயர்:__________________ வகுப்பு: ______________

<u>முக்கியக் குறிப்புகள்</u>

**ஒவ்வொரு பிரிவிலிருந்தும் <u>ஒரு</u> வினாவிற்கு விடையெழுத வேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.**

## <u>'அ' பிரிவு</u>

### <u>நாவல்</u>

Q1 'பால் மரக்காட்டினிலே ' என்னும் நாவல்வழி ஆசிரியர் அகிலன் கூற விரும்பும் சமூகக் கருத்துகள் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன – ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

Q2 'பால் மரக்காட்டினிலே' என்னும் நாவல் இன்றைய இளையர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய பல விழுமியங்களை வெளிப்படுத்துகிறது என்பதை நாவல் வழி நின்று விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

## <u>'ஆ' பிரிவு</u>

### <u>சிறுகதை</u>

Q3 ஒரு சிறுகதையைப் படிக்கும் போது அடுத்து என்ன நிகழும் என்ற எதிர்பார்ப்பைத் தருவதாகவும், கதை முழுவதும் படிப்பவரின் கவனத்தை ஈர்ப்பதாகவும் இருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள சிறுகதை 'விடியுமா' – கருத்துரைக்க.

(25 மதிப்பெண்கள்)

Q4 சிறுகதையில் படைக்கப்பட்டிருக்கும் தலைமை மாந்தர் சமுதாயத்திற்கு நல்ல படிப்பினைகளைக் கற்றுத் தருபவராக இருக்கவேண்டும் என்பதை 'ஆயிஷா'என்ற சிறுகதை வழிநின்று விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

## 'இ' பிரிவு

**நாடகம்**

Q5 "அறியாமையினாலே தவறு செய்ய இருந்தேன். ஆனா சூழ்நிலை அதைத் தடுத்துடுச்சி " என்று கோபால்சாமி கூறுவதற்கான காரணங்களைச் 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' என்ற நாடகம் வழிநின்று விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

Q6 திருமணம் என்பது இன்று விலை பேசக்கூடிய ஒன்றாக உள்ளது என்பதைக் 'காதல் என்ன விலை?' என்ற நாடகத்தின் வழி நின்று விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

## 'ஈ' பிரிவு

**கவிதை**

Q7

அ) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்ககாலக் கவிதை உணர்த்தும் வாழ்க்கை பற்றிய உண்மைகளைக் கணியன் பூங்குன்றனார் விளக்கியிருக்கும் பாங்கினை விளக்குக.

(12 மதிப்பெண்கள்)

ஆ) துன்பத்தைத் தாங்கிய உள்ளத்திற்கு அமைதி தருவது அந்திப் பொழுது என்பதைக் கவிஞர் 'சாந்தி தரும் அந்தி ' என்ற கவிதையில் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை விளக்குக.

(13 மதிப்பெண்கள்)

Q8 தமிழின் பெருமைகளைப் பேசும் பாரதியாரின் 'தமிழ்' என்ற கவிதை வழி அறியலாகும் அவரின் தமிழ்ப் பற்றையும் அதை அவர் வெளிப்படுத்தியிருக்கும் விதம் பற்றியும் விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

முற்றும்

| | |
|---|---|
| | National Junior College<br><br>Preliminary Exam – H2 –Tamil –JC2 |
| உயர்தரம் 2 தமிழ் மொழி, **இலக்கியம்**<br>தாள் 1 (பகுதி1)<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 1 (Part 1)<br><br>Additional materials provided: Writing papers | **A**<br>**9574/1**<br>**29 August 2018**<br>Wednesday<br>Duration: 2.15hrs<br>(For Part 1 & 2) |

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ள. இவ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு 2.15 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

2 முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 அகராதியைப் பயன்படுத்துதல்:

**அ** முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம்.

**ஆ** இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

**இ** நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

4 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

5 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 2-இல் அச்சிடப்பட்டுள்ளன

## <u>உயர்தரம் 2</u>
## <u>தமிழ்மொழி, இலக்கியம்</u>
## <u>தாள் 1 (பகுதி 1)</u>

1. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக.

(35 மதிப்பெண்கள்)

Q1. "தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மனிதனை இன்று சோம்பேறியாக்கிவிட்டன" - விவாதிக்க.

Q2. "இக்காலச் சூழலில் மாணவர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரியதொரு சவால் என நீவிர் எதனைக் கருதுகிறீர்? ஏன்? ஆராய்க

Q3. "காரணம் சொல்பவர்கள் காரியம் சாதிப்பதில்லை, காரியம் சாதிப்பவர்கள் காரணம் சொல்வதில்லை" - கருத்துரைக்க

Q4. அடியில் கொடுக்கப்பட்டுள்ள படக்காட்சி உணர்த்தும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.



| | | |
|---|---|---|
| | National Junior College<br><br>Preliminary Exam – H2 –Tamil -JC2 | |
| உயர்தரம் 2 தமிழ் மொழி<br>தாள் 1 (பகுதி2)<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 1 (Part 2)<br><br>Additional materials provided: Writing papers | | **A**<br>**9574/1**<br>**29 August 2018**<br>Wednesday<br>Duration: 2.15hrs<br>(For Part 1 & 2) |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ள. இவ்விரண்டு பகுதிக்கும் விடையளிப்பதற்கு 3 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

2 முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 அகராதியைப் பயன்படுத்துதல்:

**அ** இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

4 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

5 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 4 முதல் 6 வரை அச்சிடப்பட்டுள்ளன

**<u>உயர்தரம் 2</u>**
**<u>தமிழ்மொழி, இலக்கியம்</u>**
**<u>தாள் 1 (பகுதி 2)</u>**

## "அ" பிரிவு

**I** <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> (5 **மதிப்பெண்கள்**)

பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

இருபதாம் நூற்றாண்டு கண்ட தமிழ்ச் சான்றோர்களுள் குறிப்பிடப்பட வேண்டியவர் மு.வரதராசனார். தமிழ் நல்லுலகம் 'மு.வ.' என்று அழைத்து மகிழ்ந்தது. 'மு.வ.' என்ற இரண்டு எழுத்துக்களின் (Q1) ______________ 'முன்னேற்ற வரலாறு' என்பதாகும். அலுவலகக் கணக்கராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர், பேராசிரியர், பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் எனப் படிப்படியாக (Q2) ______________, நிறைவாக மதுரை காமராஜ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பு என்ற சிகரத்தைத் தொட்டார்.

அறுபத்து இரண்டு ஆண்டுகளே வாழ்ந்த மு.வ., தமிழிலும் ஆங்கிலத்திலுமாக 85-க்கு மேற்பட்ட அரிய நூல்கலைப் (Q3) ______________ தந்தார்; திறனாய்வுத் துறையில் மட்டுமன்றி, படைப்பிலக்கியத் துறையிலும் அவர் முத்திரை பதித்தார். சிறுவர் இலக்கியம், சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, மொழியியல், கடித இலக்கியம், பயண இலக்கியம், இலக்கியத் திறனாய்வு என பல்வேறு (Q4) ______________ சார்ந்த நூல்களை எழுதியவர். 'எழுத்துலகில் இவர் தொடாத துறையும் இல்லை; தொட்டுத் துலங்காத துறையும் இல்லை' என்னும் அளவிற்கு மு.வ.வின் படைப்பாற்றல் வெளிப்பட்டது. மாணவர்களை மதித்த பேராசிரியர். பொதுவாக, கல்வியுலகில் (Q5) ______________ மதிக்கப்பெறும் பேராசிரியர்கள் உண்டு; மு.வ. மாணவர்களை மதித்த பேராசிரியர்.

## “ஆ” பிரிவு

**II** <u>சுயவிடைக் கருத்தறிதல் (1)</u> (30 **மதிப்பெண்கள்)**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

தோல்வியின்றி வரலாறு படைக்க இயலுமா? நாம் வரலாற்றைப் படிக்கையில், எல்லா வெற்றிக் கதைகளுமே பெரிய தோல்விகளின் கதைகள் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்வோம். ஒரே வித்தியாசம் என்னவென்றால், ஒவ்வொரு முறை அவர்கள் தோல்வி அடையும் போதும், அவர்கள் மீண்டும் எழுகின்றார்கள். இதைப் பின்னடைவு தரும் தோல்வி என்று சொல்வதை விட முன்னேற்றம் தரும் தோல்வி என்று சொல்லலாம். ஆனால், பலரும் வெற்றியின் தாரக மந்திரம் தோல்விதான் என்பதை உணர்வதும் இல்லை, ஏற்றுக் கொள்வதும் இல்லை. மானிடர்களின் இந்த அறியாமை நீங்கும் காலம் எப்போது வருமோ என்று வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். வெற்றி என்பது நாம் சாதிக்கும் விஷயங்களில் இல்லை; சாதிப்பதிலேயே இருக்கின்றது.

தோல்விக்குப் பயந்து சிலர் எப்போதும் முயற்சி செய்வதே இல்லை. அதே சமயம், அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கவும் விரும்பமாட்டார்கள். சாதிக்க விரும்பும் மனிதன் தோல்விகளைப் பற்றியோ எதிர்ப்புகளைப் பற்றியோ, எதிரிகளைப் பற்றியோ, வறுமையைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டு ஒரே இடத்தில் நின்று காலத்தை வீணாக்கமாட்டான். எப்படி இதை எதிர்கொள்வது என்று செயல்பட ஏற்ற வழி எதுவோ அதைத் தேர்ந்தெடுத்து முடிக்க நடை போட ஆரம்பித்து விடுவான். ‘தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா **வாசல்களும்** திறந்து வரவேற்பு கொடுக்கும்!’ என்கிறார் எமர்சன்.

நாம் சரியான மனப்பாங்கு உள்ளவராக இருந்தால், தோல்வியை ஓர் ஆசிரியராகத்தான் கருதுவோம். ஆசிரியர் என்பவர், நாம் ஒன்றைப் பற்றித் தெள்ளத் தெளிவாகவும், ஆழமாகவும் கற்றுக் கொள்வதற்கு எவ்வாறு துணைபுரிகிறாரோ, அவ்வாறே இந்தத் தோல்வியும் வெற்றி என்னும் **சிகரத்தை** அடைவதற்கான நேர் பாதையை நன்றாகத் தெரிந்து கொள்ளத் துணை புரிகின்றது. தோல்வி அடையும் போது நாம் ஏமாற்றமடையலாம். ஆனால், முயற்சி செய்யாமலேயே இருந்து விட்டால், முற்றிலும் அழிந்துபோக நேரிடலாம். எனவேதான், தோல்வியிலிருந்து ஆதாயமடைவதே வெற்றியின் திறவுகோல் என்றும் கூறுகின்றனர். ஒவ்வொரு தோல்வியும் நமக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஒரு பள்ளிக்கூடம், ஒரு பாடநூல், ஓர் ஆய்வுக்கூடம், ஒரு அனுபவம் என பலவாறு கூறுகின்றனர். அதனால்தான், தோல்வியை ஆசிரியருக்கு ஒப்பிட்டுள்ளேன். தோல்வி என்பது ஒரு சுற்றுப் பாதையே தவிர அதுவே முடிவாகாது. இது ஒரு தாமதமே தவிர பேரிடியில்லை என்பதை முதலில் நாம் மனதில் ஆழமாக பதியச் செய்ய வேண்டும். அப்போதுதான், தோல்வியைக் கண்டு பயப்படாமல் அதனைத் துச்சமாக எண்ணி வெற்றியின் இலக்கை நோக்கிப் பீடுநடை போடுவோம். நாம் பெற்ற அனுபவத்திலிருந்துதான் ஒன்றைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம். எனவே, நாம் செய்த தவறுகளுக்கு அனுபவம் என்ற பெயர் பொருந்தும் என்றால் அது மிகையாகாது.

வெற்றி பெற வேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள், அப்படி விரும்பினால் மட்டும் போதுமா..? எதிர்ப்படும் தோல்வியைப் புறமுதுகு காட்டாமல் எதிர்கொள்ள வேண்டும். ‘தோல்வியைக் கண்டு பயந்துவிடாதே’, என்ற பாடல் வரியை நாம் அடிக்கடி **முணுமுணுத்து**க் கொண்டே இருந்தால், தோல்வி எனும் மூன்றெழுத்தின் பயம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துவிடும். தோல்வி பற்றிய பயம் பல சமயம் தோல்வியை விட மோசமாக இருக்கலாம். ஆனால், நாம் அதனைக் கண்டு ஒரு போதும் துவண்டு விடக்கூடாது. தோல்வியைக் கண்டு துவண்டு போவதால் ஒரு பயனுமில்லை. அதை நேருக்கு நேர் எதிர்கொண்டு, எந்தத் தோல்வியும் என்னைத் தடுத்துவிட முடியாது என்றும் அதை நான் அனுமதித்தால் மட்டுமே என்னை அது முடக்க முடியும் என்று உறுதி கொள்வபர்களே வெற்றியாளர்கள். தோல்விகள் கொடுத்த பாடங்களிலிருந்து புதிய வெற்றிக்கான அடித்தளம் அமைக்க வேண்டும். தோல்வி என்பது நம் வாழ்வில் நடக்கும் ஒரு பயங்கர நிகழ்ச்சியில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தோல்விகள் நம்மைத் துன்புறுத்தும் போது அந்த எண்ணத்தை விரட்டி அடிக்க நாம் முன்பு அடைந்த சிறு சிறு வெற்றிகளை நினைத்து மகிழ்ச்சி கொள்ள வேண்டும்

**வினாக்கள்**

Q6. “வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்” என்று ஆசிரியர் எதனைக் கூறுகிறார்? ஏன் அவ்வாறு கூறுகிறார்? (6)

Q7. சாதிக்க விரும்பும் மனிதனின் செயல்பாடுகள் எவ்வாறு இருக்கும்? (5)

Q8. தோல்வியை ஆசிரியரோடு ஒப்பிடக் காரணங்கள் யாவை? (6)

Q9. வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் பின்பற்ற வேண்டியவை என்று ஆசிரியர் எவற்றைக் கூறுகிறார்? (7)

Q10. பொருள் கூறுக (6)

அ. வாசல்களும்
ஆ. சிகரத்தை
இ. முணுமுணுத்து

| | |
|---|---|
| | National Junior College<br><br>Preliminary Examination – H2 –Tamil –JC2 |

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ் மொழி, **இலக்கியம்**<br>தாள் 2<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 2<br><br>Additional materials provided: Writing papers | **A**<br>**9574/2**<br>**29 August 2018**<br>**Wednesday**<br>Duration: 1hr |

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இப்பகுதிக்கு விடையளிப்பதற்கு 1 மணிநேரம் வழங்கப்பட்டுள்ளது.

2 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

3 பயன்படுததப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 2 முதல் 4 வரைஅச்சிடப்பட்டுள்ளன

**I <u>சுயவிடைக் கருத்தறிதல்</u>** <u>(2)</u> (30 **மதிப்பெண்கள்)**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

<u>**பனுவல் ஒன்று**</u>

<u>**கைபேசியில் வசித்தல்**</u>

இன்றைய இளைஞர்களின் சக்தி ஆச்சர்யமூட்டுகிறது. அதிலும் சமூக ஊடகங்களில் இளைஞர்களின் செயல்பாடுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைக்கின்றன. அதேசமயம் அளவுக்கு மிஞ்சினால் அமுதும் நஞ்சு என்பதையும் மறக்கக் கூடாது. ஆம், கைபேசி மூலம் சமூக ஊடகங்களை கையாளும் இளைஞர்களில் கணிசமானோர் அதற்கு அடிமையாகிவிட்டனர் என்றே தெரிகிறது. அறிவியலின் வளர்ச்சி அதிவேகமாக இருக்கிறது. தினம் தினம் புதுப்புது தொழில்நுட்பங்களில் ஆண்ட்ராய்டு அலைபேசிகள் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன. சொல்லப்போனால், கைபேசி இல்லாத நபரே இல்லை என்றே கூறலாம். கைபேசி பயன்படுத்துபவர்களில் கணிசமானோர் இந்த உலகில் வாழவில்லை; அவர்கள் உலகமே கைபேசியாகிவிட்டது. அதிலேயே வசிக்கிறார்கள். வாழ்வதற்கும் வசிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது அல்லவா. முன்பெல்லாம் நம் வாழ்வில் மூன்றாவது நபர்போல் இருந்த கைபேசி, இன்று முதல் நபராக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. அதை நமது மூன்றாவது கை என்றும் அழைக்கலாம். ஆனால், இது ஆரோக்கியமானதா?

இன்று குழந்தைகள்கூட கைபேசியில் முடங்கிக் கிடக்கிறார்கள். மரத்தடியில், மைதானத்தில் ஓடி ஆடிய குழந்தைகளைப் பார்ப்பது அரிதாகிவிட்டது. நமது குழந்தைகள் கைபேசியைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பாதிப்புகளை அறிவீர்களா? உடல், மனம் இரண்டுமே பாதிக்கிறது. குழந்தை நான்கு பேருடன் அக்கம்பக்கம் பேசித் திரிந்தால்தான் பேச்சு வரும். கைபேசியில் முடங்கிக்கிடந்தால் பேச்சு எப்படி வரும்? காற்றுதான் வரும். கைபேசியிலேயே நேரத்தைச் செலவிடும் குழந்தைகள், மற்ற குழந்தைகளுடன் ஒன்றிணைய சிரமப்படும். சமூக மைய நீரோட்டத்தில் இருந்து விடுபட்டு தனிமைப்படும். அடுத்தது, இளைஞர்கள். கைபேசியை உபயோகப்படுத்துவதில் இளம் வயதினர் கைபேசியைக் கொண்டு உலகையே வாங்கிவிடலாம் என்று கனவு காண்கிறார்கள். படிப்பது, வங்கியில் பணம் கட்டுவது, பயணச்சீட்டு முன்பதிவு செய்வது என எதையுமே கைபேசியில் முடித்துவிடுகின்றனர். நல்ல விஷயம்தான். ஆனால் காலை கண்விழித்தது தொடங்கி இரவு தூங்கும் வரை சமூக ஊடகங்களில் மூழ்கியிருப்பதுதான் பெரும் தவறு. சக மனிதர்களிடம் அன்பு, ஆசை, கோபம், வெறுப்பு, தன் அருகில் உள்ளவர்களை அழைப்பது அனைத்தும் சமூக ஊடகங்கள் மூலமாகத்தான் என்பது வருத்தமான ஒன்று.

-ஆதவன்

## பனுவல் இரண்டு

தகவல் தொழில் நுட்ப முன்னேற்றம்

அறிவியலின் அபரிமித முன்னேற்றத்தின் விளைவாக உலகமே பூகோளக் கிராமமாக மாறியுள்ளது. அதிலும் தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியானது உலகத்தையே கையடக்கத் தொலைபேசிக்குள் அடக்கி இருக்கின்றது. இதன் பயனாக ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் இருப்பவரோடும் நினைத்த உடன் தொடர்பு கொள்ள கூடிய வசதியும், பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடக்கின்ற நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள வாய்ப்பும் கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வாறான வசதி வாய்ப்பை முன்னொரு போதுமே மனித சமூகம் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் மனிதனின் முயற்சிகளின் பயனாக உலகம் அடைந்துள்ள முன்னேற்றங்களை மெச்சிப் பாராட்டத் தான் வேண்டும்

அந்தவகையில் தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களின் விளைவாக மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடலும் நெருக்கமும் அதிகரித்துள்ளது .இது பெரிதும் வரவேற்கக் கூடிய நிலையாகும். குறிப்பாக கையடக்கத் தொலைபேசிகள் மனிதனுக்கு நேரடியாக அளிக்கின்ற நன்மைகள் அபரிமிதமானவை. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதன் பயனாக கையடக்கத் தொலைபேசிகள் உலக சனத்தொகையையே விஞ்சி விடக் கூடியளவுக்கு நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. கையடக்கத் தொலைபேசிகள் அதிகரித்து காணப்படுவதுவதும் அவை மக்களுக்கு அளிக்கும் நன்மைகளும் மிக அதிகம் தான். ஆனால் இத்தொலைபேசிகள் பலவிதமான திடீர் விபத்துக்களை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன. அந்த விபத்துக்கள் காயங்களாகவும். ஊனங்களாகவும் மாத்திரமல்லாமல் உயிரிழப்புக்களாகவும் கூட அமைந்து விடுகின்றன.

இந்தக் கையடக்கத் தொலைபேசிகள் மூலமான விபத்துகள் வீதியில் ஏற்படுகின்றன. ரயில் பாதையில் நிகழுகின்றன. ஏன் அதனை நீண்ட நேரம் சார்ஜ்ஜில் போட்டு வைத்திருக்கும் நிலையில் அதில் வரும் அழைப்புகளுக்கு பதிலளிக்கும் போது கூட விபத்து இடம்பெறுகின்றது. கையடக்கத் தொலைபேசியில் உரையாடியபடியும் குறுஞ் செய்திகளைப் பார்த்த படியும் வீதிகளைக் கடக்கும் பாதசாரிகளும் இருக்கின்றனர்.. அனேகர் வீதிகளிலும், ரயில் பாதையிலும் கவனமின்றி கையடக்கத் தொலைபேசியில் பேசிக்கொண்டே நடந்து செல்கின்றனர். ஆனால் இவர்கள் தம் செயற்பாடுகளின் விளைவை முன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் கையடக்கத் தொலைபேசிகளால் ஏற்படும் திடீர் விபத்துக்களைத் தவிர்க்க முடியும். கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துபவர்கள் மத்தியில் அவற்றால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் குறித்த விழிப்புணர்வுகள் ஏற்பட வேண்டும். அப்போதுதான் அவற்றால் ஏற்படும் திடீர் விபத்துக்களையும் பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

- அந்நியன்

## வினாக்கள்

Q1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக (4 மதிப்பெண்கள்)

சிறப்பான இலக்கியம் என்பது பொழுது போக்குக்குப் பயன்படுவதாகும்; மக்களுடைய உள்ளத்தை மனதை பண்படுத்தப் பயன்படுவதாகும். இலக்கியங்களைப் பயின்றவர்கள் ரசிகர்களாக வாழலாம்; பிறருக்கு நல்ல அறங்களை எடுத்துரைப்பவர்களாக இருக்கலாம்.

அ) உம்மைத்தொகை

ஆ) வினையாலணையும் பெயர்

Q2. கைபேசியில் முடங்கிக் கிடப்பதால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை முதல் பனுவலின் துணைகொண்டு விளக்குக (4 மதிப்பெண்கள்)

Q3. தொழில் நுட்ப வளர்ச்சி குறித்த கண்ணோட்டத்தில் இவ்விரு எழுத்தாளர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக. (7 மதிப்பெண்கள்)

Q4. இவ்விரு எழுத்தாளர்களுள் யாருடைய கருத்து இன்றைய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றது? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

((முற்றும்)

| | | |
|---|---|---|
| | **National Junior College**<br>Preliminary Examination – H2 –Tamil –JC2 | |
| உயர்தரம் 2 தமிழ் மொழி, **இலக்கியம்**<br>தாள் 3<br><br>HIGHER 2 TAMIL LANGUAGE - PAPER 3<br><br>Additional materials provided: Writing papers | | **A**<br>**9574/3**<br>**10 September 2018**<br>Monday<br>Duration: 3hrs |

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு_ புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

2 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு தாள்களையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லக்கூடாது.

வினாக்கள் பக்கம் 2 மற்றும் 3-இல் அச்சிடப்பட்டுள்ளன

# <u>உயர்தரம் 2</u>
# <u>தமிழ் இலக்கியம்</u>
# <u>தாள் 3</u>

**<u>முக்கியக் குறிப்புகள்</u>**

**மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் <u>ஒரு</u> வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்**.

## <u>'அ' பிரிவு</u>

**<u>நாவல்</u>**

Q1. 'மலேசியத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டங்களை 'பால்மரக் காட்டினிலே' என்னும் நாவலில் ஆசிரியர் சிறப்பான வகையில் சித்தரித்துக் காட்டுகின்றார்' - கருத்துரைக்க.

Q2. நாவலில் வரும் சகோதரர்களான முத்து, பாலன், முருகன் இம்மூவரும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளாக இருப்பினும் வேறுபட்ட பண்புநலன்களை உடையவர்களாக ஆசிரியர் வெளிப்படுத்திக் காட்டும் பாங்கினை ஆராய்க.

## <u>'ஆ' பிரிவு</u>

**<u>சிறுகதை</u>**

Q3. 'ஏதோவொரு புள்ளியில் கதையோடு சேர்ந்து பயணிக்கத் தொடங்குகிறோம். கதாபாத்திரத்தோடு நமது உணர்ச்சிகளை பரிமாறிக் கொள்கிறோம். முடிவை நாம் கணிக்கத் தொடங்குகிறோம் அல்லது இப்படித்தான் முடிவு இருக்க வேண்டும் என விரும்புகிறோம். இந்த ஒரு பிணைப்பை உருவாக்குவதுதான் சிறுகதையின் வெற்றி. "**விடியுமா**" அப்படியான ஒரு கதை' - விளக்குக.

Q4. "ஆசிரியர் வெறும் பாடம் நடத்தும் இயந்திரம் மட்டும் அல்ல. அவருக்கு மாணவர் உளவியலும் தெரிந்திருக்க வேண்டும்" - இக்கருத்து ஏற்புடையதா? 'ஆயிஷா' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

## <u>‘இ’ பிரிவு</u>

### <u>நாடகம்</u>

Q5. “காதல் என்ன விலை” என்ற நாடகம் வாயிலாக அதன் ஆசிரியர் கூற விரும்பும் கருத்துகளில் முதன்மையானது என நீவிர் எதனைக் கருதுகிறீர்? ஏன்? விளக்குக.

Q6. “சிங்கப்பூர் மாப்பிள்ளை” என்ற நாடகம் நமது சமுதாயத்தின் யதார்த்த வாழ்வை அழகாக வெளிப்படுத்தும் ஒரு சிறந்த நாடகம் - ஆராய்க

## <u>‘ஈ’ பிரிவு</u>

### <u>கவிதை</u>

Q7. “ஹைக்கூ கவிதைகளில் கூறப்படும் கருத்துகள், பண்பட்ட மாந்தர்களின் வெளிப்பாடுகள்” - கருத்துரைக்க

Q8. “இயற்கை இன்பம்” “சாந்தி தரும் அந்தி” ஆகிய இரு பாடல்கள் வாயிலாக வெளிப்படும் செய்திகள் குறித்து ஆராய்க.

(முற்றும்)

Name : ______________________ Class: ________

பெயர் : _________________

**PIONEER JUNIOR COLLEGE**
**JC2 PRELIMINARY EXAMINATION**
**H2 TAMIL LANGUAGE AND LITERATURE**
**PAPER 1 ( PART 1 )**

**ஆண்டிறுதித் தேர்வு**

**தமிழ்மொழி**

***தாள்1 (பகுதி 1)***

**Date : 17/09/2018**

**Subject Code: 9574/1**

**Duration: 2 hr 15 min (Total time for Part 1 and Part 2)**

---

***தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்***

1. *இவ்வினாத்தாளில் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.*

2. *வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரைத்தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை வரைக.*

3. *கட்டுரை எழுதுவதற்கு 1 மணி 15 நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளது.*

4. *அகராதியைப் பயன்படுத்துதல்:*

(*அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்பட்த்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.*

*(ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்குமபோது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.*

## <u>'அ' பிரிவு</u>

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை வரைக.**

**(35 மதிப்பெண்கள்)**

1 போட்டித்தன்மைமிக்க வாழ்க்கை மனிதர்களைச் சுயநலமிக்கவர்களாக மாற்றுகிறது. கருத்துரைக்க.

2 இக்கால இளையர்களின் மனப்போக்குகளும் அவை சமுதாயத்தில் ஏற்படுத்தி வரும் விளைவுகளும்.

3 சமூக ஊடகங்களில் உதிர்க்கப்படும் கருத்துகள் ஒருவரின் வெளிப்பாடுகளே; அவற்றில் உண்மைகள் இல்லை. ஆராய்க.

4 பின்வரும் சூழலைக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.



Name : ______________________ Class: ________

பெயர் : __________________

**PIONEER JUNIOR COLLEGE**
**JC2 PRELIMINARY EXAMINATION**
**H2 TAMIL LANGUAGE AND LITERATURE**
**PAPER 1 ( PART 2 )**

**ஆண்டிறுதித் தேர்வு**

# தமிழ்மொழி

***தாள்1 (பகுதி 2)***

**Date : 17/09/2018**

**Subject Code : 9574/1 (PART 2)**

**Duration : 2 hr 15 min (Total time for Part 1 and Part 2)**

---

*தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்*

1. *இவ்வினாத்தாளில் மொத்தம் 10 வினாக்கள் 2 முதல் 4 பக்கங்கள் வரை அச்சிடப்பப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு விடையளிப்பதற்கு 1 மணி நேரம் வழங்கப்பட்டுள்ளது.*
2. *வினாக்களுக்கான கட்டளைகளைக் கருத்தூன்றிப் படிக்கவும். பின் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடைகளை எழுதவும்.*

| பிரிவுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| Q1 - Q5 | /5 |
| Q6 - Q9 | /24 |
| Q10 | /6 |
| மொத்தம் | /35 |

**பின்வரும் உரைநடைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

வாழ்வில் சில நெறிமுறைகளை, ஒழுக்க விதிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறநூல்கள் சொல்கின்றன. நம் (Q1)_______________ வாழந்து காட்டியும் சென்றிருக்கின்றனர். ஆனால் நாகரிகம் என்ற எண்ணத்தில், வாழ்க்கை நெறிமுறைகளை மக்கள் கடைப்பிடிப்பதில்லை. உடலைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் (Q2)____________ செந்நெறிப்படும். உள்ளத்தைச் செம்மையாக வைத்துக்கொண்டால்தான் உடலும் நோய் நொடியின்றி ஆரோக்கியமாகச் செயல்படும். இந்த இரண்டும் உட்தொடர்புடையவை.

எப்படியும் வாழலாம், கிடைத்தற்கரிய இந்த வாழ்வை முழுமையாக அனுபவதித்துவிட வேண்டும், மூப்பும் இயலாமையும் உடலைத் தள்ளாடச் செய்வதற்குள் உலக இன்பங்களை எல்லாம் துய்த்திட வேண்டும் என்று வேகம் மேல்நாட்டில் (Q3)________________. உலகாயதப் பொருள்களில் வரன்முறையற்ற விருப்பங்களும் மனிதனை ஆட்டிப்படைக்கின்றன. தவறுகளைத் தெரிந்து செய்தாலும் (Q4)______________ செய்தாலும் பலன் ஒன்றுதான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது முதுமொழி. புலனடக்கம் இல்லாமல் 'கண்டதே காட்சி (Q5) _____________ கோலம்' என்று வாழ்ந்தால் அதன் விபரீத பலனையும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

## 'ஆ' பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல்** (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்துவிட்டு, அதனடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும**

அன்றாடம் நம்முடைய வாழ்க்கையில் எதிர்ப்படும் பிரச்சினைகள் என்னென்ன? அவற்றை எப்படிச் சமாளிப்பது? பிரச்சினைகளை வெல்வது எப்படி? என்பவை பற்றிய தெளிவான சிந்தனை இருந்தால்தான் வாழ்க்கையைச் சரியான முறையிலும், மகிழ்ச்சியான மனநிலையிலும் நம்பிக்கையோடு நாம் அனுபிவிக்க முடியும். நம்முடைய மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு இடையூறாக இருப்பவை எவை என்று ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மகிழ்ச்சி என்பது பெருமளவில், வாழ்க்கையில் எதிர்ப்படும் பிரச்சினைகளை நாம் சந்தித்துச் சமாளிப்பதைப் பொறுத்தே ஏற்படுகிறது. மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும். எதிர்ப்படும் முட்டுக்கட்டைகளையும் இடையூறுகளையும் அறைகூவல்களையும் வலுவான முறையில் சந்தித்து **முறியடித்து** முன்னேறிச் செல்ல வேண்டும். திருப்தியான முறையில் வாழ்வதற்குரிய வழிவகைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மனத்தைப் பாதிதக்கக்கூடிய பல விஷயங்களில் முதன்மையானது 'பயம்' தான். கண்டதற்கெல்லாம் வீணே பயந்து சாகிறோம். சுகமான வாழ்வுக்கு அனாவசியமான பயங்களை நாம் ஒதுக்கித் தள்ள வேண்டும். தேவையில்லாத பிரச்சினைகளை வெல்வதற்கு இதுவே சிறந்த வழி. உள்ளத்தில் பயம் ஏற்படும்பொழுது அதற்குப் பதிலாக நம்பிக்கையை மேற்கொண்டு விட்டால் பயம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். ஆகவே தேவையில்லாத பயங்களையும் கவலைகளையும் **தீர்ப்பதற்கு** ஒரே வழி நம்பிக்கை ஏற்பதுதான். செய்யும் வேலையை நாம் மகிழ்வோடு செய்ய வேண்டும். முழுமையான நம்பிக்கையோடும் ஈடுபாட்டோடும் அளவற்ற ஆர்வத்தோடும் முகமலர்ச்சியோடும் ஒரு செயலைச் செய்யும்போது அதன்மூலமாக வாழ்க்கையின் வலிமை அதிகரிக்கின்றது.

பிரச்சினைகளை வெல்லப் பயம், பலவீனம், தாழ்வுணர்ச்சி போன்றவை இதயத்தில் எழாமல் விழிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையில் ஏதாவது ஒரு சிக்கலான சூழ்நிலை உருவாகுமானால் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் நம் மனத்தை அமைதியாக வைத்துக்கொள்வதுதான். அந்த ஒரு காரியத்தை மட்டும் நாம் மறவாமல் கடைப்பிடித்து விட்டால், எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் அதை நாம் எளிதில் வெற்றி கண்டு விடலாம். நம் வாழ்வில் ஒரு பெரிய பிரச்சினை ஏற்படும்போது, அது பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அது மட்டுமல்ல, அந்தப் பிரச்சினை நம் வாழ்வுக்கு ஒரு புதிய சக்தியை ஊட்டுவதற்காக வந்திருக்கிறது என்று எண்ணி நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். பிரச்சினை இல்லாத வாழ்க்கை என்பதும் கிடையாது. பிரச்சினைகளை இல்லாத மனிதனும் கிடையாது. நமது வாழ்க்கையில் பற்பல காரியங்கள் இப்படி இப்படி நடக்க வேண்டும் என்று நினைக்கிறோம்; ஆசைப்படுகிறோம்; திட்டங்கள் வகுக்கிறோம். அந்தத் திட்டங்கள் தடைப்படும்போது அல்லது நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக வேறு ஏதாவது நடைபெறும்போது அந்த நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்ற **கலக்கம்** நமகக்கு ஏற்படுகிறது.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதன் நன்மை தீமைகளை ஒழுங்குபடுத்திச் சிந்தித்து, விரைவில் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். அவ்வாறு வந்த பிறகு, மீண்டும் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. அத்தகைய முடிவில்லாத சிந்தனையாளர்கள், எப்போதுமே ஒரு முடிவுக்கு வரமாட்டார்கள். அவர்களால் எந்த ஒரு செயலையும் செய்ய முடியாது. ஆகவே, நமக்கு ஏற்படும் பிரச்சினைகளை வெல்லத் திட்டம் போட்டுக்கொண்டே இருக்க வேண்டும். நேரத்தை வீணாக்கக் கூடாது. எதற்கும் எப்போதும் பயப்படாமல் தைரியமாக இருக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும். இப்படி இருந்தால் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றுவிடுவோம்.

**<u>வினாக்கள்</u>** (24 மதிப்பெண்கள்)

Q6 நமது வாழ்க்கையில் நாம் எப்போதெல்லாம் மகிழ்ச்சியைப் பெற முடியும்? (5)

Q7 மனத்தில் குடிகொண்டிருக்கும் அச்சத்தை எவ்வாறு போக்கலாம்? (5)

Q8 பிரச்சினைகள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணம் யாது? அதனை வெற்றிகொள்ள என்ன செய்ய வேண்டும்? (7)

Q9 சிலர் எதிலும் விரைவில் முடிவெடுக்க முடியாமல் ஏன் சிரமப்படுகின்றனர்? (7)

Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ) முறியடித்து

ஆ) தீர்ப்பதற்கு

இ) கலக்கம்

முற்றும்

**Answer Keys Paper 2 2018**

## ஆண்டிறுதித் தேர்வுத்தாள் விடைகள்

### முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 மதிப்பெண்கள்)

Q1 முன்னோர்கள் / சான்றோர்கள்

Q2 உள்ளமும்

Q3 பரவியிருக்கிறது

Q4 தெரியாமல்

Q5 கொண்டதே

### சுயவிடைக் கருத்தறிதல்

Q6 நமது வாழ்க்கையில் நாம் எப்போதெல்லாம் மகிழ்ச்சியைப் பெற முடியும்? (5 மதிப்பெண்கள்)

- அன்றாட வாழ்க்கையில் எதிர்ப்படும் பிரச்சினைகள் என்னென்ன? அவற்றை எப்படிச் சமாளிப்பது? வெல்வது எப்படி? பற்றிய தெளிவான சிந்தனை இருக்கும்போது
- மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு இடையூறாக இருப்பவை எவை என்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்து அவற்றை முறியடித்து முன்னேறிச் செல்லும்போது

Q7 மனத்தில் குடிகொண்டிருக்கும் அச்சத்தை எவ்வாறு போக்கலாம்?

(5 மதிப்பெண்கள்)

- சுகமான வாழ்வுக்கு அனாவசியமான பயங்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.
- உள்ளத்தில் அச்சம் ஏற்படும்போது அதற்குப் பதிலாக நம்பிக்கையை மேற்கொண்டு விட்டால் பயம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

Q8 பிரச்சினைகள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணம் யாது? அதனை வெற்றிகொள்ள என்ன செய்யவேண்டும்?

(7 மதிப்பெண்கள்)

- நம்மிடம் இருக்கும் பயம், பலவீனம், தாழ்வுணர்ச்சி போன்றவை பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணங்களாகும்.

பிரச்சினைகளை வெற்றிகொள்ள:

- மனதை அமைதியாக வைத்துக்கொள்ளவேண்டும்.
- ஒரு காரியத்தில் மறவாமல் கடைப்பிடித்துவிட்டால் அதை எளிதில் வெற்றி பெற்றுவிடலாம்.
- பிரச்சினை நம் வாழ்வுக்கு புதிய சக்தி வந்திருக்கிறது என்று எண்ணி மகிழ்ச்சி அடையவேண்டும்.

Q9 சிலர் எதிலும் விரைவில் முடிவெடுக்க முடியாமல் ஏன் சிரமப்படுகின்றனர்? (7 மதிப்பெண்கள்)

- பிரச்சினைகள் வந்த பிறகு மீண்டும் அதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பது.
- பிரச்சினைகைளத் தீர்க்க திட்டம் போடாமல் இருப்பது
- நேரத்தை வீணாக்குவது
- துணிவில்லாமல் இருப்பது.

Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

அ) முறியடித்து - வீழ்த்தி

ஆ) தீர்ப்பதற்கு - போக்குவதற்கு, நீக்குவதற்கு

இ) கலக்கம் - குழப்பம், கவலை

**************************************

**PIONEER JUNIOR COLLEGE**
**JC2 PRELIMINARY EXAMINATION (E-Exam)**

---

**உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்** 9574 / 2

# TAMIL LANGUAGE AND LITERATURE

Paper 2 19 Sep 2018

**1 hour**

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இந்தத் தேர்வுத்தாளில் 2 பனுவல்களும் 4 வினாக்களும் உள்ளன.
2. விடைகளை எழுதுவதற்குமுன் பனுவல்களைக் கவனமாகப் படிக்கவும்.
3. தேர்வாளர் கட்டளை கொடுத்தபிறகு, '*START TEST*' செயல்படுத்தவும்.

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

## பனுவல் ஒன்று

மனச் சோர்விலிருந்து மீள்வோம்!

எப்படிப்பட்ட மனிதரையும், மனச்சோர்வு எளிதில் வீழ்த்திவிடும். ஆனந்தமும் வேதனையும் கலந்தது தான் வாழ்க்கை. ஆனாலும் மனச்சோர்வுடன் இருக்கும்போது நம் வாழ்க்கையில் நிகழ்ந்த சோகமான காரியங்கள் மட்டுமே நினைவுக்கு வரும். மனச்சோர்விலேயே உழன்று கிடப்பதால் சாதிக்கப்போவது ஒன்றும் இல்லை. அதிலிருந்து வெளியே வந்தால், நம்மை போல மனச்சோர்வில் அகப்பட்டவர்களுக்கும் உதவலாம். இதனால் நம்மைப் போன்ற பிற மனிதர்களுடைய வாழ்க்கையும் இனிமையாக இருக்க வகை செய்யலாம்.

தொடர்ச்சியாக பிறரைக் குறைத்து பேசுகிறவர்களோடு இருக்க யாருமே விரும்ப மாட்டார்கள். அப்படிப்பட்ட மக்களிடம் இருந்து விலகி இருப்பது மன அமைதியையும் சமாதானத்தையும் கொடுக்கும். மனச்சோர்வோடு இருக்கும்போது, தனிமையில் இருந்தால், மனம் மேலும் சோர்வுடன் தான் இருக்குமே தவிர அமைதியடையாது. அதற்காக எப்போதுமே கூட்டமாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் அவ்வாறு நண்பர்களுடன் சேர்ந்து இருந்தால், அவை முழுமையான தீர்வை கொடுக்காவிட்டாலும், மனச்சோர்வு தரும் சிந்தனைகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்பும்.

எதிர்மறையான சிந்தனைகளை அகற்றுவதற்கு, காட்சி அமைப்பை மாற்றுவது எப்போதுமே உதவியாக இருக்கும். வாழ்க்கையில் நேர்மறையான சிந்தனைகளைக் கொண்டு வர ஒருநாள் பிரயாணம் மேற்கொள்வதற்கு ஈடாக எதுவுமே இல்லை. எனவே மனச்சோர்வின்போது எங்கேனும் வெளியே சென்றால், எளிதில் மனச்சோர்வானது நீங்கும். வாழ்க்கையில் நேர்மறையாக இருப்பதே மனச்சோர்வு கொடுக்கும் சிந்தனைகளைத் தவிப்பதற்கான சிறந்த வழி. மனதிலே எதிர்மறை உணர்வுகள் இருக்கின்றன. சிந்தனைகளை நேர்மறையான திசையில் செலுத்துவதன் மூலமாக மனச்சோர்வின் தாக்கங்களை அகற்றிவிடலாம்.

மனச்சோர்வில் இருந்து வெளிவருவது எப்படி என்பது குறித்து சில முக்கியமான குறிப்புகளை இங்கே கொடுத்து இருக்கிறோம். நீங்களோ அல்லது உங்களுக்கு அறிமுகமானவர்களோ மனச்சோர்வில் இருந்தால், இவற்றைப் படிக்குமாறு கூறி, வாழ்வை இனிமையாக்குங்கள்.

ஆனந்தி

## பனுவல் இரண்டு

இன்றைய சுறுசுறுப்பான, வேலை பளுமிக்க. நம் வாழ்க்கை முறையில், மனஅழுத்தம் என்பது தவிர்க்க இயலாத ஓர் அங்கமாக மாறித்தான் போய்விட்டது. நமக்கு ஏற்படும் மனஅழுத்தத்தைக் கட்டுப்படுத்த, மனதை அழுத்தத்தில் இருந்து வேறு ஏதாவது சிந்தனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாம் செய்யும் செயல்களை நமக்கு பிடித்த விதமாக மட்டுமில்லாமல், அது நம் கவலைகளையும் மறக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.

நினைத்தது நடக்கவில்லை என்றால்தான் மன அழுத்தம் அதிகமாகிறது. எந்த விஷயம் நடக்குமோ, அதற்கான எதிர்பார்பை மட்டும் மனதிற்குள் வளர்த்துக்கொள்வது நம் நட்பு வட்டாரத்தில் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும். மன அழுத்தம் என்று மனதை மேலும் சிக்கலாக்குவதற்குக் கோபம்தான் மூலக் காரணம். இன்றைய பரபரப்புமிக்க வாழ்க்கை முறையில் கோபம் வருவதற்கு அளவுக்கு மீறிய வேலைச் சுமையும் ஒரு காரணமாக அமைகிறது. இப்பிரச்சினைகளைக் களைய தினசரி வாழ்க்கையில், ஒரு சில பொழுதுபோக்கு நடவடிக்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்; பொழுதுபோக்குகள் நம் மனதை ஓய்வு எடுக்கச் செய்யும்.

அதே வேளையில் நம்மை உற்சாகம் கொள்ளவும் செய்கின்றன. ஆர்வத்துடன் ஒரு பொழுதுபோக்கில் ஈடுபடும்போது, இழந்த உணர்வுகளை நிதானமாகத் தொடர அனுமதிக்கின்றன. இன்றைய உலகம் விரைவானது. போட்டிகளும் சவால்களும் நிறைந்தது. இந்தப் பரபரப்புமிக்க உலகில் மன அழுத்தம் இல்லாத மனிதர்களைப் பார்ப்பது அரிது. இந்த மன அழுத்தம் ஒருவரின் ஆரோக்கியம், மகிழச்சி, உணரவில் எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தும். ஆனால் மனதை மன அழுத்தமின்றி வைத்திருப்பது வாழ்நாளை அதிகரித்து, வாழும் நாட்களை அழகாகவும் அமைதியாகவும் வைத்திருக்க உதவும் என்று உணர வேண்டும்.

மனதை வென்றவர்கள் வாழ்க்கையை வென்றவர்கள் என்று கூறுவர். அந்த மனதை வெல்ல அதை எப்போதும் சமநிலையில் வைத்திருக்க வேண்டும். அப்போதுதான், நம் உடல் இயக்கமும் செயல் இயக்கமும் பிரச்சினையின்றி சீராகச் செயல்படும் என்பதை நியாபகத்தில் வைப்போம்!

**மாதவன்**

**<u>வினாக்கள்</u>**

Q11 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுது (பனுவல் ஒன்று) (4 மதிப்பெண்கள்)

**நாம் செய்யும் செயல்களை நமக்கு பிடித்த விதமாக மட்டுமில்லாமல், அது நம் கவலைகளையும் மறக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.**

அ) பெயரெச்சம்

ஆ) ஆறாம் வேற்றுமைத் தொகை

Q12 வாழ்க்கை இனிமையாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை எழுத்தாளர் ஆனந்தி விளக்குகிறார் ? (5 மதிப்பெண்கள்)

Q13 நம்மை உற்சாகத்துடன் மனதை வைத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? இரு எழுத்தாளரிடையே நிலவும் கருத்து ஒற்றுமைகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

Q14 மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் இருக்க மனதைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது சரியா? எந்தப் பனுவல் ஆசிரியர் கூறுவது ஏற்புடையது என்று நினைக்கிறாய் என்பதை சான்றுகளுடன் 140 சொற்களில் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

********** முற்றும் ********

**Answer Keys விடைகள்**

Q11 அ) பெயரெச்சம் – செய்யும் (4 மதிப்பெண்கள்)

ஆ) ஆறாம் வேற்றுமை தொகை – நம்

Q12 வாழ்க்கை இனிமயாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை எழுத்தாளர் ஆனந்தி விளக்குகிறார்? ( 5 மதிப்பெண்கள்)

- வாழ்க்கை இனிமையாக இருக்க மனச்சோர்விலேயே உழன்று கிடக்காமல், அதிலிருந்து வெளியே வந்தால் நம்மைப்போல் மனச்சோர்வில் அகப்பட்டவர்களுக்கு உதவலாம்.
- இதனால் நம்மைப் போன்ற பிற மனிதர்களுடைய வாழ்க்கையும் இனிமையாக இருக்க வகை செய்யலாம்.

Q13 நம்மை உற்சாகத்துடன் மனதை வைத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? இரு எழுத்தாளரிடையே நிலவும் கருத்து ஒற்றுமைகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

- இரு பனுவல்களும் எதிர்மறையான சிந்தனைகளை அகற்றுவதற்கு வழி கூறுகின்றன. பனுவல் இரண்டு, ஒரு பொழுதுபோக்குகள் நம் மனதை ஓய்வு எடுக்கச் செய்யும் மற்றும் நம்மை உற்சாகம் கொள்ளச் செய்கின்றன என குறிப்பிட்டுள்ளது.
- பனுவல் ஒன்றில் எதிர்மறையான சிந்தனைகள் அகற்றுவதில் காட்சி அமைப்பை மாற்றவேண்டும் என்று குறிப்பிடுகிறது. எங்கேனும் வெளியே சென்றால் எளிதில் மனச்சோர்வானது நீங்கும் எனவும் குறிப்பிடுகிறது.
- இரு பனுவல்களும் நல்ல நண்பர்களுடன் சேர்ந்து இருப்பதையும் ஒரு நல்ல வழியாகக் குறிப்பிடுகின்றன.

Q14 மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் இருக்க மனதைக் கவனமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது சரியா? எந்தப் பனுவல் ஆசிரியர் கூறுவது ஏற்புடையது என்று நினைக்கிறாய் என்பதைச் சான்றுகளுடன் 140 சொற்களில் எழுதுக.

- மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் இருக்க மனதைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது மறக்க முடியாத ஒன்றாகும். ஆககையால் பனுவல் இரண்டின் ஆசிரியர் கூறவதுதான் மிகவும் ஏற்புடையதாக இருக்கிறது.
- பனுவல் இரண்டில் இன்றையை பரபரப்புமிக்க வாழ்க்கை முறையில் கோபம் வருவதற்கு அளவுக்கு மீறிய வேலைச் சுமையும் காரணமாக அமைகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையால், கோபத்தைக் களைய தினசரி வாழ்க்கையில் ஒரு சில பொழுதுபோக்கு நடவடிக்கைகள்

கடைப்பிடிக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் நம் மனதை கவனமாகப் பாதுகாதுக்கொள்ள முடிகிறது.

- வேறு கருத்துகள்......

Name : _______________________ Class: ________

பெயர் : __________________

**PIONEER JUNIOR COLLEGE**
**JC2 PRELIMINARY EXAMINATION**
**H2 TAMIL LANGUAGE AND LITERATURE**
**PAPER 3**

**ஆண்டிறுதித் தேர்வு**

# தமிழ் இலக்கியம்

***தாள் 3***

**Date : 20 /09/2018**

**Subject Code : 9574/3**

**Duration: 1400 – 1700 hr**

---

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளில் மொத்தம் *8* வினாக்கள் *3* பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

2 ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

| **பிரிவுகள்** | **மதிப்பெண்கள்** |
|---|---|
| கவிதை | /25 |
| சிறுகதை | /25 |
| நாடகம் | /25 |
| நாவல் | /25 |
| *மொத்தம்* | /100 |

# உயர்தரம் 2 தமிழ் இலக்கியம்
## தாள் 3

*மொத்தம் **4** வினாக்களுக்கு விடையெழுதவேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் குறைந்தது ஒரு வினாவிற்கு விடையெழுதவேண்டும்.*

## ‘அ’ பிரிவு

### நாவல்

Q1 முரண்பட்ட கதைமாந்தர்கள் ‘பால்மரக் காட்டினிலே’ நாவலில் இடம்பெற்றுள்ள பாங்கினை ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

Q2 ‘பால்மரக் காட்டினிலே’ நாவல் இன்றைய இளையர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய பல விழுமியங்களை வெளிப்படுத்துகிறது. ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## ‘ஆ’ பிரிவு

### சிறுகதை

Q3 சிறுகதைகளுக்குரிய இயல்புகளைக்கொண்டது ‘விடியுமா?’ என்ற சிறுகதை. விளக்குக. (25 மதிப்பெண்கள்)

Q4 ‘நாடோடி என்னும் சிறுகதையின் கருத்துகள் இக்காலத்திற்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன. ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## ‘இ’ பிரிவு

### நாடகம்

Q5 பிள்ளைகளின் மனநிலையைப் பெற்றோர்கள் புரிந்துகொள்வதில்லை என்பதைக் ‘காதல் என்ன விலை?’ என்ற நாடகத்தின் துணைகொண்டு ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

Q6 ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ நாடகம்வழி ஒரு வாசகன் அறியலாகும் விழுமியங்களைச் சான்றுகளுடன் விளக்குக. (25 மதிப்பெண்கள்)

## ‘ஈ’ பிரிவு

### கவிதை

Q7 பாரதியார், பாரதிதாசன் இருவரின் கவிதைகளில் விரவியுள்ள தமிழ் மற்றும் தமிழர் பற்றிய சிந்தனைகளை ஒப்பிட்டு ஆராய்க.
(25 மதிப்பெண்கள்)

Q8 ‘புல்’ மற்றும் ‘நூல்’ ஆகிய கவிதைகளில் இடம்பெற்றுள்ள கற்பனை மற்றும் இலக்கிய நயத்தைச் சான்றுகளுடன் விளக்குக.
(25 மதிப்பெண்கள்)

************* **முற்றும்** *************

Pioneer JC Answer Keys : H2 TLL Preim Paper 3 2018

# தமிழ் இலக்கியம் உயர்தரம் 2

## தாள் 1

## நாவல் –

Q1 முரண்பட்ட கதைமாந்தர்கள் ஒரு நாவலில் இடம்பெறுவது அவசியமாகும். கதை மாந்தர்கள் என்பவர்கள் அக்கதையை நடத்திச் செல்பவர்கள் ஆவர்.

- அவர்களில் பலரும் நாவலில் இடம்பெறும்போது அவர்கள் தங்கள் செயலிலும், நடத்தையிலும், பண்புகளிலும் எவ்வாறு வேறுபட்டுப் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைப் பொருத்தமான கருத்துக்களுடன் மேற்கோள் காட்டி விளக்குவது சிறப்பு.
- இந்நாவலில் முரண்பட்டவர்களாக பாலன் – முருகன், கண்ணம்மா – இராதா, கணேசன் – பாலன், வேலம்மாள் – முனியம்மாள் என்று கூறலாம்.
- பாலனும் முருகனும் ஒரே குடும்பத்தில் பிறந்தர்கள் உடன் பிறந்தவர்கள் என்றாலும் அவர்களுக்குள் பல வேறுபாடுகள் உள்ளன.
- பாலன் தன்னைப் படிக்கவைத்து நல்ல நிலைக்குக் கொண்டுவந்த தன் பெற்றோர்களையும் தன் சகோதர சகோதரிகளையும் காப்பாற்றி அவர்களுக்கு நல் வாழ்வு அளிப்பதில் சுய நலமின்றி செயல்படுகிறான்.
- ஆனால் முருகன் தன்னைப் பெற்றவர்களுக்கும் உறவுகளுக்கும் எந்தவித நன்மையும் செய்யாமல் தன் வாழ்க்கை முன்னேற்றத்தை மட்டுமே கருத்தில் கொள்கிறான்.சுயநலப்பண்பே மிகுதியாக உள்ளவனாக படைக்கப்பட்டுள்ளான்.
- பாலன் பொது நலத் தொண்டன் என்பதை அவன் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம் தொடங்குவதற்கு அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கது.
- முருகனை அவனைச் சந்தித்து தோட்டத்திற்கு வரவேண்டும் என்று கூறியபோது அவன் மறுக்கிறான். தொழிலாளர்கள் கூட்டுறவு முயற்சிக்கு முட்டுக் கட்டை போடுகிறான். இவை எல்லாம் வேலை இல்லாதவன் செய்யும் வேலை என்று இழிவாகப் பேசுகிறான்.
- அவனது நண்பன் அஜிஸ் பாலனது சிறுவயது பொறுப்புணர்வு அவனது நல்ல பண்புகளைப் பற்றிக் கூறுவதிலிருந்தும் அறியலாம்.
- தோட்டத்தில் வேலை செய்யும் தன் பெற்றோர்களைபப் பார்ப்பதை வெறுப்பவனாக முருகன் உள்ளான்.
- இராதா படித்து நாகரீகம் உடையவளாகவும் கண்ணம்மா படிக்காமல் இருக்கும் தோட்டத்தை மட்டுமே உலகம் என்று நம்பி இருக்கிறாள்.
- வேலம்மாள் தன் குடும்பத்தைக் காப்பாற்றவும் பழநிக்கு நன்றிக்கடன் கொண்டவளாக உள்ளாள்.
- கண்ணம்மாவின் குடும்பம் தோட்டத்தை விட்டு வெளியே செல்வதை எண்ணி வருத்தமடைகிறாள்.
- பாலனுக்கும் மற்றவர்களுக்கும் உதவியாக இருக்கிறாள். ஆனால் முனியம்மா தன் கடமை மறந்து கணவனிடம் மரியாதை இல்லாமல் பெண்ணுக்குரிய எந்தப் பண்பும் இல்லாமல் இருக்கிறாள்.

- செல்லத்தை தவறான வழிக்கு செல்வதற்கு அவள் உற்சாகமூட்டுகிறாள்
- குடும்பத்தின் மீது எவ்வித அக்கறையும் இல்லாமல் வீண் பொழுதுபோக்குவதில் மகிழ்ச்சி கொள்கிறாள்.

Q2 நாவலில் இருந்து இளையர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விழுமியங்களை வெளிப்படுத்துகிறது –

- எந்த ஒரு படைப்பும் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நல்ல படிப்பினைகளையும் விழுமியங்களையும் கற்றுத் தருவதாகப் படைக்கப்படுவது அவசியம் ஆகும்.
- இந்நாவலில் இளையர்கள் பின்பற்றக்கூடிய பல விழுமியங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- பொது நலத்தில் அக்கறை கொள்ளுதல் – பாலனது செயல்.
- பிறரது இன்ப துன்பங்களில் பங்கு கொள்வது – கணேசன்
- எந்த ஒரு பிரச்சனையையும் பொதுவாகப் பார்த்து பிறருக்கு உதவிசெய்ய முனவருவது – முருகன்
- தன்னைக் காப்பாற்றிக் கொள்பவே பிறருக்கு உதவுவான் – முருகன்
- எதையும் எதிர்த்து நின்று உரிமைக்குப் போராட வேண்டும் – இராதா
- மானத்தை பெரிதென பெண்கள் மதிக்கவேண்டும – செல்லம்
- உண்மையான அன்பும் நட்பும் இனம் மொழி மதத்தை கடந்து நிற்கும் – அஜிஸும் பாலனது நட்பும்

Q3 விடியுமா – சிறுகதை இயல்புகளைக் கொண்டுள்ளது.

- கதையின் தலைப்பு, தொடக்கம், கதையின் சிக்கல், கதை நடைபெற்ற சூழல்,உரையாடல் போக்கு, உச்சம், வீழ்ச்சி, முடிவு என்பது தொடர்பான விளக்கமும் பொருத்தமான சான்றுகளும் இடம்பெற வேண்டும்.
- விடியுமா என்ற கதை அதன் தலைப்பை விளக்கும் விதத்தில் கதை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.
- தலைப்புப் பொருத்தம் – குஞ்சம்மாள் வாழ்க்கைக்கு இனி விடிவு இல்லை.
- கணவனை இழந்த பெண் அடையும் துன்பங்களுக்கு விடிவு இல்லை.ஆனால் அவள் தன் கணவனுடன் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்க்கை ஒரு விடிவைப் பெற்றுவிட்டது.
- உரையாடல் போக்கு விடியுமா என்னும் தலைப்பை விளக்கும் விதத்தில் பல இடங்களில் இத் தலைப்பு இடம்பெறுகிறது.

- மனது ஒரு நிலையில் இல்லை. துக்கத்தில் மனம் தடுமாறும் நிலை அழகாக எடுத்துரைக்கப்படுகிறது.

- இதோ ஆயிற்று , இதோ ஆயிற்று. பட்டணம் நெருங்க நெருங்க வண்டி ஊர்வது போல இருந்தது.

- மனதில் ஏற்பட்ட பயம், திகல் அப்போது அதைப் பார்த்தவுடன் நீங்கிற்று.

- கதையின் விறுவிறுப்பையும் ஆர்வத்தையும் அடையும் விதத்தில் உரையாடல் இட்மபெற்றுள்ளது.

- முடிவு எல்லாவற்றிற்கும் விடியலாக விடியுமா விடிந்துவிட்டது என்று அமைந்து இக்கதை சிறந்த கதை என்ற நிலையைப் பெற்றுள்ளது,.

Q4 நாடோடி என்ற சிறுகதையில் கூறப்பட்டுள்ள கருத்துகள் இக்காலத்திற்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன. ஆராய்க.

- தமிழர்கள் தன் நாட்டில் இல்லாத ஒன்று வேறு நாட்டில் இருப்பதாகவும், தமிழ் மொழியில் பேசுவதை நாகரீகமற்றது என்று நினைத்தும் வாழ்வது இன்றும் உள்ளது.

- மொழியும் பண்பாடும் இழக்கப்படும்போது அந்த இனமே தன் அடையாளத்தை இழப்பதை தனபாலின் வாழ்க்கை மாற்றத்தால் உணர முடிகிறது.

- தான் வாழும் நாட்டில் வாழத் தெரியாதவனை எங்கு சென்றாலும் வாழமுடியாது என்பதை இன்றும் ஏற்றக்கொள்ளலாம்.

- இரண்டு மொழி பேசும் சூழலில் இருக்கும்போது தேவையான நேரங்களில் மட்டும் தாய் மொழி அல்லாத ஒன்று பேசப்படலாம்.

- தாய்மொழி தெரிந்தவர்களுடன் அம்மொழியில் பேசுவதைத் தவிர்ப்பது வாழும் மொழியாக இருக்கும் ஒரு மொழி அதன் அழிவை நோக்கிச் செல்ல வழி வகுக்கும்.

- மேலை நாட்டுக் கலாச்சார மோகம் நம் அடையாளத்தை இழக்கவைக்கும்.

- பண்பாடும் பாரம்பரியமும் இளையர்களால் கட்டிக் காக்கப்படவேண்டும். தனபாலின் மகள் வாழ்க்கை இதனை உணர்த்துகிறது.

- தமிழன் ஒவ்வொருவரும் தன்னால் ஆன உதவிகளை பிற தமிழருக்குச் செய்ய வேண்டும்.

- இருப்பதைக் கொண்டு மகிழ்வுடன் வாழ்வதை விட்டு பறப்பதற்கு ஆசைப்படக் கூடாது.

- இக்காலத்திற்குப் பொருந்தும் கருத்துக்கள் எவை என்பதைக் கூறி அதனைப் பொருத்தமான மேற்கோள் கருத்துக்களுடன் இணைத்து எழுதுதல் சிறப்பு.

Q5 பிள்ளைகளின் மனநிலையைப் பெற்றோர்கள் புரிந்துகொள்வதில்லை என்பதை காதல் என்னவிலை? என்ற நாடகத்தின் துணைகொண்டு ஆராய்க.

- வள்ளி தனக்குப் பிடித்த மணமகனைத் தேர்ந்தெடுப்பதில் அவளுக்குச் சுதந்திரம் இல்லை.
- தன் வாழ்க்கையில் தான் கண்ட சில அனுபவங்களும் அவளது தோழியருக்கு ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களும் வள்ளிக்குத் திருமணம் செய்வதில் இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.
- மணமகன் பணம், பதவி, அழகு, என்பனவற்றை மட்டும் கொண்டு இருப்பதை அவள் விரும்பவில்லை. மனதுக்குப் பிடித்த ஒரு மணமகனை அவள் விரும்புகிறாள்.
- இதனைப் புரிந்துகொள்ளாத அவளது பெற்றோர் அவர்களது ஆசைகளை விருப்பங்களை அவள் மீது திணிக்கும்போது அவள் திருமணத்தை வெறுக்கிறாள்.
- பெண்களை மேடை ஏற்றி மாப்பிள்ளைகளுக்கு விலை பேசுவது போல் பெண் பார்த்தல், கல்யாண மாலை நிகழ்ச்சியில் வள்ளியைக் கலந்துகொள்ளச் செய்தல் போன்ற நிகழ்வுகள் அவளுக்கு கசப்பான அனுபவங்களாக அமைகின்றன.
- இவற்றை அவள் விரும்பவில்லை என்பதை அவளது பெற்றோர்கள் புரிந்துகொள்ளவில்லை.
- அவளது தம்பி தனக்குப் பிடித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு அவளது பெற்றோர்கள் கடுமையான சட்டதிட்டங்களை விதிக்கின்றனர். அவனது ஆசைகளுக்கு முட்டுக் கட்டை போடுகிறார்கள். அவனது மனநிலையை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.
- இதுபோன்ற கருத்துக்களை விளக்கிப் பொருத்தமான மேற்கோள் கருத்துக்களூடன் இணைத்து எழுதலாம்.

Q6 சிங்கப்பூர் மாப்பிள்ளை என்ற நாடகம் வழி ஒரு வாசகன் அறியலாகும் விழுமியங்களை சான்றுகளுடன் விளக்குக.

- விழுமியங்கள் படைப்பிலக்கியங்களைப் படிக்கும் வாசகர்களுக்கு படிப்பினைகளாக அமைதல் அவசியம்.
- பிறந்தநாட்டிற்கு நன்றிக்கடனுடனும் வாழ வைத்த நாட்டிற்கு விசுவாசமாகவும் இருத்தல்.
- இதனை அனுபவம் அண்ணாமலை மற்றும் கோபால்சாமி கூற்றால் அறியலாம்.
- இளையர்கள் உண்மையான அன்புடன் கொண்ட காதலை மதிக்கவேண்டும்.சுந்தரலிங்கமும் செல்வியும் கொண்ட காதலை முதலில் செல்வியால் நிராகரிக்கப்பட்டலாம் சுந்தரலிங்கம் அதைக் கடைசிவரை காப்பாற்றப் பார்ப்பது இளையர்கள் கற்றுக் கொள்ளும் விழுமியம்.

- அனுபவம் அண்ணாமலை புலம்பெயர்ந்து வேறு நாட்டிற்குச் செல்லும்போது ஏறப்டும் பிரச்சனைகளைப் பற்றிப் பேசுகிறார்.

- தான் பிறந்த நாடு தனக்கு வாழ்வு தராத போது தாங்கள் சென்று வாழ்ந்த நாட்டின் அருமைகளை உணர்ந்து அதற்கு நன்றி பாராட்டவேண்டும் என்பத நாம் கற்றுக்கொள்ளும் மற்றொரு விழுமியம்

- வையாபுரி இங்குள்ள வெத்தலைக்கு ருசி இல்லை என்னும்போது அனுபவம் அண்ணாமலை ஆமாம் இங்குள்ள பணத்திற்கு மட்டும் ருசி உண்டா என்று கேட்பது பணத்தை மட்டும் நம் உறவுகள் பெரிதாக மதிப்பதை ஒரு விழுமியமாக கற்றுக்கொள்ளலாம்.

- தாய் சொல்லைத் தட்டாதே, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற பழமொழிகளை காலச் சூழலுக்கு ஏற்ப பிறருக்குத் துன்பம் விளைவிக்காத வகையில் நடந்துகொள்ளவேண்டும்.மகாதேவன் அவனது பெற்றோர்களிடம் பொய் சொல்வதோடு தன் திருமணத்தை மறைத்து வாழ்வது இளையர்களுக்கான விழுமியமாக சொல்லப்படுகிறது.

Q7 பாரதி பாரதிதாசன் இருவரின் கவிதைகளில் விரவியுள்ள தமிழ் மற்றும் தமிழர் பற்றிய சிந்தனைகளை ஒப்பிட்டு ஆராய்க.

- தமிழின் அருமை பெருமைகளை அறிந்து அதனை வாழும் மொழியாக்குவது நம் கடமை. ஆனால் இன்று தமிழ் பேசுவதும் அதனை வாழும் மொழியாக்குவதும் தனது கடமை அன்று பலரும் நினைக்கின்றனர்.

- தமிழின் நிலைகண்டு வருந்தி தமிழைப் பேணுவதற்குப் பல வேண்டுகோள் விடுக்கிறார்.

- தமிழ் நலிந்து வருவதையும் பிறமொழிகளின் ஆதிக்கம் பெருகி வருவதையும் கண்டு பாரதி அது தழைக்க நாம் என்ன செய்யவேண்டும் என்கிறார்.

- தமிழன் பாமரனாய் விலங்குகளாய் இல்லாமல் எதையும் சிந்திக்கும் தறன் இல்லாத உயிர்களுக்கு ஒப்பாக கூறுகிறார்.

- கம்பன் வள்ளவன் போல் படைப்பாளர்கள் தோன்ற வேண்டும். பிற நாட்டு சாத்திரங்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.

- பழம்பெருமை பேசுவதை விட்டுவிட்டு புதிய சிந்தனைகள் தோன்றினால்தான் தமிழ் வாழும் மொழி ஆகும்.

- ஆனால் பாரதி தாசன் தமிழ் மொழி தொடர்பான தன் கனவுகளை பெரிய பட்டிலியலிட்டு அது நிறைவேற்றுவது நம் கடமை. தன் கனவுகள் ஆசைகள் நிறைவேறும் நாள் எந்நாளோ என்கிறார்.

- தமிழைக்கற்பவர் தேவர்களுக்கு ஒப்பான புகழ் பெறுவர் என்று பாரதி கூற தாசனோ பிற நாட்டு அறிஞர்கள் நம்மைப் புகழவேண்டும் என்கிறார்.

- தமிழே நமக்கு எல்லாச் சிறப்புக்களையும் தரும் என்பது பாரதி ஆசை. அது இன்றே நிறைவேறுதல் என்பது பாரதி தாசனின் ஆசை.

Q8 புல் மற்றும் நூல் ஆகிய கவிதைகளில் இடம்பெற்றுள்ள கற்பனை மற்றும் இலக்கிய நயத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

- புல் என்பது பச்சை நிறத்தின் படுக்கை என்று கற்பனை செய்வது பாராட்டத்தக்கதாய் உள்ளது.
- மண்ணிற்கு வாள் முளைத்திருப்பது மனிதனுக்கு வாள் இருப்பதை நினைவூட்டுகிறது.
- பனித்துளி புல்லின் மீது இருப்பது இயற்கை ஆனால் கவிஞர் புல்லின் மீது படுத்திருக்கிறது அவரது கற்பனையை இன்னும் அழகாக்கிறது.
- பச்சைநிறம் எல்லா இடங்களிலும் இருந்தாலும் அதன் முத்திரை புல் மட்டுமே என்கிறார்.
- நூலை கவிஞர் மனிதனுடன் ஒப்பிட்டு தைக்கும் நூலை வேறுபடுத்துகிறார்.
- மனிதனை அவனது பல நிலைகளில் மனமாற்றத்தைக் கொண்டுவந்து சிந்திக்கும் ஆற்றலை வளர்த்து அவனை முழுமனிதனாக்குகிறது.
- ஆடை தைக்கும் நூல் மனிதனது மானத்தைக் காப்பாற்றுகிறது. இது மனதைக் காப்பாற்றுகிறது.
- இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்கூறி கற்பை நயம் அமையும் சிறப்பை எடுத்துக்கூறி விளக்கலாம்.
- துணி தைக்கும் நூலுக்கும் மனத்தை தைக்கும் நூலுக்கும் உள்ள ஒற்றுமையை ஆசிரியர் எடுத்துரைப்பது இரசிக்கத் தக்கது.
- கற்பைன நயம் கருத்துவெளிப்பாட்டைப் பொருத்தமான சான்றுகளுடன் எடுத்துக்கூறி விளக்கலாம்.

RAFFLES INSTITUTION
2018 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்

9574/1

## தாள் 1 (பகுதி 1)

19 SEPTEMBER 2018

TAMIL LANGUAGE AND LITERATURE
Paper 1 (Part 1)

**2 hours 15 mins**
(Total time for Part 1 and Part 2)

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2 முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் உரிய விடைகள் அனைத்தையும் **ஒரே விடைப்புத்தகத்தில்** எழுத வேண்டும்.

3 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

4 அகராதியைப் பயன்படுத்துதல்:

(அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் பயன்படுத்தலாம்.

அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் **1 மணி 15**

நிமிடங்கள்.

(ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப்

பயன்படுத்தக்கூடாது.

(இ) நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.** (35 மதிப்பெண்கள்)

Q1 பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டின் உறுதிப்பாட்டிற்கு முக்கியமானது.

கருத்துரைக்க.

Q2 "இக்காலக் கல்வியின் முக்கிய நோக்கம் அறிவைப் பெறுவது"

பயனளிக்கிறதா? விவாதிக்க.

Q3 நேரத்தைத் தள்ளிப் போடாதே; தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்
---ஷேக்ஸ்பியர்

Q4 பின்வரும் சூழலைக் கருத்தில் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

**உலகில் ஏழ்மை நீங்க வேண்டும் !**



H

RAFFLES INSTITUTION
2018 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

**தமிழ் மொழி, இலக்கியம்**
9574/1
**தாள்** 1 (**பகுதி 2)**

TAMIL LANGUAGE AND LITERATURE 19 SEPTEMBER 2018
Paper 1 (Part 2)

2 hours 15 minutes
Additional Materials: Answer Paper (Total time for Part 1 and Part 2)

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 முதல் பகுதியின் முகப்பு அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்

இவ்வினாத்தாள் 4 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது

**'அ' பிரிவு**

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக.**

உலக மக்களின் மனதில் உண்மையான அமைதி இல்லையெனில், சமுதாயம் முன்னேற்றமடைவதாக யாராலும் கூற முடியாது. நாடுகளுக்கு இடையிலும் சரி, மனிதர்களுக்கு இடையிலும் சரி, யார் பெரியவன் என்பதை வெளிக்காட்டுவதற்காக நடைபெறும் போட்டிகள் நிறைந்த இவ்வுலகில், அமைதிக்குப் பதிலாக வாழ்விற்கான Q1______________ போராட்டமே மிஞ்சும். எனவே, இறையுணர்வின் கொள்கைகளால் நிலைநிறுத்தப்படாத எந்தவொரு நாகரிகமும் நாகரிகமே அல்ல.

இங்கு பிரச்சனை என்னவெனில், இவ்வுலகத்தின் தலைவர்களாகட்டும், அத்தலைவர்களை பின்பற்றும் தொண்டர்களாகட்டும், அவர்கள் யாருமே இறையுணர்வின் விஞ்ஞானத்தில் கல்வி கற்கவில்லை. அதனால் நாடுகளை வெற்றிகரமாக Q2______________ நடை முறை விளக்கங்களை அவர்களால் வழங்க முடிவதில்லை. எனவே, இறையுணர்வு பற்றிய விஞ்ஞானத்தில் பொது மக்களைப் பயிற்றுவிக்க Q3______________ திட்டங்கள் நிச்சயம் தேவைப்படுகின்றன.

இன்றைய சமுதாயத்தில் யாராவது எளிமையான வாழ்க்கை முறையை மேற்கொண்டால் அவரை மற்றவர்கள் Q4______________ பார்க்கக்கூடிய சூழ்நிலையைக் காணலாம். மக்கள் தங்களுடைய உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படை தேவைகளுக்கு உழைப்பதற்குப் பதிலாக, Q5______________ நாகரிக முன்னேற்றத்திற்காக, நவீன வசதிகள் முதலியவற்றிற்காக கடுமையாகப் போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

## <u>‘ஆ’பிரிவு</u>

**<u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (1)** **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, கேட்கப்படும் வினாக்களுக்கு உமது சொந்த நடையில் விடை எழுதுக.**

“வாழ்க்கை வெறுத்து விட்டதால் வாழ்வதில் எந்தப் பயனும் தெரியவில்லை. எதுவும் மாறும் என்ற நம்பிக்கை இல்லை என்று எண்ணுவோர் எண்ணிக்கை பெருகிவருவது கவலை அளிக்கிறது. வாழ்வில் நம்பிக்கை இழந்து, **<u>பிடிமானம்</u>** தெரியாமல், ஒரு விளிம்பு நிலையில் மட்டும் மக்கள் யோசிப்பது பெருகிவரும் நுகர்வு கலாச்சாரத்தின் பின்விளைவு என்றும் சொல்லலாம். நுகர்வு கலாச்சாரம் (Consumption culture) என்பது நாம் பொருட்களை அதீதமாக வாங்கிக் குவிப்பது. பொருட்களின் மதிப்பு உயர்ந்தும் மனிதர்களின் மதிப்பு குறைந்தும் ஒரு அசுர வேகத்தில் பொருட் குவிப்பில் மக்கள் ஓடுவதில் முதலில் நசுங்கிப்போவது மனித உறவுகளே. சாலையில் தூங்கும் மனிதர்கள் கூட நாளை பற்றிய நம்பிக்கையில்தான் ஆழ்ந்து உறங்குகிறார்கள். பொருள் வசதியும் தனிமையும் கொண்டோர் தான் அதிகம் மரணம் பற்றி யோசிக்கிறார்கள்.

தற்கொலைக்குப் பல காரணங்கள் உண்டு. துக்க நோய், மனச்சிதைவு, ஆளுமைக் குறைபாடுகள் போன்ற மனநோய்கள், குடும்பப் பிரச்சினைகள் என நிறைய உள்ளன. ஆனால் இந்தச் சமூகக் காரணங்களில் நகர வாழ்வின் **<u>அந்நியத்தன்மை</u>** கொண்ட வாழ்க்கை முறை மிகவும் முக்கியமானது. சமூக உறவுகள் மற்றும் குடும்ப உறவுகளிலும் இடைவெளி ஏற்பட்டு, வேலை சார்ந்த உறவுகள் இயந்திரமயமாக இயங்கும்போது, துக்கப்படும் மனம், பிடிமானம் இன்றித் தவிக்கிறது.

இருத்தலியல் தத்துவத்தின் படி (Existentialist philosophy) வாழ்க்கை என்பதற்குப் பெரிய அர்த்தமில்லை. நாம் தான் அதற்கு அர்த்தம் கொடுக்கிறோம். வாழ்வில் சலிப்புத்தன்மை வரும்போது குறிக்கோள் இல்லாமல் மனம் திரியும். வாழ்க்கையின் சகலத்தையும் விலக்கி விட்டு எங்காவது போகலாம் என்று தோன்றும். எழுத்தாளர் அம்பை ‘வீட்டின் மூலையில் ஒரு சமையல் அறை’ என்ற சிறுகதையில் அந்த மார்வாடிப் பெண் தான் வாழ்க்கை முழுவதும் எத்தனை ரொட்டிகள் சுட்டிருப்போம் என்று கணக்கிடுவார். அது போல நம் வாழ்க்கை கூட இயந்திர கதியாக, அர்த்தம் இல்லாமல் தோன்றும்.

**“**நான் வாழ்ந்து யாருக்கு என்ன லாபம்**?”** என்று கேட்போர் உண்டு. வேலை, குடும்பப் பொறுப்புகள் முடிந்துவிட்டால் அடுத்து என்ன செய்வது என்று தெரியாத பல முதியவர்களைப் பார்க்கிறோம். எந்த வயதிலும் வாழ்க்கை அசதியாகவும் அர்த்தமில்லாததாகவும் தோன்றலாம். ஆனால் மனித வாழ்க்கை எவ்வளவு மகத்தானது? பல லட்சம் ஆண்டுகள் பரிணாம வளர்ச்சியில் நமக்குக் கிடைத்த அற்புத வாய்ப்பு.

நம் உடலும் மனமும் கொண்டுள்ள சக்தி தான் மனித இனத்தை இந்த உலகத்தின் தலைமையாக ஆக்கி உள்ளது. நம்மால் என்ன செய்ய முடியாது? மனம் நினைக்கின்ற அனைத்தையும் செய்து முடிக்க வல்லவர்கள் நாம். ‘‘என்னவெல்லாம் இல்லை என்னிடம்’’ என்று பட்டியல் இடுவதற்குப் பதில் ‘‘என்னவெல்லாம் என்னிடம் இருக்கிறது’’ என்று

பட்டியல் போட்டால் அது வாழ்க்கையின் கண்ணோட்டத்தையே மாற்றிவிடும். வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்க ஒன்று செய்யலாம். நம்மால் பிறருக்கு என்னவெல்லாம் செய்ய முடியும் என்று யோசித்துப் பிறருக்குக் கொடுப்பது தான் மன நலத்தைக் காக்கும் பெரும் மருந்து.

துக்கம் சுய நலமான உணர்வு. எனக்கு இது இல்லையே என்ற சுய பரிதாபம் தரும் சோகம் தான் துக்கத்தில் **பிரதான** பகுதி. தன் மேலுள்ள சிந்தனையை மாற்றப் பிறருக்கு உதவ ஆரம்பியுங்கள்.புதிய நம்பிக்கைகள் பிறந்து பல பிடிமானங்கள் வாழ்க்கையில் உள்ளது தெரியும். எல்லா உலகத் தலைவர்களும் இதை உணர்ந்தவர்கள் தான். டால்ஸ்டாய் மோசமான தாம்பத்திய வாழ்க்கையை அனுபவித்தவர். ஆனால் இலக்கியம் அவரை இளைப்பாற்றியது.

தேசத்துக்கே பிதாவான காந்திஜியின் புதல்வர் ஹரிலால். அவருக்கும் காந்திக்கும் ஒரே மோதலும் முரண்பாடும் தான். ஆனால் தேசப்பணி காந்திஜியைச் சோகத்தில் ஆழ்ந்து விடாமல் பார்த்துக் கொண்டது. வாழ்க்கையில் நம்பிக்கைகள் முக்கியம். நமக்கேற்ற பிடிமானங்களைத் தேர்வு செய்து கொள்வது மிக முக்கியம். அப்போது தான் வாழ்வில் நாம் வைத்துள்ள குறிக்கோள் நம்மைச் சீராக இயக்கிச் செல்லும். சொந்த வாழ்வின் சோகங்களையும் புறந்தள்ள வைக்கும்.

**வினாக்கள்**

Q6 நுகர்வு கலாச்சாரம் எதைக் குறிக்கிறது? இதன் விளைவுகள் யாவை என்பதை முதல் பத்தியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (6 மதிப்பெண்கள்)

Q7 இருத்தலியல் தத்துவத்தின் படி வாழ்க்கை ஏன் அர்த்தம் இல்லாமல் தோன்றுகிறது? (6 மதிப்பெண்கள்)

Q8 **'மனித வாழ்க்கை எவ்வளவு மகத்தானது'**? என்ற வரியின் மூலம் கட்டுரை ஆசிரியர் எதை உணர்த்த விரும்புகிறார்? (6 மதிப்பெண்கள்)

Q9 எப்போது பல பிடிமானங்கள் வாழ்க்கையில் தோற்றுவிக்கும்? இதற்கான விளக்கத்தை ஆதாரங்களுடன் விளக்குக.(6 மதிப்பெண்கள்)

## Q10 சொற்பொருள் (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ) பிடிமானம்

ஆ) அந்நியத்தன்மை

இ) பிரதான

RAFFLES INSTITUTION
2018 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்

9574/2

**தாள் 2** 19 September 2018

**TAMIL LANGUAGE AND LITERATURE** **1 hour**
**Paper 2**

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** எழுத வேண்டும்.

**<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>** (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

**<u>பனுவல் ஒன்று</u>**

பயம் மனித உணர்ச்சிகளில் மிக இயல்பானது. அது தேவையானதும் கூட. பல சந்தர்ப்பங்களில் அது நம் பாதுகாப்பிற்கு உதவி முட்டாள்தனமாகவும், கண்மூடித் தனமாகவும் நாம் நடந்து கொள்ளாமல் இருக்க உதவுகிறது. ஆபத்தான சூழ்நிலைகளில் அஜாக்கிரதையாய் இருந்து விடாமல் நம்மைத் தடுக்கிறது. எனவே தான் "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" என்றார் திருவள்ளுவர்.

பலரும் தண்டனைக்குப் பயந்து குற்றங்களில் ஈடுபடாமல் இருக்க முக்கியக் காரணம் பயம் தான். அந்தப் பயம் இல்லா விட்டால் சமூகத்தில் சீரழிவே ஏற்படும்.விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் ஆபத்தான செயல்களில் ஈடுபடப் பயப்படுவதே புத்திசாலித்தனம். குற்றங்களில் ஈடுபட அஞ்சவே வேண்டும். இதில் எல்லாம் பயம் ஏற்படுவது இயற்கை. நமக்கு அளித்திருக்கும் பாதுகாப்பு அரணே. தோன்றியபடியெல்லாம் நடந்து கொள்ளாமல் தடுத்து நம்மை சிந்திக்க வைப்பதால், நம் வேகத்தைப் பல சந்தர்ப்பங்களில் கட்டுப்படுத்துவதால் பயம் நமக்கு நன்மையைச் செய்கிறது என்பதில் சந்தேகமேயில்லை.

ஆனால் பயம் ஒரு எல்லையை மீறும் போது, அறிவு சாராமல் இருக்கும் போது அது நமக்கு நன்மையை விட அதிக தீமையையே செய்வதாகிறது. அந்த சமயங்களில் அது பாதுகாப்பு அரணாக இருப்பதற்குப் பதிலாக அடிமைச்சங்கிலியாக மாறி நம்மை செயலிழக்க வைத்து விடுகிறது. நம்மை செயலிழக்க வைக்கும் பயத்திற்கு மிக முக்கிய காரணம் விளைவுகளைக் குறித்து நமக்கு ஏற்படும் விபரீதக் கற்பனைகளே. என்ன எல்லாம் நேரக் கூடும் என்று ஒருவன் கற்பனைக் குதிரையைத் தட்டி விடும் போது அவன் மனம் வரக் கூடிய பயங்கர விளைவுகளை எல்லாம் பட்டியல் இட ஆரம்பித்து விடுகிறது. ஆனால் என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பிக்கும் போது பயம் விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்து விடுகிறது. சமாளிப்பது எப்படி என்று தெரியாமல் அவன் ஸ்தம்பித்துப் போகிறான்.

அதே போல் புதியதாக ஒன்றைத் தொடங்கும் முன் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்கிற பயம், குறைத்து மதிப்பிட்டு விடுவார்களோ என்கிற பயம், தோற்று விட்டால் என்ன செய்வது என்கிற பயம் ஏற்பட்டு அந்தச் செயலை ஆரம்பிக்கவே விடாமலும் செய்து விடுகின்றது. வெற்றிக்காகவே முயல்கிறோம் என்றாலும் தோல்வி வெட்கப்பட வேண்டிய ஒன்றல்ல.

**பனுவல் இரண்டு**

இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் அமெரிக்கா பொருளாதார நிலையில் மிகவும் சீரழிவை சந்திக்க வேண்டி வந்தது. வேலையில்லாத் திண்டாட்டம், வங்கிகளில் பணமில்லாமை எல்லாம் மக்கள் மனதில் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி பெரியதொரு பயத்தை ஏற்படுத்தியது. அப்போதைய ஜனாதிபதி பொருளாதாரத்தில் பட்டம் பெற்றவர். ”இப்படிப்பட்டவராலேயே நம் நாட்டின் இன்றைய நிலையைத் தவிர்க்க முடியவில்லையே, இனி நம் எதிர்காலம் என்ன?” என்ற பயம் மக்களிடம் பரவி இருந்தது.

அந்த சமயத்தில் தான் ஃப்ராங்க்ளின் டிலானோ ரூஸ்வெல்ட் அமெரிக்க அதிபராகப் பதவியேற்றார். அவர் தன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய முதல் உரையில் சொன்ன செய்தி வரலாற்று சிறப்பு மிக்கது. “நாம் பயப்பட வேண்டிய ஒரே விஷயம் பயமே. ஏனெனில் அந்த இனம் புரியாத, ஆதாரமற்ற, உண்மையைச் சார்ந்திராத பயம் நம் பின்னடைவை மீறி முன்னேற விடாமல் நம்மைச் செயலிழக்க வைப்பதில் வல்லதாக இருக்கிறது” என்றார்.அவர் அதிபராக இருந்த காலத்தில் இரண்டாம் உலகப் போரையும் மீறி அமெரிக்கா பொருளாதாரத்தில் முன்னேறியதோடு வல்லரசு நாடாகவும் உருமாறியது. அதற்கு மிக முக்கியக் காரணம் பயத்தை நிராகரித்து தைரியத்தைத் துணை கொண்டு செயல்படும் ஒரு தலைமை அந்த நாட்டிற்கு இருந்தது தான் என்பதில் சந்தேகம் இல்லை.

பயம் இயல்பாகவே வந்து விடுகிறதே, அதை விலக்கி வெற்றி பெறுவது எப்படி என்று கேட்போர் முதலில் பயத்திற்கான காரணங்கள் கற்பனையா இல்லை உண்மை தானா என்று அலசுங்கள். அந்தக் காரணங்கள் உண்மைக்குப் புறம்பான அனுமானத்தின் அடிப்படையில் ஏற்பட்டவையாக இருந்தால் உறுதியான மனத்தோடு புறக்கணியுங்கள். ஏனென்றால் அதிக காலம் அந்த எண்ணங்களிலேயே இருந்தால் அதையே உண்மை என மனம் நம்ப ஆரம்பித்து விடும். பின் பயம் நம்மை ஆட்கொள்ளவும் ஆரம்பித்து விடும். ஒருவேளை அந்தக் காரணங்கள் கற்பனை அல்ல, உண்மையின் அடிப்படையில் தான் எழுந்தவை என்றானால் அந்தக் காரணங்களை அங்கீகரியுங்கள்.

மரியோ புஸோ எழுதிய “காட் ஃபாதர்” நாவலில் முக்கிய கதாபாத்திரமான காட் ஃபாதர் பயத்தையே அறியாதவனாகப் படைக்கப்பட்டது. அதற்கு முக்கியமான காரணம் அவன் ”ஒரு மனிதனுக்கு ஒரு விதி தான் இருக்க முடியும்” என்று விஷயத்தை உறுதியாக நம்பியது தான். என்ன நடக்குமோ அது நடந்தே தீரும் என்றால் பின் பயந்து நடுங்க என்ன இருக்கிறது? இது கூட ஒரு வகையில் பயத்தைப் போக்கும் சித்தாந்தமல்லவா?

## <u>வினாக்கள்</u>

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியங்களிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (**பனுவல் ஒன்று**) (4 மதிப்பெண்கள்)

   பல சந்தர்ப்பங்களில் பயம் நம் பாதுகாப்பிற்கு உதவி, முட்டாள்தனமாகவும், கண்மூடித் தனமாகவும் நாம் நடந்து கொள்ளாமல் இருக்க உதவுகிறது

   அ) ஆறாம் வேற்றுமைத் தொகை

   ஆ) உம்மைத்தொடர்

2. ஆட்சியாளர்களைப் பயம் எவ்வாறு அலைக்கழித்தது என்பதற்கான சான்றுகளை **இரண்டாம் பனுவலின்** துணைகொண்டு விளக்குக. (4 மதிப்பெண்கள்}

3. " அறிவுப்பூர்வமாகச் சிந்திக்காமல் ஏற்படும் பயம் தீமையே தருகிறது " என்பது குறித்து **இரு எழுத்தாளர்களுக்கும்** இடையே உள்ள கருத்து வேறுபாட்டினை விளக்குக. (7 மதிப்பெண்கள்)

4. பயம் மக்களை அலைக்கழிக்காமல் இருக்க கவனமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எந்தப் பனுவல் ஆசிரியர் கூறுவது ஏற்புடையது என்று நினைக்கிறாய் என்பதை இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

**முற்றும்**

H

RAFFLES INSTITUTION
2018 YEAR 6 PRELIMINARY EXAMINATION
Higher 2

---

## தமிழ் மொழி, இலக்கியம்
9574/3
**தாள் 3**

**TAMIL LANGUAGE AND LITERATURE** 17 SEPTEMBER 2018
**Paper 3**

3 hours

Additional Materials: Answer Paper

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுத வேண்டும்.

இவ்வினாத்தாள் **3** அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.

**<u>முக்கியக் குறிப்புகள்</u>**

**மொத்தம் <u>நான்கு</u> வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

## <u>'அ' பிரிவு</u>

**<u>நாவல்</u>**

Q1 'பால்மரக்காட்டினிலே' என்னும் நாவலில் 'சூழ்நிலைகள் மனிதர்களின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றிப் போட்டு விடுகின்றன'-என்பதைப் 'பால்மரக்காட்டினிலே' நாவலைக் கொண்டு விளக்குக (25 மதிப்பெண்கள்)

Q2 தனிமனிதர் வாழ்வில் பாலன் தன் கொள்கையில் உறுதியாக இருந்ததால் சந்தித்த **<u>தொல்லைகள்</u>** ஏராளம் என்பதைப்'பால்மரக்காட்டினிலே' என்னும் நாவல் வழி ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## <u>'ஆ' பிரிவு</u>

**<u>சிறுகதை</u>**

Q3 'விடியுமா' எனும் கதை சிறுகதைக்குரிய கூறுகளைக் கொண்டு அமைந்துள்ளது என்பதை நீ ஏற்றுக் கொள்கிறாயா? (25 மதிப்பெண்கள்)

Q4 சிறுகதையில் இடம்பெறும் ஒரு கதாபாத்திரமே கதையின் கருப்பொருளை வெளிக்கொணர வைக்கிறது என்பதை 'ஆயிஷா' எனும் சிறுகதையின் வழிநின்று நிறுவுக. (25 மதிப்பெண்கள்)

## **‘இ’ பிரிவு**

### **நாடகம்**

Q5 திருமணம் எனும் சமூகச் சிக்கல் செல்வியையும், வள்ளியையும் அலைக்கழிக்கச் செய்தது என்பதை இரு நாடகங்களின் வழி ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

Q6 மகாதேவன்,சுந்தரலிங்கம் இருவரும் இரு வேறுபட்ட கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளனர். விளக்கி எழுதுக. (25 மதிப்பெண்கள்)

## **‘ஈ’ பிரிவு**

### **கவிதை**

Q7 அன்புடைமை பற்றி திருவள்ளுவர் கூறும் வழி நடந்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என கண்ணதாசன் கூறும் இருவருடைய அறிவுரைகளையும் தெளிவாக விளக்குக.
(25 மதிப்பெண்கள்)

Q8. சங்ககாலக் கவிதைகள் மூலம் வாழ்க்கைத் தத்துவங்களை விவரித்து எழுதுக.
(25 மதிப்பெண்கள்)

# ST. ANDREW'S JUNIOR COLLEGE

## Preliminary Examination 2018

## Tamil Language and Literature

**3 HOURS**

**PAPER 1**

**9574/1**

**29 AUG 2018**

**குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.

## உயர்தரம் 2

### தமிழ் மொழி, இலக்கியம்

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப்பற்றி ஏறத்தாழ 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக ( 35 மதிப்பெண்கள்)

Q1 கீழ்க்காணும் படத்தின் துணைகொண்டு நம் பாரம்பரியக் கலைகளைப்பற்றியும் அதனைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியம் பற்றியும் விளக்கிக் கட்டுரை வரைக.







Q2 பொறுப்பில்லாமல் சுற்றிக்கொண்டிருந்த உனக்குப் பொறுப்புணர்வை ஏற்படுத்திய ஒரு சம்பவத்தைப்பற்றியும் அந்தச் சம்பவம் உனக்கு எவ்வாறு பொறுப்புணர்வை ஏற்படுத்தியது என்பதுபற்றியும் விவரித்து எழுதுக.

Q3 ‘குடும்பப் பொறுப்பு பெற்றோர்களுக்கு மட்டுமே உரியதல்ல’ – இது குறித்து உன் கருத்துகளை விளக்கி எழுதுக

Q4 ‘வாழ்க்கையின் வெற்றிக்கு ஆதாரமாக அமைவது பொருளாதாரமே’ – விவாதிக்க

முற்றும்

**‘அ பிரிவு‘**

**முன்னுணர்வுக் கருத்தறிதல்** (மதிப்பெண்கள் 5)

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப்பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

உணவின் தேவை குறித்தும் அதன் தன்மை குறித்தும் நன்கு அறிந்திருந்தனர் நம் முன்னோர்கள். ஆகவே பசிப்பிணி போக்குவதற்கான **Q1**____________ முதன்மை நோக்கமாகக்கொண்டு வாழ்ந்த பெருமைக்குரிய சமூகம் நம் தமிழ்ச் சமூகமாகும். தமிழர் பண்பாடுகளில் விருந்தோம்பல் என்பது மிகமுக்கியமான கூறாகும். இப்போது நாம் வீட்டிற்கு வரும் **Q2**____________ விருந்தினர் என்று அழைக்கிறோம். ஆனால் பண்டைக் காலத்தில் வீடு தேடிவரும் முன் அறியாதவர்களையே விருந்தினர் என்று அழைத்தனர்.

போக்குவரத்து வசதிகள் **Q3**__________ அக்காலத்தே கால்நடையாகத்தான் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. அப்படிச் செல்லும்போது உணவிற்கும்**,** தங்குவதற்கும் முன்பின் அறியாதவர்களையே **Q4**__________ இருக்கும் சூழல் அக்காலத்தில் நிலவியது. ஆகவே**,** புதிதாக வருவோர்க்கு பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பல் பண்பாடு தமிழக இல்லங்களில் உருவாயிற்று. இப்படி வருவோர்கள் இளைப்பாறுவதற்கும்**,** இரவு நேரங்களில் தங்குவதற்கும்தான் வீடுகளில் திண்ணை வைத்துக் கட்டினார்கள். விருந்து என்பது நாம் அளிக்கும் **Q5**___________ இல்லை**;** விருந்தளிக்கும் முறையில் உள்ளது. நம் இல்லத்திற்கு வருகைதரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உணவு பரிமாறுவது நமது பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகும்.

\`ஆ பிரிவு\`

சுயவிடைக் கருத்தறிதல் ( 30 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து**, **அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை தருக.**

மனிதன் விண்ணைத் தொடுமளவிற்கு உயர்ந்து விட்டான்; வேற்றுக் கிரகங்களுக்குச் செல்லும் நிலைக்கும் வித்திட்டுவிட்டான்; நினைத்தபடி எல்லாம் சாதித்துவிட்டான். மனிதனின் இத்தகைய வளர்ச்சியினால் சமுதாயத்தில் அவன் மதிப்பு நாளுக்குநாள் கூடி வருகிறது. மனிதன் மேலும் தன் அறிவாலும், ஆற்றலாலும் உலகைச் சுருக்கி, உலகுடன் ஒன்றி, முன்னேறிக் கொண்டிருக்கிறான். அவன் மருத்துவ அறிவியலின் துணைகொண்டு, புதிய உலகினைப் படைக்கும் முயற்சியில் பிறப்பு, இறப்பினைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு இயற்கைக்கு இணையான ஆற்றல் பெற்றவனாகவும் திகழ்கின்றான். இப்படி அவனது புறவாழ்க்கையில், எல்லாம் அவனது கைகளுக்குள் அடங்கி, அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பதாயுள்ளன. ஆனால்

அவனது அகவாழ்க்கையில் அனைத்துமே அவன் கைகளை மீறிய நிலையில் அவனது கட்டுப்பாட்டிற்குள் அடங்காமலிருக்கின்றன. காரணம், புறவாழ்க்கையில் ஆண்,பெண் இருவரும் தங்களுக்குத் தேவையானவற்றைக் கற்று, பெற்று, அதன்படி நடக்கவும் செய்கின்றனர்; ஆனால் அகவாழ்க்கையில் வாழ்க்கைக்குத் தேவையான அறப் பண்புகளைக் கற்றுக்கொள்வதும் இல்லை; வளர்த்துக் கொள்வதும் இல்லை. இதன் காரணமாகத்தான் புறஉலகில் ஆயிரம் பேர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளும் அவர்களுக்கு அகவாழ்க்கையில் ஐந்து பேர்களுடன்கூடச் சேர்ந்து வாழமுடிவதில்லை.

இல்லறத்தின் மாண்பினைப் பேணாதவர்கள், புற உலகில் புகழினை நிலைநாட்டுவது என்பது நெருடலுக்கு இடம் கொடுப்பதாயுள்ளது. நாம் பெரிய விருட்சமாக வானளாவ வளர்ந்துவிட்டாலும்கூட, அடிப்படையில் வேரிலிருந்து தோன்றியவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது; நாம் கிளையில் அமர்ந்துகொண்டு மரத்தை வெட்டுபவர்களாகவும் விளங்கக்கூடாது. இச்செயல்கள் அனைத்தும் நமக்கே ஊறு விளைவிப்பதாகிவிடும். ஆகவே நாம் அடிப்படையில் பின்பற்றத் தவறிவிட்ட அறவுரைகளை ஏற்று அறப்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இல்லறம் என்னும் நல்லறத்தின் ஆரோக்கியத்தைப் பேணுபவர்களாக விளங்குதல் வேண்டும். இதன் மூலமே மனிதன் முழுமையடைய முடியும். இதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளும் அளவில் நம் கண்முன் வந்து நிற்பது திருக்குறள். இல்லற வாழ்வின் இனிமையை அறவுரையாக எடுத்துக் கூறும் நூல்கள் பல இருப்பினும், அவற்றுள் அன்றும் இன்றும், என்றும் எளிமையான, சிறந்த கருத்துகளை வழங்குவது திருக்குறளேயாகும்.

'மனிதனை மனிதனாக்கும்' முயற்சியினைத் திருக்குறள் மேற்கொண்டுள்ள காரணத்தினால்தான் அது இன்றைய வாழ்விற்கும் ஏற்புடையதாகிறது. மனிதன் வாழும் காலந்தோறும் திருக்குறளுக்கு இடமுண்டு என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. கால மாற்றத்தின் விளைவாக பலதரப்பட்ட நூல்களையும், அறிவியல், தொழில்நுட்ப நூல்களையும் படிக்கும் மனிதன், எளிய நூலான திருக்குறளைப் பழக்கத்தில் கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கது. இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் வாழும் மனிதன் மனநலத்தைப் பேண முடியாமல் பாதிப்பிற்குள்ளாகும்போது மன அமைதியைத் தேடி ஆன்மீகம், தியானம், யோகா என்று பலவற்றிலும் பயிற்சி பெறுவதில் ஆர்வம் காட்டுகிறான். திருக்குறள் போன்ற அறநூல்களைக் கைவிட்டதன் விளைவே இது. இளமையிலிருந்தே இதனைக் கைக்கொள்ளப் பெற்றிருந்தால் வளர்ந்த நிலையில் வெவ்வேறு மனப்பயிற்சிகள் தேவையில்லை. திருக்குறளைப் படிப்பதோடு மட்டுமின்றி அதன்படி நடந்துகொண்டாலே வாழ்வு செம்மையாகும்.

திருக்குறளைப் பள்ளி, கல்லூரியில் கற்றதோடு, பயன்படுத்தாமல் நிறுத்திவிட்டதால்தான், இன்று நாம், குடும்பம், சமுதாயம் என்றளவில் துன்பப்பட நேரிடுகின்றது. இத்துன்பத்தைக் களைந்திட நமக்கு இன்றும் துணைநிற்கிறது திருக்குறள். நம் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் துன்பங்கள், சந்தேகங்கள்

ஆகியவற்றைப் போக்கிக்கொள்ளவும், வாழும் நெறிமுறைகள்பற்றி அறிவுத் தெளிவினைப் பெறவும் 'வாழ்வியல் ஆலோசனைகள்' வழங்கும் பெட்டகமாக இந்நூல் செயல்படுகிறது. எக்காலக்கட்டத்தில், எந்த இடத்தில், எத்தகைய மனிதர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் இயல்புகள், நடத்தைகள் இந்நூலில் உள்ளபடிதான் இருக்கமுடியும், அல்லது இருக்க வேண்டும் என்பதை அன்றே உணர்ந்து எழுதியிருக்கிறார் வள்ளுவர். மனிதனின் இரசனைக்கேற்ப அன்றே திருக்குறளைக் குறைந்த அடிகளில் தந்து, நிறைந்த பொருள்தரும் அளவில் உலகையே அளந்து நிற்கிறார் வள்ளுவர். இத்தகைய திருக்குறள் காட்டும் இல்லறம், இன்றைக்கும் பொருந்தும் நிலை இங்குச் சிறப்பாக ஆக்கம் பெறுகின்றது.

**வினாக்கள்**

Q6 மனிதன் பெற்றதாகவும் பெறத் தவறியதாகவும் கட்டுரை சுட்டுவன யாவை?

(மதிப்பெண்கள் 6)

Q7 ஊறு விளைவிக்கும் செயல் எது? அதனைக் களைய நாம் மேற்கொள்ள வேண்டியவை யாவை? (மதிப்பெண்கள் 6)

Q8 நமது அன்றாட வாழ்வில் மனநலம் பேண முடியாது போவதற்கான காரணம் என்ன? மனநலம் பெருக்க நாம் மேற்கொள்ள வேண்டுவன யாவை?
(மதிப்பெண்கள் 6)

Q9 திருக்குறளை எக்காலத்திற்கும் பொருந்தும் நூல் என்று கட்டுரை குறிப்பிடுவதேன்? (மதிப்பெண்கள் 6)

Q10 <u>சொற்பொருள்</u> (மதிப்பெண்கள் 6)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.

அ திகழ்கின்றான்.

ஆ ஊறு

இ களைந்திட

(முற்றும்)

# Answers விடைகள்

1 பணியை
2 உறவினர்களை
3 இல்லாத
4 சார்ந்து, நம்பி
5 உணவில்

Q6 மனிதன் பெற்றதாகவும் பெறத் தவறியதாகவும் கட்டுரை சுட்டுவன யாவை?

மனிதன் நினைத்தபடி எல்லாம் சாதித்துவிட்டான். இத்தகைய வளர்ச்சியினால் சமுதாயத்தில் அவன் மதிப்பு நாளுக்குநாள் கூடி வருகிறது. மனிதன் மேலும் தன் அறிவாலும், ஆற்றலாலும் உலகைச் சுருக்கி, உலகுடன் ஒன்றி, முன்னேறிக் கொண்டிருக்கிறான். அவன் பிறப்பு, இறப்பினைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு பெரும் ஆற்றல் பெற்றவனாகத் திகழ்கிறான்._இது அவன் பெற்ற சிறப்பாகும்._ ஆனால், அகவாழ்க்கையில் வாழ்க்கைக்குத் தேவையான அறப் பண்புகளைக் கற்றுக்கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் இல்லை. இது அவன் பெறத் தவறியதாகும்.

Q7 ஊறு விளைவிக்கும் செயல் எது? அதனைக்களைய நாம் மேற்கொள்ள வேண்டியவை யாவை?

குடும்பத்தின் பெருமையை அவசியத்தைப் புறக்கணித்துவிட்டு வெளி உலகில் தம் புகழினை நிலைநாட்டுவது என்பது தவறான செயலாகும். நாம் அடிப்படையில் பின்பற்றத் தவறிய அறவுரைகளை ஏற்று அறப்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். நாம் எப்போதும் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பேணுபவர்களாக விளங்குதல் வேண்டும். அப்படி இல்லாது புறச் செயல்களில் மட்டும் நாட்டம் காட்டுவது ஊறுவிளைவிக்கும் செயலாகும்.

Q8 நமது அன்றாட வாழ்வில் மனநலம் பேண முடியாது போவதற்கான காரணம் என்ன? மனநலம் பெருக்க நாம் மேற்கொள்ள வேண்டுவன யாவை?

இன்றைய உலகின் பரபரப்பான சூழ்நிலை காரணமாக மனிதன் மனநலத்தைப் பேண முடியாமல் பாதிப்பிற்குள்ளாகிறான்.

நாம் இளமையிலிருந்தே திருக்குறளைப் படிக்க வேண்டும். திருக்குறளைப் படிப்பதோடு அதன்படி நடந்துகொண்டால் மனநலம் பேணலாம்.

Q9 திருக்குறளை எக்காலத்திற்கும் பொருந்தும் நூல் என்று கட்டுரை குறிப்பிடுவதேன்?

நம் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் துன்பங்கள், சந்தேகங்கள் ஆகியவற்றைப் போக்கிக்கொள்ளவும் வாழும் நெறிமுறைகள்பற்றி அறியவும் இந்நூல் பயன்படுகிறது. எக்காலக்கட்டத்தில், எந்த இடத்தில், எத்தகைய மனிதர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் இயல்புகள், நடத்தைகள் இந்நூலில் உள்ளபடிதான் இருக்கமுடியும், என்பதை அன்றே உணர்ந்து எழுதியிருக்கிறார் வள்ளுவர். திருக்குறளைக் குறைந்த அடிகளில் தந்து, நிறைந்த பொருள்தரும் வகையில் படைத்துள்ளார் ஆகவே இன்றைக்கும் பொருந்தும் நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

10

அ விளங்குகிறான்

ஆ கேடு

இ நீக்கிட/ போக்கிட

**ST. ANDREW'S JUNIOR COLLEGE**

**Preliminary Examination 2018**

**Tamil Language and Literature**

**1 HOUR**

**PAPER 2) E – EXAM)**

**9574/2**

**29 AUG 2018**

**குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன .

3 கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

**சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

## பனுவல் ஒன்று அரவணைப்பு

குழந்தைப் பருவம் மற்றும் இளமைப் பருவத்திற்கு இடைப்பட்ட 'வளர் இளம் பருவத்தில்' பிள்ளைகளின் நெருங்கிய தோழனாக, தோழியாக பெற்றோரின் செயல்பாடு அமையவேண்டும். பெற்றோரின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக செயல்படும் சூழல் உருவாகும்போது அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டியது பெற்றோரின் கடமை. மாறாக கண்டிப்பையும் கடுமையையும் அதிகம் காட்டினால் இருவருக்கும் இடையே அது இடைவெளியை உருவாக்கிவிடும். அந்தப் பருவத்தில் பிள்ளைகளின் நெருங்கிய தோழனாக, தோழியாகப் பெற்றோரின் செயல்பாடு அமையவேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் அவ்வாறு தோழமையுடன் இருப்பதில்லை. பத்து வயது முதல் இருபது வயதுவரை தோழமை மனப்பான்மையுடன் பழக வேண்டும். இல்லாவிட்டால் தாய் தகப்பன் என்ற உறவை மட்டுமே பெற முடியும். நண்பன் என்னும் நிலை கிடைக்காமலேயே போய்விடலாம்.

கண்டிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போதுதான் பெற்றோரின் தலையீடு இருக்க வேண்டும். அதுவும் நண்பன் என்ற நிலையிலிருந்து மென்மையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். படிப்பு, வேலை, திருமணம் ஆகிய மூன்றையும் தேர்வு செய்யக்கூடிய உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்பதைப் பெற்றோர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தங்கள் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் பிள்ளைகளிடம் திணிக்கக்கூடாது. அவர்களது தனித் திறமைகளையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். பிள்ளைகள் பிரச்சனைக்குரிய செயல்பாடுகளில் ஈடுபடும்போது பெற்றோர் தலையிட்டு சரியான பாதையைக் காட்டவேண்டும். பெற்றோர் சிறந்த நண்பராக இருந்தால்தான் பிள்ளைகள் மனந்திறந்து பேசுவார்கள். தன் மகன், மகள் ஒரு போதும் தவறான பாதையைத் தேர்வுசெய்ய மாட்டார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை பெற்றோரிடம் இருக்கவேண்டும். சரியோ தவறோ எதுவாயினும் பிள்ளைகள் பெற்றோரிடம் மறைக்காமல் கூறும் விதத்தில் பழக வேண்டும். அவ்வாறு செய்தால் பெற்றோர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காகவே பிள்ளைகள் தவறான வழிகளில் செல்ல மாட்டார்கள். ஒருவேளை அவர்களுடைய நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தால் "இது உன் எதிர்காலம் தொடர்பான பிரச்சனை இதை தீர்மானிக்க வேண்டியது நீதான்" என்று அன்போடு கூறி பிரச்சனையின் மறுபக்கத்தைப் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.

## பனுவல் இரண்டு கண்டிப்பு

பெற்ற குழந்தையைப் பேணி வளர்த்து பெரியவர்களாக்குவது என்பது இன்றைக்கு குதிரைக் கொம்பாகத்தான் தோன்றுகின்றது. அந்த அளவிற்குப் பிள்ளைகளும் சரி, பெற்றோர்களும் சரி, நெருக்கடிக்குள் நின்று தவிக்கின்றனர். ஒரு காலத்தில் நமது குடும்பங்கள் அனைத்தும் கூட்டுக் குடும்பமாக விளங்கியது. ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டிற்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தனர். அவர்களிடம் அன்பு, அடக்கம், பணிவு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை போன்ற உயரிய குணங்கள் அனைத்தும் இயற்கையாகவே அமைந்திருந்தன. அதுமட்டுமல்ல அந்தக் குழந்தைகளைக் கண்டிப்புடனும் கட்டுப்பாடுடனும் வளர்த்தனர். குழந்தை ஒரு சிறு தவறு செய்தால்கூட குடும்பத்தில் இருக்கும் மற்றவர்கள் கவனத்திற்கு அதுபோகும். அவர்களும் குழந்தையைக் கண்டித்துத் திருத்துவார்கள். கூட்டுக் குடும்ப அமைப்பில் எல்லா விசயங்களும் எல்லோருக்கும் பகிரப்படும். ஆனால் இன்று அந்த நிலையில்லை.

குற்றச் செயல்கள் புரிந்தவர்கள் தங்கள் வாழ்வையும் தொலைத்து, ஒன்றுமறியா அப்பாவிகளின் வாழ்வையும் சீரழிப்பதற்குக் காரணம் கண்டிப்பற்ற வளர்ப்புமுறைதான் என்பது தெள்ளத் தெளிவு. அந்தக் காலத்தில் கண்டிப்பும் கட்டுப்பாடும் குடும்பத்திலும் அதிகம் இருந்தது. சமுதாயக் கட்டமைப்பிலும் அது வெளிப்பட்டது. ஒரு மனிதன் தனது வாழ்நாளில் பல்வேறுவிதமான அனுபவங்களைப் பெற நேரிடுகிறது. அப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றவர்கள் எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் பக்குவம் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். கண்டிப்புடன் வளர்க்கப்படாத குழந்தைகள் தோல்விகளைத் தாங்கும் மனம் படைத்தவர்களாக, ஏமாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் குணம் படைத்தவர்களாக, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கொண்டவர்களாக, அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் எண்ணப்போக்கு உடையவர்களாக இருக்க முடியாது. மேலும் அப்படிப்பட்டவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுகிறவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு சமூக அக்கறையும் குறைவாகும். இம்மனப்பான்மை குடும்பத்தையும் உறவையும் பாதிக்கும். இறுதியில் அவர்களது வாழ்வே பாதிக்கப்படும். ஆகவே குழந்தைகள் மீது அக்கறை கொண்டவர்களாக இருந்தால் கண்டித்து வளர்க்க வேண்டும் அத்துடன் பெரியோர்களையும் ஆசிரியர்களையும் கண்டிக்க அனுமதிக்க வேண்டும். வாழ்க்கையில் பிள்ளைகள் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ்வதற்குக் கண்டிப்பு அவசியம்.

**வினாக்கள்**

Q11கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல்1) (மதிப்பெண்கள் 4)

மாறாக, கண்டிப்பையும் கடுமையையும் அதிகம் காட்டினால் இருவருக்கும் இடையே அது இடைவெளியை உருவாக்கிவிடும்.

அ உம்மைத்தொடர்

ஆ மூன்றாம் வேற்றுமை உருபேற்ற சொல்

Q12 அரவணைப்பின்வழி பெற்றோர் எத்தகைய நலன்களைப் பெற இயலும்? (பனுவல் ஒன்று) (மதிப்பெண்கள் 5)

Q 13 கருத்துகள் அடிப்படையில் பனுவல் ஒன்று பனுவல் இரண்டிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ? (மதிப்பெண்கள் 6)

Q14 'பிள்ளைகள் கண்டிப்புடன் வளர்க்கப்பட வேண்டும்' என்று பனுவல் இரண்டு கூறும் கருத்துகள் குறித்து உமது விமர்சனத்தை 140 சொற்களில் எழுதுக. (பனுவல் 2) (மதிப்பெண்கள் 15)

(முற்றும்)

விடைகள்

11

அ கண்டிப்பையும் கடுமையையும்

ஆ காட்டினால்

12 அரவணைப்பின்வழி பிள்ளைகள் பெற்றோர் இடைவெளியின்றிப் பழக முடியும். பிள்ளைகள் நெருங்கிய தோழமையுடன் பழகுவார்கள். பெற்றோர் சிறந்த நண்பராக இருந்தால்தான் பிள்ளைகள் மனந்திறந்து பேசுவார்கள். மேலும் பிள்ளைகள் தவறான பாதையைத் தேர்வுசெய்ய மாட்டார்கள்.

13. பனுவல் ஒன்று பிள்ளை வளர்த்தலின்போது பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளிடம் அரவணைப்பு செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறது. அரவணைப்பின்மூலம் ஏற்படும் நன்மைகளையும் எதனால் அரவணைப்பு செலுத்தவேண்டும் என்றும் கூறுகிறது. பனுவல் இரண்டோ கண்டிப்பின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது. கண்டிப்பு இல்லாத இளையர்களின் மோசமான வாழ்க்கை முறையை உணர்த்துகிறது.

14. அரவணைப்பின் மூலமே பெற்றோர் தங்களின் பிள்ளைகளிடத்தில் ஒரு நண்பராகப் பழக முடியும். மேலும், பிள்ளைகள் தவறான பாதையில் செல்வதைத் தடுக்கமுடியும். அரவணைப்பு மட்டுமே அவர்களிடையே இருக்கும் இடைவெளியைக் குறைக்கும்.

கண்டிப்பு பிள்ளைகளின் தவறுகளை ஓரளவு உணரச்செய்யும். அந்த தவறுகளை மனதில் உள்வாங்கிக்கொண்டு அதில் இருக்கும் தன்மையை உணர்ந்து அதிலிருந்து மீள கண்டிப்பு வாய்ப்பளிக்கிறது. இதைத்தான் கண்டிப்பு உணர்த்துகிறது.

மேலும் பனுவல் இரண்டு, கண்டிப்பு மேலும் ஒரு மனிதனை நெறிப்படுத்துகிறது என்று கூறுகிறது. பெற்றோர் பிள்ளைகைளைக் கண்டிக்கும்போது அவர்களுக்குத் தேவையான வாழ்க்கைப் பாடங்களை அவர்களால் கற்க முடியும். ஆனாலும் அதிக கண்டிப்பு ஒரு பிள்ளையைச் சுயமாக சிந்திப்பதிலிருந்து தடுக்கிறது. அன்பு கண்டிப்பைவிட வலியது என்பதைப் பெற்றோர் உணர்தல் வேண்டும். அன்பைப் பற்றி பெற்றவர்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் வேண்டும். அதுமட்டுமின்றி அவர்களிடம் அன்புடன் நடத்துக்கொண்டால் கண்டிப்புக்கு வேலை இருக்காது என்பதே எனது கருத்தாகும்.

**ST. ANDREW'S JUNIOR COLLEGE**

**Preliminary Examination 2018**

**Tamil Language and Literature**

**3 HOURS**

**PAPER 3 9574/3**

**14 /Sep/2018**

**குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர் விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும் பதிவு எண்ணையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப் புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடாது.

முக்கியக் குறிப்புகள்

**மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

## 'அ' பிரிவு

### நாவல்

Q1 பாலனின் கூட்டுறவுச் சங்க முயற்சி தோல்வி அடைந்ததற்கான காரணங்களை ஆராய்வதுடன் அதனை வெற்றிகரமாக நிறைவேற்ற மற்றவர்கள் எப்படிப்பட்ட ஒத்துழைப்பை நல்கி இருக்க வேண்டும் என்பதனையும் 'பால்மரக் காட்டினிலே' என்னும் நாவலை அடிப்படையாகக்கொண்டு ஆராய்க (25 மதிப்பெண்கள்)

Q2 'பால்மரக் காட்டினிலே' நாவலில் உலாவரும் கதாமாந்தர்களில் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ப செயல்படும் தகுதிவாய்ந்தவர் என்று யாரைக் குறிப்பிடலாம்? ஏன்? (25 மதிப்பெண்கள்)

## 'ஆ' பிரிவு

### சிறுகதை

Q3 'நாடோடிகள்' என்னும் சிறுகதை முரண்பட்ட கதாமாந்தர்களைக்கொண்டு, 'நாம் நேர்பட வாழவேண்டும்' என்ற நியதியினை உணர்த்துகிறது - தெளிவுபடுத்துக (25 மதிப்பெண்கள்)

Q4 'நாம் நினைப்பதெல்லாம் நிறைவேறுவதில்லை'- இக்கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 'இலட்சியங்களின் ஊனங்கள்' என்னும் சிறுகதை படைக்கப்பட்டுள்ள பாங்கினை ஆராய்க. (25 மதிப்பெண்கள்)

## 'இ' பிரிவு

**நாடகம்**

Q5 "நிறுத்துடா! நீ பயன்படுத்தி வாங்குவதற்கு நான் என்ன... ? ஒரு பெண்ணிடம் இப்படிப் பேசுவதற்கு உனக்கு வெட்கமாயில்லை?" 'காதல் என்ன விலை' என்னும் நாடகத்தில் இடம் பெற்ற வள்ளியின் உரையாடலை மையமாகக்கொண்டு அவள் ஒரு 'புதுமைப் பெண்' என்று முடிவிற்கு வரலாமா? தக்க ஆதாரங்களுடன் அலசி ஆராய்க (25 மதிப்பெண்கள்)

Q6 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' என்னும் நாடகத்தில் இடம்பெற்றுள்ள கோபால்சாமி என்னும் கதாபாத்திரத்தின் வாயிலாக எழுத்தாளர் செ வெ சண்முகம் வாசகர்களிடம் எத்தகைய கருத்துகளை வலியுறுத்த விரும்புகிறார் என்பதை விளக்குக. (25 மதிப்பெண்கள்)

## 'ஈ' பிரிவு

**கவிதை**

Q7 'இயற்கை இன்பம்' என்ற கவிதையில் மேலோங்கி நிற்கும் கற்பனை வளத்தையும் இலக்கிய நயத்தையும் பாராட்டுவதுடன் அதன் வாயிலாக நாம் பெறத்தக்க விழுமியங்களையும் விவரித்து எழுதுக. (25 மதிப்பெண்கள்)

Q8 'விழித்துக் கொண்டோர் எல்லாம் பிழைத்துக் கொண்டார்'- மேற்கண்ட பட்டுக்கோட்டையாரின் பாடல்வரி நமக்கு எத்தகைய கருத்துக்களை எடுத்து விளக்குகிறது என்பதை ஆராய்வதுடன் அப்பாடலில் காணப்படும் தன்முனைப்புக் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்தும் விதத்தையும் விளக்கி எழுதுக. (25 மதிப்பெண்கள்)

முற்றும்

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2018

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 1 (பகுதி 1A) |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 10TH SEPT 2018 |
| 9574/1 | 2 Hours 15 Mins |
| Paper 1 (Part 1A) | (For Part 1 and 2) |

**<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>**

1.இவ்வினாத்தாளின் பகுதி 1A,1B ஆகியவை தனித்தனியாக **அச்சிடப்பட்டுள்ளன.**

**2.பகுதி 1A, 1B ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.**

**3.ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.**

**4.அகராதியைப் பயன்படுத்துதல் :**

**அ)பகுதி 1A-க்கு விடையளிக்கும்போது நீ அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்.**

**ஆ)பகுதி 1B-க்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் <u>பயன்படுத்தக்கூடாது.</u>**

**உயர்தரம் 2 - தமிழ்மொழி, இலக்கியம்**

**தாள் 1 (பகுதி 1)**

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக. (35 மதிப்பெண்கள்)**

1. இன்று ஒரு பிள்ளையின் வளர்ப்பில் பெற்றோரின் பங்கே அதிகம் உள்ளது என்பதை நீ ஏற்றுக்கொள்கிறாயா?

2. 'வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை' – கருத்துரைக்க

3. நீ சமீபத்தில் ஒரு நாட்டில் சுற்றுலா மேற்கொண்ட போது அங்கு ஒரு இயற்கைப் பேரிடர் ஏற்பட்டது. அப்போது உனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் நீ கற்றுக்கொண்ட பாடங்களையும் விளக்கி எழுதுக.

4. பின்வரும் தகவல்களைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.




*********முற்றும்**********

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2018

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 1 (பகுதி 1B) |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 10TH SEPT 2018 |
| 9574/1 | 2 Hours 15 Mins |
| Paper 1 (Part 1B) | (For Part 1 and 2) |

## குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்னர், விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உம் பெயரையும், வகுப்பையும் தெளிவாகவும் சரியாகவும் எழுத வேண்டும்.

3. இவ்வினாத்தாளில் மொத்தம் 5 பக்கங்கள் உள்ளன.

## 'அ' பிரிவு

முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

கடுமையான வாழ்க்கை முறைக்குப் பழகிக்கொள்வது முன்னேற்றத்திற்கான உயர்ந்த பயிற்சி. மற்ற உயிரினங்கள் எல்லாம் சிதைந்தும் குறைந்தும்,1.__________ போவதற்குக் காரணம் அவை இயற்கையோடு தங்களை அனுசரித்து கொள்ளாமைதான்! பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இராட்சத பல்லி இனம் உலகம் முழுவதும் பரவிக்கிடந்தது. வால் நட்சத்திரம் பூமிக்கு 2.________ வந்தபோது இராட்சத பல்லி இனம் அழிந்தது. மனிதனோ தன்னைச் சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொள்கின்ற கலையைக் கற்றதால் இன்று வானத்தில் பறக்கவும், நொடியில் தகவல்களைப் பறிமாறிக் கொள்ளவும் கற்றுக் கொண்டான். மனிதர்களிலேயே 3.__________ தங்களை அனுசரித்துக் கொள்பவர்கள்தான் வரலாற்று நூல்களில் வாசிக்கப்படுகிறார்கள்.

நம் முன் இரண்டு வாய்ப்புகள் இருக்குமேயானால், நாம் எளிதான வாய்ப்பையே தேர்ந்தெடுத்து, கடினமான வாய்ப்பைப் புறந்தள்ளுகிறோம். சிரமப்படாமல் வாழ்க்கையைக் கழித்துவிட வேண்டுமென்பதில் குறியாக இருக்கிறோம். எப்போது நாம் இதுவரை சந்தித்திராத ஒரு நிகழ்வைத் தேந்தெடுக்கிறோமோ அப்போது வாழ்க்கை சுவாரஸ்யமாகி விடுகிறது. நாம் 4.________ மனிதர்களும் பிரச்சினைகளும் பாடப் புத்தகங்களாகி விடுகின்றன. நாம் கற்றுக்கொள்கிற அனுபவங்கள் நம் எதிர்காலத்தை வளப்படுத்துகின்றன. சிறு சிரமத்தையே பெரிய ஆபத்தாக பாவிக்காமல், அதைத் தாண்டி மேலே முன்னேறும் பக்குவத்தை நாம் அடைகிறோம்.

எனவே, நாம் பெரிய இலக்கை நிர்ணயித்து அதை நோக்கி அழுத்தமாக நடைபோடும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். 5.__________ வாழ்க்கைப் பாதையில் நாம் நடுகிற மரங்கள் பின்னால் வருகிற பலருக்கு நிழலையும் கனியையும் நிம்மதியையும் தரும்.

நன்றி: வெ. இறையன்பு – உன்னோடு ஒரு நிமிஷம்

<u>‘ஆ’ பிரிவு</u>

<u>சுயவிடைக் கருத்தறிதல் (1)</u> (30 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

‘உலகம் ஒரு புத்தகம். பயணம் செய்யாதவர்கள் அதில் ஒரு பக்கத்தை மட்டுமே வாசிக்க முடியும்’ என்று புனித அகஸ்டின் கூறியுள்ளார். பயணங்கள் உலகத்தை மெருகேற்றுவது மட்டுமல்லாமல் தனி மனிதனையும் மேம்படுத்துகின்றன. பயணம் நம் ஒவ்வொரு அசைவிலும் அனுபவ முத்திரைகளை ஆழமாகப் பதிக்கிறது. பல நாடுகளில் ஆண்டுதோறும் குறைந்தபட்ச நாட்களாவது விடுப்பு எடுத்துக்கொள்வது அடிப்படை உரிமையாக சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

பயணமே மனிதனைப் பண்படுத்துகிறது. அடுத்தவர்களைப் பார்த்து அவர்களை உற்று நோக்கிக் கற்றுக்கொண்டதால் தான் மனித நாகரிகம் வளர்ச்சியடைந்தது. மேன்மையான உள்ளமும், பொறுமையும், சகிப்புத்தன்மையும் உள்ளவர்களே பயணத்தின் நோக்கத்தில் வெற்றிபெற முடியும். கூச்சமும் தயக்கமும் கொண்டவர்கள் பயணத்தில் தோற்றுப் போவார்கள். நிறைய பயணம் செய்பவர்கள் முதிர்ச்சியோடு <u>**திகழ்வார்கள்**</u>. பயணங்களால் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்து, அவர்களோடு அனுசரித்து வாழும்போதுதான் நம்மையும் அறியாமல் நம் நடவடிக்கைகளில் தெளிவும், சரியான அணுகுமுறையும் ஏற்படும்.

விடுமுறை நாட்களில் சுற்றுலா செல்லும் பெண்கள், தங்கள் திருமண வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று ஆய்வு செய்தவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு முக்கியக் காரணம் குடும்பமாக சுற்றுலா செல்கிறபோது நம்மையும் அறியாமல் அன்பு மேலிடுகிறது. அக்கறையோடு நடந்து கொள்கிறோம். அதிக நேரம் கிடைப்பதால் மற்றவர்களை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம்.

மன அயற்சி, பணியாளர்கள் அடிக்கடி வேலைக்கு வராமல் இருப்பதற்கு முக்கியக் காரணியாக இருக்கிறது. அதனால் ஒட்டுமொத்த உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. எந்த நாடு அதிக அளவில் சுற்றுலா மேற்கொள்கிறதோ அந்த நாட்டின் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கிறது. பயணத்தின்போது புதிய யோசனைகள் பெரும்பாலும் கிடைக்கின்றன. பணியாளர்களுக்குச் சுற்றுலாக்களைச் சிறப்பாக நிர்வகித்து வரும் நிறுவனங்களின் தொழிலாளர்கள் அடிக்கடி மாறும் அவல நிலை ஏற்படுவதில்லை. அவர்கள் நிறுவனத்தின் மீது கொண்டிருக்கும் <u>**விசுவாசமும்**</u> அதிகரிக்கிறது. கடுமையான பணியைச் செய்கிறவர்கள்கூட சுற்றுலாவிற்குப் பிறகு தங்கள் பணியை இனிமையானதாக உணர்கிறார்கள்.

பயணத்தினால் தனிமனித ஆரோக்கியமும் மேம்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் பயணத்திற்காக விடுமுறையைத் <u>**துய்ப்பவர்களுக்கு**</u> மாரடைப்பு வருகிற வாய்ப்பு பாதியாகக் குறைகிறது. இதயக் குழாய்களில் அடைப்பு ஏற்படுகிற அபாயமும் 21 சதவிகிதம் குறைகிறது. பயணம் செய்யாமல் வீட்டிலேயே தங்குபவர்களுக்கு இதயம் பாழ்படுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. சுற்றுலா செல்கிறபோது இரத்த அழுத்தம் மட்டுப்படுகிறது. அதற்குக் காரணம், அன்றாட அலுவல் சிந்தனையிலிருந்து விடுபட்டுத் தூய காற்றைச் சுவாசிப்பதும் தவறாமல் நடைப்பயிற்சி மேற்கொள்வதும்

அரக்கப்பரக்க சாப்பிடாமல் அமைதியாக உண்பதுமே ஆகும். பார்த்த முகங்களையே பார்க்கிறபோது சலிப்பு ஏற்படுகிறது. புதியவர்களைச் சந்திக்கிறபோது சுவாரஸ்யம் ஏற்படுகிறது. இன்னொரு மாநிலத்திற்கோ, நாட்டிற்கோ செல்லுகிறபோது அவர்கள் வாழ்க்கைமுறை நமக்கு ஆர்வத்தையும் வியப்பையும் உண்டாக்கி, கவலைகளை ஒதுக்கி வைக்கிறது. பதற்றம் இல்லாமல் ஆழமாகத் தூங்க முடியும்.

பயணம் சென்று வருவது என்பது விரைவாக செய்யக்கூடிய பணி அல்ல. ஆற அமர ஒவ்வொரு இடத்தையும் உள்வாங்கிக் கொண்டு திரும்பிவர வேண்டிய நிகழ்வு. ஒருமுறை ஓரிடத்திற்குத் தான் பயணம் செய்யவேண்டும். அந்த இடம் அடுத்த பயணம்வரை மனம் முழுவதும் நிரம்பி இருக்க வேண்டும். பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் பயணித்து புகைப்படங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு வந்து பெருமைப்படுவதால் பயனில்லை. மேலும் சுற்றுலா மேற்கொள்ளும் நாடுகளின் மக்களோடு பேசிப் பழகி அவர்கள் வாழ்க்கை முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய பண்பாடு, இசை, நடனம் ஆகியவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பயணமும் நம்மை உயர்த்துபவை. நம் வாழ்நாளை அதிகப்படுத்துபவை. பயணங்களால் நாம் உலகைப் புரிந்துகொள்வோம். மேலும் பயணங்களால் தேசங்கள் இணையும், அன்பு பெருகும், வாழ்க்கைத் தரமும் உயரும்.

நன்றி: வெ. இறையன்பு – பத்தாயிரம் மைல் பயணம்

**வினாக்கள்.** **(24 மதிப்பெண்கள்)**

6. எத்தகையோர் பயணத்தின் மூலம் பயன் அடைவார்கள்? (4 மதிப்பெண்கள்)

7. சுற்றுலாவின் மூலம் உற்பத்தித் திறன் எவ்வாறு மேம்படுகிறது? (7 மதிப்பெண்கள்)

8. சுற்றுலாவைத் தவிர்ப்பதால் நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது என்று கூற காரணம் என்ன? (7 மதிப்பெண்கள்)

9. 'பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் பயணித்து புகைப்படங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு வந்து பெருமைப்படுவதால் பயனில்லை,' என்று ஆசிரியர் ஏன் கூறுகிறார்? (6 மதிப்பெண்கள்)

**10) பொருள் கூறுக** **(6 மதிப்பெண்கள்)**

அ. திகழ்வார்கள்

ஆ. விசுவாசமும்

இ. துய்ப்பவர்களுக்கு

**********முற்றும்**********

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2018

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 2 |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 10TH SEPT 2018 |
| 9574/2 | 1 Hour |
| Paper 2 | |

## குறிப்புகள்

1. இத்தேர்வில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

2. கொடுக்கப்பட்டிருக்கும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

## <u>'இ' பிரிவு</u>

<u>சுயவிடைக் கருத்தறிதல் (2)</u> **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

<u>**பனுவல் ஒன்று:** தொழில்நுட்பம் – அளவான பயன்பாடு, சிறப்பான வாழ்வு</u>

வாழ்க்கைத் தரம் உயர உயரத் தொழில்நுட்பத்தின் பயன்பாடும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. கதை கேட்டு குழந்தைக்கு உணவு ஊட்டிய காலம் மலையேறிவிட்டது. தொழில்நுட்பச் சாதனத்தைக் கையில் கொடுத்தால்தான் உணவை உண்பேன் என்கின்றனர் இன்றைய குழந்தைகள். ஆனாலும் இதன் தீமையை உணர்ந்த பெற்றோர் இருக்கவே செய்கின்றனர்.

தொழில்நுட்பத்தின் தாக்கத்தால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரிடம் அதிகரிப்பதை இலக்காய் கொண்டு அண்மையில் அமெரிக்காவின் சிலிக்கான் வேலியைச் (Silicon Valley) சேர்ந்த இரு தொழில்நுட்பர்கள் The Truth About Tech என்றழைக்கப்படும் புதிய இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர்.

சிறு வயதிலிருந்தே தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைச் சில பெற்றோர்கள் பிள்ளைகளுள் விதைக்கின்றனர். அதற்கு அப்பெற்றோர்களே நல்ல முன்மாதிரியாகவும் செயல்படுகின்றனர். ஏனெனில் கண்மூடித்தனமாகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்கள் பிள்ளைகளுக்கு அந்த ஒழுக்கத்தைப் புகட்ட முடியாது. குடும்பத்தில் யாராக இருந்தாலும் ஒருவரோடு ஒருவர் நேரத்தைச் செலவிடும்போது தொழில்நுட்பச் சாதனங்களைக் கைக்கு எட்டாத வகையில் தள்ளி வைத்துவிடுகின்றனர் சில பெற்றோர்கள். அவ்வாறு செய்வதன் மூலம் தொழில்நுட்பத்தையும் தாண்டி மற்றவர்களோடு செலவிடும் நேரத்தின் மதிப்பைப் பிள்ளைகளுக்கு உணர வைக்கின்றனர். இன்று உணவு உட்கொள்ளும்போதும் கவனம் தொழில்நுட்ப சாதனங்களின் மீதுதான் உள்ளது. இதனால் தேவைக்கு அதிகமாக உண்டு உடல் எடையைப் பலர் கூட்டிக்கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் பிடித்த இசையைக் கேட்கிறேன் என்ற நிலையில் சாதனங்களைக் காதில் பொருத்திக்கொண்டு சத்தத்தின் அளவை மிகவும் அதிகமாக வைத்துக்கொண்டு செவிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

இன்று பிள்ளைகள் உட்பட பலரது தூக்கம் கெடுவதற்குத் தொழில்நுட்ப கருவிகள் முக்கிய காரணமாகும். அவற்றிலிருந்து வெளிப்படும் ஒளி உறக்கத்தை கெடுத்து உடலுக்கு அதிகச் சோர்வை ஏற்படுத்தும் ஆபத்தை உணர்ந்த பெற்றோர் அவற்றை உறங்கும் நேரத்தில் பயன்படுத்தாது பார்த்துக்கொள்கின்றனர். அதனால் பிள்ளைகளும் நல்ல உறக்கத்தைப் பெற்று மறுநாள் பள்ளிக்குப் புத்துணர்ச்சியுடன் எழுகின்றனர்.

தொழில்நுட்பத்தை அளவோடு தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை உணரவேண்டும். ஏனெனில் அளவுக்கு மீறினால் எதுவும் நம் வாழ்க்கைக்கு நஞ்சாகிவிடும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

**பனுவல் இரண்டு:** தொழில்நுட்பம் – ஆதிக்கம் பாதிப்பாகும்

பெற்றோரின் செயல்கள் பிள்ளைகள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவையே குழந்தைகளின் பழக்கவழக்கங்களை வடிவமைக்கின்றன. ஆனால் இன்று குழந்தைகளின் வாழ்க்கையில் ஓர் முக்கிய அம்சமாக திறன்பேசி புகுந்துவிட்டது. திறன்பேசித் திரையைக் கண்சிமிட்டால் பார்க்கின்றன குழந்தைகள். பேசக் கற்றுக்கொள்ளாத பிள்ளை, திறன்பேசியில் இருக்கும் கேமராவைக் கண்டதும் புன்னகைக்கிறது.

பெரும்பாலான வேளைகளில் அதனைப் பெற்றோர் தெரிந்தே அறிமுகம் செய்கின்றனர். திறன்பேசித் திரையைப் பிள்ளைகள் விளையாட்டாகத் தட்டுவது, பெற்றோருக்கு ஒரு வகை மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. பிள்ளைகளுக்குத் திறன்பேசியைப் பயன்படுத்தத் தெரிகிறதே என்பதில் மகிழ்ச்சி. பிள்ளைகள் அதில் சிறந்த பலவற்றைக் கற்றுக்கொள்வார்கள் எனும் ஆழ்ந்த நம்பிக்கை பெற்றவர்களுக்கு உள்ளது.

பொது நிகழ்ச்சிகள், பொது இடங்கள், பொது போக்குவரத்து எனப் பலவற்றில் பெரியவர்கள் பிள்ளைகளுடன் இருக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. பிள்ளைகள் கூச்சல் போடாமல், அமைதியாக இருக்கவேண்டும். அது பிள்ளைகளுடன் இருக்கும் பெரியவர்களுக்கு ஒரு வகை மன உளைச்சலை ஏற்படுத்தும். அதற்குச் சிறந்த ஒரு தீர்வாக அவர்கள் பயன்படுத்துவது திறன்பேசி. அழும் அல்லது அலறும் பிள்ளையிடம் திறன்பேசியைக் கொடுத்தவுடன் பிள்ளைகளின் கண்ணீரும் பிடிவாதமும் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிடுகின்றன. பிள்ளைகளுடன் இருக்கும் பெரியவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாக அந்நேரத்தில் திறன்பேசி தோன்றுகிறது. இந்தப் பழக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளையிடமிருந்து திறன்பேசியை எடுத்துவிட்டால் அது பல சமயங்களில் அக்குழந்தையின் மனநிலையை ஆழமாகப் பாதித்துவிடுகிறது.

பிள்ளையைக் கட்டுப்படுத்த முடியாதபோது உற்றதோழனாகத் திகழும் திறன்பேசியைக் கொடுப்பதற்குப் பதிலாக குழந்தையின் கவனத்தைத் திசைதிருப்பலாம். அவர்களது கற்பனையைத் தட்டி எழுப்பி குட்டிக் கதைகளை உருவாக்கிச் சொல்லலாம்; விளையாட்டுக்களை விளையாடலாம். இவ்வழிகள் குழந்தைக்கு அழகான ஆரோக்கியமான வாழ்க்கையைக் கற்றுத்தரும்.

நன்றி: பேசுவோமா, செய்தி@mediacorp

**<u>வினாக்கள்</u>**

Q1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் இரண்டு) (4 மதிப்பெண்கள்)

இந்தப் பழக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளையிடமிருந்து திறன்பேசியை எடுத்துவிட்டால் அது பல சமயங்களில் அக்குழந்தையின் மனநிலையை ஆழமாகப் பாதித்துவிடுகிறது.

அ) புறச்சுட்டு

ஆ) வினையடை

Q2 தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்துக்கும் நம் ஆரோக்கியத்தின் பாதிப்புக்கும் தொடர்பு உண்டா? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்)

Q3 இரு பனுவல்களிலும் உள்ள குழந்தைகள் எவ்வாறு வேறுபட்டுள்ளனர்? (6 மதிப்பெண்கள்)

Q4 பெற்றோர்களின் செயல்பாட்டுக்கும் பிள்ளைகள் வளரும் முறைக்கும் இடையே தொடர்பு உண்டு என்னும் கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துக்களைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

************** முற்றும் ***************

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2018

| | |
|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | தாள் 3 |
| H2 TAMIL LANGUAGE AND LITERATURE | 18TH SEPT 2018 |
| 9574/3 | 3 Hours |
| Paper 3 | |

➢ **<u>தேர்வு எழுதுவோருக்கான முக்கியக் குறிப்புகள்:-</u>**

1. மொத்தம் 4 கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும்.

3. மீதம் உள்ள ஒரு கேள்விக்கு ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து பதிலளிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

➢ **<u>இவ்வினாத்தாளில் மொத்தம் 2 பக்கங்கள் உள்ளன.</u>**

நாவல்

1. 'பால்மரக் காட்டினிலே' என்னும் நாவலின் கதைக் கருவை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

2. 'பால்மரக் காட்டினிலே' நாவலில் படைக்கப்பட்ட பெண் கதாப்பாத்திரங்கள் குறித்த உமது கருத்தினை விளக்கி எழுதுக.

சிறுகதை

3. மனிதனின் எண்ணங்களுக்கு ஏற்பவே அவனது வாழ்க்கை அமையும் என்பதை 'நாடோடிகள்' கதையில் பார்த்திபன், தனபால் வழியாகவும் 'A126629001'யில் சத்தியமூர்த்தி மூலமாகவும் விளக்கி எழுதுக.

4. "ஒருவரது துன்பத்திற்கும் அவரது குறிக்கோள்கள் சிதைவதற்கும் இந்தச் சமூகமே காரணம்". இக்கருத்தை 'ஆயிஷா' மற்றும் 'இலட்சியங்களின் ஊனங்கள்' கதைகளைக் கொண்டு ஆராய்க.

நாடகம்

5. 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' நாடகம் புலம்பெயர்ந்து வாழ்ந்த இந்தியர்களின் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது' – கருத்துரைக்க.

6. திருமணம் மற்றும் காதல் குறித்து 'காதல் என்ன விலை' நாடகத்தின் கதாப்பாத்திரங்கள் மூலம் உணர்த்தப்படும் கருத்துக்கள் என்ன?

கவிதை

7. புறநானூற்று பாடல்கள் வழி உணர்த்தப்படும் தமிழர்களின் வாழ்வியல் நெறிகள் இன்றும் பொருந்தக்கூடியவையா? என்பதை ஆராய்க.

8. 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' மற்றும் 'கல்லின் காயம்' ஆகிய படைப்புகள் மனிதன் சிறப்பாக வாழ வழிகாட்டுகின்றன – கருத்துரைக்க.

**********முற்றும்**********

"செய்வன திருந்தச் செய்"

SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2018

உயர்தரம் 2, தாள் 1 பகுதி 2

விடைக்குறிப்பு

**முன்னுணர்வுக் கருத்தறிதல்**

1. காணாமல்

2. அருகே

3. அதிகமாக

4. எதிர்கொள்ளும்

5. அவ்வாறு

**கருத்தறிதல்**

6. எத்தகையோர் பயணத்தின் மூலம் பயன் அடைவார்கள்? 4 மதிப்பெண்கள்

- மேன்மையான மனத்தோடு, பொறுமையும், சகிப்புத்தன்மையும் கொண்டிருக்க வேண்டும். அதோடு கூச்சமும் தயக்கமும் பயணத்தில் இருக்கக்கூடாது. இத்தகையோரே பயணத்தின் மூலம் பயன் அடைவார்கள்.

பொ – 3 மொ - 1

7. சுற்றுலாவின் மூலம் உற்பத்தித் திறன் எவ்வாறு மேம்படுகிறது? 7 மதிப்பெண்கள்

- எந்த நாடு அதிக அளவில் சுற்றுலா மேற்கொள்கிறதோ அந்த நாட்டின் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கிறது. ஏனெனில் அங்குள்ளவர்களால் மன அயற்சி இல்லாமல் சிறப்பாக வேலை செய்ய முடிகிறது. – 2

- பயணத்தின்போது புதிய யோசனைகள் பெரும்பாலும் கிடைக்கின்றன. – 1

- பணியாளர்களுக்குச் சுற்றுலாக்களைச் சிறப்பாக நிர்வகித்து வரும் நிறுவனங்களின் தொழிலாளர்கள் அடிக்கடி மாறும் அவல நிலை ஏற்படுவதில்லை. - 1

- அவர்கள் நிறுவனத்தின் மீது கொண்டிருக்கும் விசுவாசமும் அதிகரிக்கிறது. - 1

- கடுமையான பணியைச் செய்கிறவர்கள்கூட சுற்றுலாவிற்குப் பிறகு தங்கள் பணியை இனிமையானதாக உணர்கிறார்கள். – 1

சுற்றுலாவின் இத்தகைய பயன்களால் உற்பத்தித் திறன் மேம்படுகிறது.

பொ – 6 மொ - 1

8. சுற்றுலாவைத் தவிர்ப்பதால் நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது என்று கூற காரணம் என்ன? 7 மதிப்பெண்கள்

- அலுவல் சிந்தனையிலிருந்து விடுபட முடியாது – 0.5

- தூய காற்றைச் சுவாசிக்க முடியாது – 0.5

- நடைப்பயிற்சி இல்லாமல் போகும் – 0.5

- உணவை அரக்கப்பரக்க சாப்பிடுவதால் பாதிப்பு – 0.5

- சுவாரஸ்யமற்ற சலிப்பான நிலை, அதாவது எந்த வித ஆர்வமும் வியப்பும் இல்லாமல் கவலைகளே தொடர்ந்து இருத்தல் -2

- பதற்றத்தால் ஆழமான தூக்கத்தை இழத்தல் - 2

பொ – 6 மொ – 1

9. 'பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் பயணித்து புகைப்படங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு வந்து பெருமைப்படுவதால் பயனில்லை' என்று ஆசிரியர் ஏன் கூறுகிறார்? 6 மதிப்பெண்கள்

- பயணம் சென்று வருவது என்பது விரைவாக செய்யக்கூடிய பணி அல்ல. ஆற அமர ஒவ்வொரு இடத்தையும் உள்வாங்கிக் கொண்டு திரும்பிவர வேண்டிய நிகழ்வு. - 1

- ஒருமுறை ஓரிடத்திற்குத் தான் பயணம் செய்யவேண்டும். - 1

- அந்த இடம் அடுத்த பயணம்வரை மனம் முழுவதும் நிரம்பி இருக்க வேண்டும். - 1

- சுற்றுலா மேற்கொள்ளும் நாடுகளின் மக்களோடு பேசிப் பழகி அவர்கள் வாழ்க்கை முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும். - 1

- அவர்களுடைய பண்பாடு, இசை, நடனம் ஆகியவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். - 1

ஆனால் மின்னல் வேக பயணத்தால் இவற்றை அடையமுடியாது

பொ – 5 மொ - 1

**10 பொருள் கூறுக** **(6 மதிப்பெண்கள்)**

அ. திகழ்வார்க்ள – விளங்குவார்கள்

ஆ. விசுவாசமும் – பற்றும், நன்றியுணர்வும்

இ. துய்ப்பவர்களுக்கு - அனுபவிப்பவர்களுக்கு

SERANGOON JUNIOR COLLEGE

JC2 H2 PRELIMINARY EXAMINATION 2018

தாள் 2

விடைக்குறிப்பு

**வினாக்கள்**

Q1 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று) (4 மதிப்பெண்கள்)

இந்தப் பழக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளையிடமிருந்து திறன்பேசியை எடுத்துவிட்டால் அது பல சமயங்களில் அக்குழந்தையின் மனநிலையை ஆழமாகப் பாதித்துவிடுகிறது.

அ) புறச்சுட்டு - அக்குழந்தையின்

ஆ) வினையடை – ஆழமாக

Q2 தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்துக்கும் நம் ஆரோக்கியத்தின் பாதிப்புக்கும் தொடர்பு உண்டா? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்)

- உணவு உட்கொள்ளும்போதும் இன்று பலரது கவனம் தொழில்நுட்ப சாதனங்களின் மீதுதான் உள்ளது. இதனால் தேவைக்கு அதிகமாக உண்டு உடல் எடையைப் பலர் கூட்டிக்கொண்டிருக்கின்றனர். – 1.5

- சிலர் பிடித்த இசையைக் கேட்பதற்குச் சாதனங்களைக் காதில் பொருத்திக்கொண்டு சத்தத்தின் அளவை மிகவும் அதிகமாக வைத்துக்கொண்டு செவிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர். – 1.5

- பிள்ளைகள் உட்பட பலரது தூக்கம் கெடுவதற்குத் தொழில்நுட்ப கருவிகள் முக்கிய காரணமாகும். அவற்றிலிருந்து வெளிப்படும் ஒளி உறக்கத்தை கெடுத்து உடலுக்கு அதிகச் சோர்வை ஏற்படுத்துகின்றது. – 1

இவ்வகைகளில் தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்துக்கும் நமது ஆரோக்கியத்தின் பாதிப்புக்கும் தொடர்பு உண்டு.

Q3 இரு பனுவல்களிலும் உள்ள குழந்தைகள் எவ்வாறு வேறுபட்டுள்ளனர்? (6 மதிப்பெண்கள்)

முதல் பனுவலில் உள்ள குழந்தைகள்,

- தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளனர்.

- மற்றவர்களோடு செலவிடும் நேரத்தின் மதிப்பை உணர்கின்றனர்.

- தொழில்நுட்பக் கருவிகளின் பாதிப்பின்றி பிள்ளைகள் நல்ல உறக்கத்தைப் பெற்று மறுநாள் பள்ளிக்குப் புத்துணர்ச்சியுடன் எழுகின்றனர்.

ஆனால் பனுவல் இரண்டில்,

- திறன்பேசியைக் கொடுத்தால் மட்டுமே இப்பிள்ளைகளின் கண்ணீரும் பிடிவாதமும் நீங்கும் நிலை உள்ளது. - 1

- திறன்பேசியின் பழக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட இப்பிள்ளைகளிடமிருந்து திறன்பேசியை எடுத்துவிட்டால் அவர்களது மனநிலை அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது. -1

**VICTORIA JUNIOR COLLEGE**

**Preliminary Examination-2018**

**H2 Tamil Language and Literature** **9574 /1**
**Paper 1 (part1)** **2hours 15 minutes**

**(** Total Time for Part1 &part2 )

**Part1-essay** **DATE: 12-09-2018**

( Part1 – 1hr 15 mins only)

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.
2. பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப்படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.
4. **அகராதியைப் பயன்படுத்துதல் :**

**( PART2 ) பகுதி 2-க்கு விடையளிக்கும் போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.**

This document consists of printed 1 page

---

**பின்வரும் தலைப்புகள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக. ( 35 மதிப்பெண்கள் )**

Q1 " **வீடு அமைதியாக இருந்தால் நாடு அமைதியாக இருக்கும்** "

இக்கூற்று உண்மையா? விவரிக்க.

Q2 அண்மையில் நீ வெளிநாட்டிற்குச் சென்றிருந்தாய். அப்பயணத்தில் ஒரு மிகப்பெரிய துயரச்சம்பவம் நிகழ்ந்து விட்டது. அப்போது பாதிப்பிற்கு ஆளான உனது மனநிலை எப்படி இருந்தது. நீ எவ்வாறு அதிலிருந்து மீண்டு சிங்கப்பூருக்கு வந்தாய் என்பதை விரிவாக விளக்குக.

Q3 இன்றைய உலகில் மனிதநேயமற்றச் செயல்கள் நிறைய நடக்கின்றன. அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதை எடுத்துரைக்க.

Q4 கீழ்க்காணும் படங்கள் உன் உள் மனத்தில் தோற்றுவிக்கும் வினாக்களும், அதற்குரிய விளங்கங்களையும் ஒரு கட்டுரையாக விவரிக்க.





முற்றும்

==================================================================

**VICTORIA JUNIOR COLLEGE**

**Preliminary Examination-2018**

**H2 Tamil Language and Literature** **9574 /1**
**Paper 1 (part2)** **2hours 15 minutes**

**(** Total Time for Part1 &part2 )

**PART 2** **DATE: 12-09-2018**

( Part2 one hour only)

# தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இவ்வினாத்தாளின் பகுதி 1, பகுதி2 ஆகியவை தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.
2. பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றிற்குரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப்படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.
4. **அகராதியைப் பயன்படுத்துதல் :**

**(PART2) பகுதி 2-க்கு விடையளிக்கும் போது நீ அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.**

This document consists of **3** printed pages

----------------------------------------------------------------------------------------------------

## “ அ” பிரிவு

**முன்னுணர்வுக் கருத்தறிதல் ( 5 மதிப்பெண்கள் )**

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப்பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள உறவு உன்னதமானது. தங்களைச் சீராட்டிப் பாராட்டி (Q1)_______________ அன்னையையும் அறிவூட்டி வழிகாட்டும் தந்தையையும் தங்களுக்கு அளித்த தாத்தா பாட்டியரின் அருமையைப் பிள்ளைகள் உணர வேண்டும். பிள்ளைகள் தம் மூத்த தலைமுறையினரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் (Q2)______________. உறவுகளை மதித்து, வாழ்க்கையை நடத்த நமது மூத்தோரின் அறிவுரைகள் நமக்கு வழிகாட்டும்.

உலகத்தையே உள்ளங்கைக்குள் வைத்துக்கொண்டு அறிவியல் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் பிள்ளைகளுக்கு இத்தகைய நற்பண்புகளை (Q3)______________ இன்றியமையாதது. பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொள்ளப்படும் அதே வேளையில் மனித நேயத்தின் பண்புகள் (Q4)______________ போய்விடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. இளம்பருவத்தினரின் மனத்தில் (Q5)______________ நற்பண்புகள் வளர்ந்து, வாழ்நாள் முழுவதும் அவர்களிடம் நிலைத்திருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு பெற்றோர் செயல்பட வேண்டும்.

( அடுத்த பக்கம் பார்க்கவும் )

## "ஆ" பிரிவு

சுயவிடைக்கருத்தறிதல் (1) ( 30 மதிப்பெண்கள் )

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப்படித்து, அதனடியிற் காணும்வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

இன்றைய அமைப்பில் நாமும் ஒரு மனிதனாக வாழ்வதற்கு, நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. காலம் காலமாக உயிர் வாழ்வதற்கு இரண்டு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. ஒன்றுஇருக்கின்றசூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுதல், மற்றொன்றுமாற்றிக்கொண்ட பிறகு இருப்பதை மேலும் சிறப்புடையதாக ஆக்கிக் கொள்ளுதல். வரலாற்றுக் காலத்திற்கு முன்பும் **<u>பரிணாமம்</u>** தொடர்ந்த காலத்திலும் தாவரங்களும் சரி, பிராணிகளும் சரி சூழ்நிலைக்குத் தங்களைச் சரிசெய்து கொண்டவை மட்டுமே வாழ்ந்திருக்கின்றன.

வெப்பநிலை, மண்வளம், வளர்ச்சிக்கான பிற தேவைகள் ஆகியவற்றுக்குத் தம்மைச் சரிசெய்து கொள்ள முடியாத தாவரங்கள் உயிர் வாழ முடியவில்லை. சரிசெய்து கொள்ள முடிந்தவை, உயிர் வாழ்வதற்குத் தேவையான முதற் படியில் அடி எடுத்து வைத்தன. மிருகங்களின் நிலையும் இதுதான். ஒரே சூழ்நிலையில் பல மிருக இனங்கள் ஒன்றாக வாழ வேண்டியிருந்தன. இந்த நிலையில் பிற மிருகங்களின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடுகின்ற திறமை பெற்றவைகளும், மற்றமிருகங்களை வெல்லக்கூடியவைகளும் அல்லது அமைதியாக இணைந்து வாழக் கற்றுக் கொண்டவைகளும் மட்டுமே உயிர் பிழைத்தன.

தம்மைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சரிசெய்துகொண்ட பிறகு தோன்றுகின்ற இரண்டாவது கட்டம், இருப்பதைத் தொடர்ந்து சிறப்புடையதாக ஆக்கிக் கொள்வதாகும். இது உயிர்வாழ்தலின் அடிப்படை **<u>விதியும்</u>** ஆகும். உயிர் வாழ்தல் என்பது, சரி செய்து கொள்வதைப் பொறுத்த விஷயம்மட்டுமல்ல; இருப்பதை மேலும் சிறப்பானதாக ஆக்கிக்கொண்டு போட்டியைச் சமாளிப்பதும் ஆகும். உதாரணமாக, ஓர் அழகிய சிறிய மலர், பருவகால சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னைச் சரிசெய்து

கொள்ளும் ஆற்றல் பெற்றதாக இருக்கலாம். ஆனால் பெரிதாகவும், கனமாகவும், விரைந்தும் வளரக்கூடிய பிற தாவரங்களால் அமுக்கப்பட்டு அழிந்து போகலாம். ஆகவே அந்த மலர் உயிர் வாழ வேண்டுமானால் இவற்றைத் தாக்குப் பிடிக்கும் சக்தியை அது வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது.

உயிர் வாழ்வதற்குத் தேவையான முதல்நிலை, தன்னைச் சூழ்நிலைக்குச் சரிசெய்து கொள்வதாகும். உங்களின் குடும்பம், வசிக்கும் இடம், தொழில், வர்த்தகம் ஆகிய எதிலும் எந்தச் சமயத்திலும் நீங்கள் பொருத்தமானவராகவும் சரிசெய்து கொள்கின்றவராகவும் உங்களை வைத்துக் கொள்வது அவசியமாகிறது. உயிர்வாழ்தல் என்று சொல்கின்றபோது, உயிருடன் இருத்தல் அல்லது இறந்துபோதல் என்பது பொருளல்ல. சில சமயங்களில் அதுவும் நேரலாம். உயிர்வாழ்தல் என்பது பயனுடைய, மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய **இணக்கமான** மனிதராக வாழ்வது என்பதுதான்.

முதலில் நீங்கள் மற்றவர்களுடன் ஒத்துப்போக வேண்டும். மற்றவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளும்படியாக முதலில் நீங்கள் உங்களைச் சரிசெய்துகொள்ள வேண்டும். அது இணக்கமான சூழ்நிலையில் உங்களை வைக்கும். வேறுவிதமாக நீங்கள் நடந்து கொண்டால் உங்களை மற்றவர்கள் ஏற்க மாட்டார்கள். எதிர்ப்பைத்தான் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொல்லைகளை அறுவடை செய்வீர்கள். எதற்கும் ஒத்துப்போகாதவர்கள் மற்றவர்களின் கவனத்தைத் தங்கள்மீது திருப்புவதில் வெற்றி பெறலாமே தவிர, மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையைப் பெற முடியாது.

சூழ்நிலைக்குச் சரிசெய்து கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் வாழுகின்ற சமுதாயம் அல்லது அமைப்பின் நடைமுறைக்குக் கட்டுப்படுங்கள். இவற்றைச் செய்த பிறகு உங்களிடம் உள்ளதை மேலும் சிறப்பானதாக ஆக்கிக்கொள்ளத் தொடர்ந்து முயலுங்கள்.

**( வினாக்கள் அடுத்த பக்கம் )**

**வினாக்கள்**

Q6 தாவரங்கள் உயிர் வாழ்வதற்கு எவை அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றன? (5 மதிப்பெண்கள்)

Q7 காலவோட்டத்தில் சில விலங்கினங்கள்மட்டும் தப்பிப் பிழைத்ததற்குக் கூறப்படும் காரணங்கள் யாவை? (6 மதிப்பெண்கள்)

Q8 நாம் நமது திறமையை வளர்த்துக்கொள்வது அவசியம் என்பதைப் பூவின்மூலம் கட்டுரையாசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்? (5 மதிப்பெண்கள்)

Q9 உண்மையிலேயே 'உயிர் வாழ்பவர்' என்று யார்? அவர்கள் மற்றவர்களுடன் ஒத்துப்போகாதபோது எத்தகைய விளைவுகள் ஏற்படும் ?

(7 மதிப்பெண்கள்)

***Q10 சொற்பொருள்*** ***(6மதிப்பெண்கள்)***

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.**

அ. பரிணாமம்

ஆ. விதியும்

இ. இணக்கமான

முற்றும்

**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 Preliminary EXAMINATION 2018**

**H2 Tamil Language and Literature** **9574/2**
**Paper 2** 1hr. only

**E- Exam** **Date : 12-09-2018**

# தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைநன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின் படி வினாக்களுக்கு உரிய விடையைக் கணினியில் தட்டச்சுச்செய்யவேண்டும்.

2. விடையைத் தட்டச்சுச்செய்யும் முன் வினா எண்ணை மறக்காமல் குறிப்பிடுக.

This document consists of **printed 5 pages.** Questions are separately

[Turn over]

**சுயவிடைக்கருத்தறிதல் (2)** **(30 மதிப்பெண்கள் )**

பின்வரும் இரண்டு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

**<u>பனுவல் ஒன்று:</u>**




## எழுத்தாளர் கபிலன்

| *என்னைப் பற்றி* | *என்னோடு தொடர்புக்கு* | *என் படைப்புகள்* | *என் நண்பர்கள்* |
|---|---|---|---|

**நண்பர்களே! வணக்கம்.**

காலம் மாற மாற மனிதனின் தேவைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்கேற்ப தேவைகளும் அதிகரித்து வருகின்றன. தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டும் பெட்டி, கணினி, மற்றும் சில வீட்டு உபயோகப்பொருட்கள் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகிவிட்டன. ஆனால், பணம் கொடுத்து வாங்கும் அளவிற்கு மக்கள் பலரிடம் கையிருப்பு இருப்பதில்லை. அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வந்தது தான் தவணை முறை . இந்தத்தவணை முறையினால் தான் பலரின் ஆசைகள், கனவுகள் நிறைவேறுகின்றன. இது நடுத்தர குடும்பங்களுக்குக்கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும். பொருட்களின் விலைக்கு உரிய பணத்தை நாம் உடனடியாகச் செலுத்திப் பெறாமல், மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சிறுகச்சிறுக கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டு, முதல் தவணையிலேயே பொருளைப் பெற்றுக்கொள்வது தான் தவணைமுறை.

ஆனால், “கூட்டிக்கழித்துப்பார்த்தால் கடைசியில் பொருளின் உண்மையான விலையை விட அதிகமான அளவிற்குப் பணம் கட்ட வேண்டுமே” என்று கணக்குப்போடலாம். ஆயினும் நாம் ஆசைப்பட்ட பொருளை வாங்க வேண்டும் என்றால்



**ஆவணங்கள்**

- 2018
- 2017
- 2016
- 2015
- 2014
-

| | |
|---|---|
| தவணைமுறைதானே கைகொடுக்கிறது! நீண்டகாலக்கடன் பெற்று வீடு வாங்குவோரெல்லாம் பணவீக்கத்தையும், வட்டிவிகிதத்தையும் பார்த்தால் சொந்த வீடு வாங்க முடியுமா? பல நவீன கருவிகளை முழு பணமும் செலுத்தி வாங்குவது என்பது பணக்காரர்களுக்கும் சுயத்தொழில் செய்வோருக்கும் பொருந்துமே தவிர சராசாரி மாத ஊதியம் பெறுவோருக்கு நவீன பொருட்களை வாங்குவது பகற்கனவாகவே முடியும். நடுத்தர மக்களுக்கு எட்டாக்கனியாகவே அமையும்.<br>இந்தத் தவணை முறையில் குறுகிய காலத்தவணைமுறை, நீண்டகால தவணை முறை என்று இருவகைத் தவணைமுறைகள் உள்ளன. குறுகிய கால தவணைமுறையில் ஒரு பொருளின் விலையைக் கட்டி முடித்த பிறகு கடன் சுமையிலிருந்து மீள வாய்ப்பு உள்ளது. | |

**Go to next page**




# பனுவல் இரண்டு- கருத்துத்களம்

**எழுத்தாளர் : முகிலன்**

| *என்னை அறிக* | *என்னோடு உரையாட* | *என் படைப்புகள்* | *என் நண்பர்கள்* |
| --- | --- | --- | --- |

**நண்பரே ! வணக்கம்.**

தவணைமுறையில் பொருட்களை விற்கும் வியாபாரிகளுக்கு இலாபத்தின் மீது தான் அக்கறை இருக்குமே தவிர ஏழை மக்கள் மீது இருக்காது. ஒரு தொலைக்காட்சிப்பெட்டியின் விலை ஐந்தாயிரம் வெள்ளி என்று வைத்துக்கொள்வோம். நுகர்வோர் பலர் முழுப்பணமும் உடனே கொடுக்க இயலாத போது பத்துப்பதினைந்து தவணைகளில் பணத்தைச்செலுத்தலாம் என்று வியாபாரி கூறுவதாக வைத்துக்கொள்வோம். இவ்வாறு பலருக்கும் விற்கும்போது விலையையும் உயர்த்தி, தவணைக்காலத்தில் தன் பணத்திற்கு வட்டி கிடைக்குமாறும், கடைக்காரர்களும் வியாபாரிகளும் செயல்படுகின்றனர். அப்படித்தவணை முறையில் ஒழுங்காக பணம் கட்டாத மக்களை மிகவும் கேவலமாக நடத்துகின்றனர். வீடு புகுந்து பொருட்களை எடுத்துச்செல்கின்றனர். தவணை முறை என்ற ஆசை வார்த்தைக்கு மயங்கி ஏராளமாக வாங்குபவர்கள் வசதியற்றவர்கள் மட்டும் அல்ல; தேவையற்றவர்களும் வாங்குகின்றார்கள். மக்களிடம் பேராசை வளர்க்கப்படுகின்றது. மக்கள் அகலக்கால்கால் வைக்க எண்ணும் பேராசைக்காரர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். சில நேரங்களில் தரமற்ற, போலிப்பொருள்களைத் தவணை தவணை என்ற ஆசை வார்த்தை ஜாலங்களால் மக்கள் தலையில் கட்டிவிடுகின்றனர்.



**ஆவணங்கள்**

- 2018
- 2017
- 2016
- 2015
- 2014

மக்கள் விரலுக்கு ஏற்ற வீக்கத்தோடு வாழவேண்டும் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலும், துபாயிலும் வாழும் மக்களும், வேலைக்குச் சென்றவர்களும் தவணை முறையில் பொருட்களை வாங்கிக்குவித்தனர். திடீரென்று பொருளியில் நெருக்கடி ஏற்பட்டபோது பலர் வேலையிழந்தனர். போதிய வருமானம் இல்லாத காரணத்தால் தவணை முறைக்குக் கட்ட வேண்டிய பணத்தைச் செலுத்த முடியாமல் விழிப்பிதுங்கி நின்றனர்.

அதனால் தவணைமுறையை ஒரு சூதாட்டம் என்றும் கூறலாம். ஆசையைப் பெருக்கி, உள்ளதையும் இழக்கவைக்கும் இத்தவணை முறையை ஒரு ஏமாற்று வித்தை என்றும் வருணிக்கலாம். ”பேராசை பெரு நஷ்டம் “ என்பது பழமொழி. இப்பழமொழி தவணைமுறையில் உள்ள மோசடிகளைப் பறைசாற்றுகின்றது. எந்த ஒரு செயலையும் மனிதன், பகுத்தறிவின் துணைகொண்டு ஆராய்ந்து செயல்பட வேண்டும் அவ்வாறு செயல்பட்டால் உலகின் எந்த நாட்டிலும் தவணைமுறை செயல்பட முடியுமா? இவ்வளவு வரவேற்புப் பெறுமா?

**VICTORIA JUNIOR COLLEGE**

**Preliminary Examination -2018**

**H2 Tamil Language and Literature** **9574/3**

**Paper 3** **3 hours**

DATE:21-09-2018

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1. **ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.**

2. **விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்**

This document consists of **3** printed pages

[Turn over

முக்கியக் குறிப்புகள்:

**ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.** ( 100 மதிப்பெண்கள் )

**" அ " பிரிவு**

**நாவல்**

Q1 வாழ்க்கை அனுபவங்களே மனிதனைப் பண்படுத்துகின்றன என்னும் கருத்தைப் '**பால்மரக்காட்டினிலே**' நாவலின் துணைகொண்டு ஆராய்க.

( 25 மதிப்பெண்கள் )

Q2 " பால்மரக்காட்டினிலே " என்னும் நாவலில் இடம் பெறும் **முருகனே பாலனை விடச்சிறந்தவன்** என்று கூறுவோருக்கு நீவீர் தரும் பதில் யாது? இவ்விரு கதாபாத்திரங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து விவரிக்க. ( 25 மதிப்பெண்கள் )

**"ஆ " பிரிவு**

**சிறுகதை**

Q3 "ஆயிஷா" என்ற கதையில் வரும் ஆயிஷா என்ற கதாபாத்திரத்தின் மூலம் உலகம் கற்றுக்கொள்ள வேண்டியவை யாவை? ஆயிஷா என்ற சிறுகதையின் வழி ஆராய்ந்து விவரிக்க. ( 25 மதிப்பெண்கள் )

Q4 " தமிழுக்கு அமுதென்று பேர் " என்ற இச்சிறுகதையின் கருவும், கதையின் போக்கும் **மிகுதியான கற்பனையே**! இத்தகைய நிலை என்றும் நம் தமிழுக்கு ஏற்படாது? இது உண்மையா? இதனைப்பற்றிய உமது கருத்தை இச்சிறுகதையின் வழி ஆராய்ந்து விவரிக்க. ( 25 மதிப்பெண்கள் )

## “இ” பிரிவு

### நாடகம்

Q5 **“தீதும் நன்றும் பிறர் தர வாரா”** என்பதற்கு ஏற்ப சிங்கப்பூர் மாப்பிள்ளை நாடகக்கதாபாத்திரங்களை அமைத்துள்ளார் சே வெ சண்முகம் . இக்கூற்றை ஆராய்ந்து **இந்நாடகக்கதாபாத்திரங்களின்** நடவடிக்கைகளைக்கொண்டு விவரிக்க.

( 25 மதிப்பெண்கள் )

Q6. **சிங்கப்பூர் மாப்பிள்ளை, காதல் என்ன விலை?** என்ற இவ்விரு நாடகங்களில் வரும் **செல்வி, வள்ளி கதாபாத்திரங்கள்**, இன்றைய **பெண் சமுதாயத்திற்குத் தலைக்குனிவை** ஏற்படுத்துகின்றார்கள் என்று கூறலாமா? இந்நாடகங்களில் உள்ள இவ்விரு கதாபாத்திரங்களின் செயல்பாடுகளை ஒட்டி ஆராய்ந்து விவரிக்க.

( 25 மதிப்பெண்கள் )

## “ஈ” பிரிவு

### கவிதை

Q7 பாரதிதாசனின் **எந்நாளோ** ! என்ற ஏக்கம் இன்று வரை நிறைவேறியதா? எதிர்காலத்தில் நிறைவேறுமா ? இன்றைய உலக நிலையை ஒட்டி ஆராய்ந்து விவரிக்க. ( 25 மதிப்பெண்கள் )

Q8. “கவிஞர்கள் **அஃறிணை** பொருட்களை உயர்த்தி **மனிதனை** இழிவாகப்பாடுகின்றனர்” என்பதை **உம் பாடத்திட்டத்தில்** உள்ள **சில கவிதைகளைக்**கொண்டு ஆராய்ந்து விவரிக்க. ( 25 மதிப்பெண்கள் )

## முற்றும்

==========================================================

விக்டோரியா தொடக்கக்கல்லூரி

முன்னோட்டத்தேர்வு -2018

மாதிரி விடைகள்

## முன்னுணர்வுக்கருத்தறிதல்:

1. வளர்த்த
2. ஆகும், உள்ளன
3. புகுட்டுதல், கற்பித்தல்
4. குறைந்து, களைந்து , கெட்டு
5. பதியும்

# கருத்தறிதல்

**1. தாவரங்கள் உயிர் வாழ்வதற்கு எவை அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றன?**

அ. ஒன்று இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுதல், மாற்றிக்கொண்ட பிறகு இருப்பதை மேலும் சிறப்புடையதாக ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. வெப்பநிலை, மண்வளம், வளர்ச்சிக்கான பிற தேவைகள் ஆகியவற்றிற்குத் தம்மைச்சரிசெய்துகொள்ள வேண்டும்.

**2. காலவோட்டத்தில் சில விலங்கினங்கள் மட்டும் தப்பிப் பிழைத்தற்குக் கூறப்படும் காரணங்கள் யாவை?**

அ. வெப்பநிலை, மண்வளம் ஆகியவற்றிற்கு ஈடுகொடுத்தவை இன்றும் வாழ்கின்றன.

ஆ.பிற மிருகங்களின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடுகின்ற திறமை பெற்றவைகளும் , மற்றமிருகங்களை வெல்லக்கூடியவைகளும் அல்லது அமைதியாக இணைந்து வாழக்கற்றுக்கொண்டவையும் காரணங்கள் ஆகும்.

**3.நாம் நம் தேவையை வளர்த்துக் கொள்வது அவசியம் என்பதைப் பூவின் மூலம் கட்டுரையாசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?**

உயிர் வாழ்தல் என்பது இருப்பதைச்சரி செய்து கொள்வது மட்டும் அல்லாமல் , இருப்பதைச்சிறப்பானதாக ஆக்கிக்கொண்டு போட்டியைச்சமாளிக்கின்றன பூக்கள். மேலும் நம்மை விடப் பெரிய, கனமான, விரைவாக வளரக்கூடியவர்களையும் சமாளித்துப்பூக்கள் வளர்வது போல மனிதர்களும் சூழ்நிலைக்கேற்ப வளரவேண்டும்.

**4. உண்மையிலேயே உயிர் வாழ்பவர் யார்? அவர்கள் மற்றவர்களுடன் ஒத்துபோகாத போது எத்தகைய விளைவுகள் ஏற்படும்?**

அ. உயர் வாழ்தல் என்பது," பயனுடைய, மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய , அனைவரோடும் ஒத்துபோகுபவர் ஆவார்..

ஆ. ஒத்துப்போகாத போது உங்களை மற்றவர்கள் ஏற்க மாட்டார்கள். பிறரின் எதிர்ப்புக்கு ஆளாக நேரும்..தொல்லைகளைச்சந்திக்க வேண்டும்.

சொற்பொருள்:

அ. பரிணாமம் - மாற்றம், வளர்ச்சி

ஆ. விதியும் - கொள்கையும், முறையும்

இ. இணக்கமான - சுமுகமான

========================================================================

# YISHUN JUNIOR COLLEGE
# 2018 JC2 Preliminary Examination

## H2 TAMIL LANGUAGE AND LITERATURE
## 9574/1

**Paper 1 (Part 1)** **உயர்தரம் 2** **தாள் 1 (பகுதி 1)**

# தமிழ்மொழி

**29 AUGUST 2018**
8.00am - 10.30am

YISHUN JUNIOR COLLEGE YISHUN JUNIOR COLLEGE YISHUN JUNIOR COLLEGE YISHUN JUNIOR COLLEGE YISHUN JUNIOR COLLEGE

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2 முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் உரிய விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

4 அகராதியைப் பயன்படுத்துதல்:
 (அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் பயன்படுத்தலாம். அகராதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நேரம் 1 மணி 15 நிமிடங்கள்
 (ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது நீ அகராதியைப் <u>பயன்படுத்தக்கூடாது.</u>
 (இ) நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

**<u>இத்தாளில் 2 அச்சிடப்பட்ட தாள்கள் உள்ளன.</u>**

# உயர்தரம் 2
# தமிழ்மொழி

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக. (35 மதிப்பெண்கள்)**

**Q1.** ‘பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை ‘தட்டிக் கொடுப்பது மட்டும்தான்’ – விவேகானந்தர் - ஆராய்க.

**Q2.** அண்மையில் வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டாய். அப்போது எதிர்பாராத விதமாக நீ ஓர் ஆபத்தான நிகழ்வைச் சந்தித்தாய். அந்நிகழ்வை விவரித்து, அது உன் மனத்தைப் பாதித்த விதத்தையும் அத்தகைய நிகழ்வு மீண்டும் நடக்கா வண்ணம் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதையும் விளக்கி எழுதுக.

**Q3.** ‘வருமுன் காப்பதே அறிவுடைமை’ என்ற கூற்றின் அடிப்படையில், இன்றைய வாழ்க்கைச்சூழலில் இளையர்கள் திட்டமிட்டே செயல்படுகிறார்கள்’ – கருத்துரைக்க.

**Q4.** பின்வரும் சூழலைக்கொண்டு ஒரு கட்டுரை வரைக.




**முற்றும்**

## பகுதி 2

### <u>'அ' பிரிவு</u>

**பின்வரும் கட்டுரைப் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு நிரப்புக. (5 மதிப்பெண்கள்)**

இயற்கை – மனிதனுக்கு வழங்கியிருக்கும் செல்வங்கள் மகத்தானவை. தனக்கு அள்ளிக் கொடுத்த இயற்கைக்கு மனிதன் நன்றிக்கடனாக திரும்பச் செலுத்துவது அல்லது செலுத்தியது என்ன? இயற்கையோடு இயைந்து வாழ்ந்து, தான் வாழும் பூமியை வளமாக வைத்திருக்க வேண்டிய மனிதன் தனது Q1________________________ இயற்கைக்கு எதிரான வன்முறைகளில் திரும்பி விட்டான் – நாகரிகம் என்ற பெயரில். மனிதன் நாகரிக வளர்ச்சிதான் இயற்கைக்கு எதிரான முதல் கல். இந்த நாகரிக வளர்ச்சி இயல்பானதாக, இயற்கைக்கு Q2 __________________ அமையாமல் இருந்திருந்தால் மனிதனின் முயற்சிகளும் அறிவுத்திறனும் அவனது செயல்பாட்டிற்குத் துணை நின்றிருக்கக்கூடும். ஆனால், தனது சுயநலப் பாய்ச்சலில் மனிதன் முதலில் செய்தது அடர் காடுகளை அழித்து புதிய நகரங்களை Q3 ________________________ .

முன்னொரு காலத்தில் பசுமைப்புரட்சி செய்து விளைச்சலைப் பெருக்கினார்கள். வேளாண்மையில் Q4 __________________ பார்க்கப்பட்ட இந்தச் செயல் காரணமாக விளைச்சல் பெருகியது. ஆனால் மண்ணின் வளம் வேதிப்பொருட்கள் கலந்த உரங்களால் தொடர்ந்து தனது சக்தியை இழக்கத் துவங்கியது என்கிறார்கள். அடர் காடுகளை அழித்து நகரங்களை உருவாக்கியதால் Q5 ____________________ சுழற்சிமுறையில் ஏற்பட்ட அதீத மாற்றங்கள் ஓசோன் அடுக்குகளில் ஓட்டைகளை உருவாக்கின. இதன் காரணமாகப் பூமியின் வெப்பநிலை ஆண்டு தோறும் அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் சொன்னாலும் அதற்குக் காரணமானவர்களின் அலட்சியம் தொடர்ந்தே வருகிறது.

அடுத்த பக்கம் பார்க்க)

<u>**‘ஆ’ பிரிவு**</u>

<u>**சுயவிடைக் கருத்தறிதல்**</u> **(1)** **(30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, கேட்கப்படும் வினாக்களுக்கு உமது சொந்த நடையில் விடை எழுதுக.**

1. தண்ணீரில் அசுத்தம் இருந்தால் அதைக் கொதிக்க வைத்து, வடிகட்டிக் குடிக்கலாம். ஆனால், தண்ணீர் சுத்தமாக இல்லை என்பதால் தண்ணீரே குடிக்காமல் இருந்துவிட முடியுமா? தண்ணீர் குடிப்பதை நிறுத்திவிட்டால் துடிதுடித்து இறக்க வேண்டியதுதான். அதுபோல இன்று மதங்கள் பற்றிய சிந்தனைகள் சிக்கல் ஆகிவிட்டன. எனவே, கல்வியையும் மதத்தையும் இணைக்க முடியாமல் இருக்கிறது. மதத்தின் துணை இல்லாமல் நல்ல நடத்தை உருவாக வாய்ப்பு இல்லை. நல்ல நடத்தை இல்லாத மனிதனின் ஆளுமை முழுமையான வளர்ச்சி அடைவது இல்லை. ஆனால் மதங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதால் அவற்றின் மீது மக்களுக்கு நம்பிக்கை பிறப்பது <u>**அரிதாகிவிட்டது**</u>. உண்மையில் மதம் என்பதை வெறும் சம்பிரதாயங்களின், கொள்கைகளின் அடிப்படையில் பார்க்காமல் மதசார்பற்ற நிலையில் பார்ப்போமானால் மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறனை வளர்ப்பதே மதமாகும். நமது உணர்ச்சிகளையும் ஆவேசங்களையும் கட்டுப்படுத்தும் திறனை வளர்க்கும் ஆற்றலே மதமாகும். இந்த ஆற்றலே எல்லா அறங்களுக்கும் அடித்தளம் அமைக்கிறது.

2. ஆக, மனிதனிடம் நன்னடத்தை வளர வேண்டுமானால் கட்டுப்பாட்டுத்திறன் வளர வேண்டியது அவசியமாகும். இந்தக் *கட்டுப்பாட்டுத்திறன் என்ற அறத்தைக் கல்வியுடன் இணைப்பதால் எந்தத் தவறும் இல்லை*. இது மதக்கொள்கைக்கு மறுப்பாகவும் இருக்க முடியாது. எல்லா மதங்களும் அறவழியைத்தான் போதிக்கின்றன. இதில் மதவெறிக்கோ தேசியம் என்ற ஒரு பிரச்சினைக்கோ இடமில்லை. இது எந்த மதத்தையும் குறிப்பிடாத சிறப்பு வாய்ந்தது. இந்த அறக்கல்வியை ஏட்டுக்கல்வியோடு இணைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அறம், கல்வியோடு சேர்க்கப்படுமேயானால், இன்று கல்வியில் காணப்படும் குறைகள் நீங்கிவிடும். இல்லையென்றால் அறிவு வளரும், ஒழுக்கம் வளராது. அறிவும் ஒழுக்கமும் ஒருங்கே நிறைந்த மனிதனிடம்தான் முழுமையான ஆளுமை வளர்ச்சி காணப்படும்.

3. ஒருவனுக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்ற காரணத்தால் மட்டும் அவனுடைய குடும்பத்தில் அமைதி ஏற்பட்டுவிடாது. படித்தவனும் சண்டை போடும் குணம் உள்ளவனாக, ‘நாம் படித்து இருக்கிறோம்’ என்ற ஆணவம் கொண்டவனாக இருக்கின்றான். பகுத்தறிவை இழந்து துன்பத்தில் <u>**உழல்கின்றான்**</u>. குடும்பத்தில் உள்ள ஒருவனிடம் அறிவோடு ஒழுக்கமும் சேர்ந்து வளராத வரை, அவனால் அக்குடும்பத்திற்கு ஆபத்துதான். இதனால் அவனுடைய குடும்பம் விவாதத்திற்கு உரியதாகி விடுகிறது. அவன், மற்றவர்களும் உடன் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடுகிறான். குடும்பத்தின் ஒற்றுமைக்குப் பாடுபடுபவன் குறைவாகப் படித்து இருந்தாலும்

பயனுள்ளவன் ஆகிறான். அவ்வாறு இல்லாதவன் எவ்வளவு கல்வியறிவு பெற்றிருந்தாலும் மூடனாகிறான். மேலும் ஒருவன் மற்றவரோடு **இணங்கி** வாழ்கின்றான் என்றால் அதற்கு அவனுடைய நல்ல பழக்கவழக்கங்கள்தாம் காரணமே ஒழிய, அவனுடைய அறிவு காரணம் அல்ல. அவனுடைய பழக்கம் மென்மையாகவும் அன்பு நிறைந்ததாகவும் இருக்குமானால் அனைவரும் அவனை விரும்புவர், அறிவைக் கணக்கில் கொள்ளாது பாராட்டுவர்.

4. ஒழுக்கம் இல்லா அறிவு மிகவும் பயங்கரமானது. அது அதிகார வெறி கொள்ளும்; யாருக்கும் பணிந்து நிற்காது; தான் என்ற அகங்காரம் கொண்டு அலையும்; பிறரையும் அலைக்கழிக்கும். சமுதாயப் பொறுப்புணர்வும் குடும்பப் பொறுப்புணர்வும் இன்றி, இருக்கும் ஏனைய நல்ல நெறிகளையும் அழித்துவிடும். சுற்றுப்புறத்தோடு ஒத்துப்போவது, எதையும் புரிந்துகொண்டு, பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்ப்பது, பணிவு, அடக்கம், ஆவேச உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது போன்ற இயல்புகளை வெறும் அறிவு நமக்குப் பெற்றுத்தராது. உணர்வுகள் மேலோங்க வேண்டும். அதற்கு ஆன்மீகக் கல்வி உறுதுணையாகும். இந்த ஆன்மீக கல்வி, மதச்சார்ப்பற்ற மற்றும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் திறனை வளர்க்கும் மதத்தை, அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட அறக்கல்வியை இன்று குழந்தைகள் பெறுவது அவசியமாகிறது. வெறும் அறிவு வளர்ச்சி, அழிவையே தரும்; வெறும் உணர்வு வளர்ச்சி, துன்பத்தையே தரும். அறிவும் உணர்வும் சேர்ந்தே வளர வேண்டும். அது வாழ்வின் உயர்நிலையை நமக்கு உணர்த்தும்.

**<u>கேள்விகள்</u>**

Q6. மதம் என்பது எவ்வாறு பார்க்கப்பட வேண்டும்? ஏன்? (6 மதிப்பெண்கள்)

Q7. '*கட்டுப்பாட்டுத்திறன் என்ற அறத்தை கல்வியுடன் இணைப்பதால் எந்தத் தவறும் இல்லை*' என்று சொல்வது எவ்வகையில் பொருந்தும்? (6 மதிப்பெண்கள்)

Q8. படிப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லை என்று ஆசிரியர் கூறுவதற்குக் காரணம் என்ன? (6 மதிப்பெண்கள்)

Q9. 'ஒழுக்கமில்லா வெறும் அறிவு ஆபத்து நிறைந்தது; உயர்வும் தராது' என்ற கூற்று ஏற்புடையதா? ஏன்? (6 மதிப்பெண்கள்)

Q10 **<u>சொற்பொருள்</u>** (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ. அரிதாகிவிட்டது -

ஆ. உழல்கின்றான் –

இ. இணங்கி –

**முற்றும்**

# Ans Key: H2TLL Prelim (Paper 1) 2018

**'அ' பிரிவு – முன்னுணர்வுக் கருத்தறிதல்**

Q1 **சுயநலத்திற்காக**, **நன்மைக்காக**, **விருப்பத்திற்காக**, **தன்னலத்திற்காக**

Q2 **மாறாக**,

Q3 **உருவாக்கியதுதான்**, **உண்டாக்கியதுதான்**

Q4 **புரட்சியாக**,

Q5 **இயற்கையின்**,

## 'ஆ' பிரிவு – கருத்தறிதல் - 1

## வினாக்கள்

Q6. மதம் என்பது எவ்வாறு பார்க்கப்பட வேண்டும்? ஏன்? (6 மதிப்பெண்கள்)

- **மதம் என்பதை வெறும் சம்பிரதாயங்கள், கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்காமல், மதசார்ப்பற்ற நிலையில் பார்க்க வேண்டும்.**
- **இத்தகைய, நிலையில் பார்க்கப்பட்டால், நல்ல நடத்தை உருவாக வாய்ப்பு உள்ளது. மனிதனின் ஆளுமையும் முழு வளர்ச்சி அடையும்.**
- **அத்துடன் மன உணர்ச்சிகளை, ஆவேசங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் வளர்க்கப்படும். இவைதான் எல்லாஅறங்களுக்கும் அடிப்படையாகும்.**

Q7. '*கட்டுப்பாட்டுத்திறன் என்ற அறத்தை கல்வியுடன் இணைப்பதால் எந்த தவறும் இல்லை*' என்று சொல்வது எவ்வகையில் பொருந்தும்? (6 மதிப்பெண்கள்)

- **இது எந்த மதக் கொள்கைக்கும் மறுப்பாக இல்லை, எல்லா மதங்களும் அறவழியைத்தான் போதிக்கின்றன,**
- **இதில் மதவெறிக்கோ, தேசியம் என்ற பிரச்சினைக்கோ இடம் இல்லை.**
- **அத்துடன் எந்த மதத்தையும் குறிப்பிடாது.**
- **மேலும் கல்வியில் காணப்படும் குறைகள் நீங்கி, அறிவும் ஒழுக்கமும் சேர்ந்தே வளரும். எனவே இவ்வாறு இணைப்பது தவறே இல்லை என்று சொல்வது பொருந்தும்.**

Q8. படிப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லை என்று ஆசிரியர் கூறுவதற்குக் காரணம் என்ன? (6 மதிப்பெண்கள்)

- **நன்கு படித்திருந்தாலும், அவர்கள் குடும்பத்தில் அமைதி இருக்காது,**
- **அவர்கள் சண்டை போடும் குணம் கொண்டு, ஆணவத்தோடு நடந்து தனது பகுத்தறிவையும் இழந்து துன்பத்தில் தவிக்கிறார்கள்.**
- **மாறாக, குறைவாகப் படித்திருந்தாலும், குடும்பத்தின் ஒற்றுமைக்குப் பாடுபட்டு, மற்றவர்களுடன் ஒன்றுபட்டு, நல்ல பழக்க வழக்கங்களை கொண்டு, அனைவரும் விரும்பும் வகையில் வாழ்கின்றான்.**
- **இதனால், படிப்பிற்கும், ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லை என்கிறார் ஆசிரியர்.**

Q9. ‘ஒழுக்கமில்லா வெறும் அறிவு ஆபத்து நிறைந்தது; உயர்வும் தராது’ என்ற கூற்று ஏற்புடையதா? ஏன்? (6 மதிப்பெண்கள்)

- **இக்கூற்று ஏற்புடையதே. ஒழுக்கமில்லா வெறும் அறிவு ஆபத்தானது, அவர்களிடம் அதிகார வெறி இருக்கும், பணிவு இருக்காது, தான் என்ற அகந்தை கொண்டு பிறரையும் துன்புறுத்துவார்கள்,**
- **மேலும் வெறும் அறிவுகொண்டோர், சமுதாய மற்றும் குடும்பப் பொறுப்பின்றி, மற்ற நன்னெறிகளையும் அழித்து, சுற்றுப்புறத்தோடு ஒத்துப்போகாது, எதையும் உணர்வு பூர்வமாகப் புரிந்துகொள்ளாமல், பிறர்நிலையில் வைத்துப்பார்க்காமல், அடக்கமின்றி, ஆவேச உணர்வுகளைக் கட்டுப்படுத்தாமல் இருப்பார்கள்.**
- **ஆக, உணர்வுகள் மேலோங்காது, கட்டுப்படுத்தும் திறனின்றியும் இருப்பதால் வெறும் அறிவு என்றும் உயர்வு தர முடியாது. உணர்வும் அறிவும் சேர்ந்தே வளரும்போதுதான் உயர்நிலை கிட்டும்.**

Q10 <u>**சொற்பொருள்**</u> (6 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.**

அ. அரிதாகிவிட்டது – **கடினமாகிவிட்டது**

ஆ. உழல்கின்றான் – **தவிக்கின்றான், சிக்கிக்கொள்கின்றான்.**

இ. இணங்கி - **ஒத்துப்போய், ஒன்றிணைந்து**

**<u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>**

இயற்கை – மனிதனுக்கு வழங்கியிருக்கும் செல்வங்கள் மகத்தானவை. தனக்கு அள்ளிக் கொடுத்த இயற்கைக்கு மனிதன் நன்றிக்கடனாக திரும்பச் செலுத்துவது அல்லது செலுத்தியது என்ன? இயற்கையோடு இயைந்து வாழ்ந்து தான் வாழும் பூமியை வளமாக வைத்திருக்க வேண்டிய மனிதன் தனது **<u>சுயநலத்திற்காக</u>** இயற்கைக்கு எதிரான வன்முறைகளில் திரும்பி விட்டான் – நாகரிகம் என்ற பெயரில். மனிதன் நாகரிக வளர்ச்சிதான் இயற்கைக்கு எதிரான முதல் கல். இந்த நாகரிக வளர்ச்சி இயல்பானதாக, இயற்கைக்கு **<u>எதிராக</u>** அமையாமல் இருந்திருந்தால் மனிதனின் முயற்சிகளும் அறிவுத்திறனும் அவனது செயல்பாட்டிற்குத் துணை நின்றிருக்கக்கூடும். ஆனால், தனது சுயநலப் பாய்ச்சலில் மனிதன் முதலில் செய்தது அடர் வனங்களை அழித்து புதிய நகரங்களை **<u>உருவாக்கியதுதான்</u>**.

முன்னொரு காலத்தில் பசுமைப்புரட்சி செய்து விளைச்சலைப் பெருக்கினார்கள். வேளாண்மையில் **<u>புரட்சியாகப்</u>** பார்க்கப்பட்ட இந்தச் செயல் காரணமாக விளைச்சல் பெருகியது. ஆனால் மண்ணின் வளம் வேதிப்பொருட்கள் கலந்த உரங்களால் தொடர்ந்து தனது சக்தியை இழக்கத் துவங்கியது என்கிறார்கள். அடர் காடுகளை அழித்து நகரங்களை உருவாக்கியதால் **<u>இயற்கையின்</u>** சுழற்சிமுறையில் ஏற்பட்ட அதீத மாற்றங்கள் ஓசோன் அடுக்குகளில் ஓட்டைகளை உருவாக்கின. இதன் காரணமாகப் பூமியின் வெப்பநிலை ஆண்டு தோறும் அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் சொன்னாலும் அதற்குக் காரணமானவர்களின் அலட்சியம் தொடர்ந்தே வருகிறது.

## தாள் 2 (மின்னியல் தேர்வு)

**நாள்: 29/08/2018 நேரம் – 11.00am – 12.00**

**'இ'பிரிவு**

**சுயவிடைக் கருத்தறிதல் (2) (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

**பனுவல் 1**

**மூத்தோர் – கவலையளிக்கும் தற்கொலைகள்**

50 வயதிற்கு மேற்பட்ட வயதானவர்களின் தற்கொலை எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது என்ற தகவல் கவலை அளித்துள்ளது. மூத்தோர்கள் நமது வாழ்க்கைப்பாதையை அமைத்துத் தந்தவர்கள். எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்து நமது வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள். அவர்களுக்கு ஓர் அமைதியான வாழ்க்கையை அமைத்துத் தருவது நமது கடமையாகும்.

நமது மக்களில் பெரும்பாலோர் தங்கள் குழந்தைகளையும் வயதான பெற்றோர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டிய ஒரு நெருக்கடி நிலையில் உள்ளனர். இதனால் சில நேரங்களில் மூத்தோர், பொதுவாகத் தனிமைப்படுத்தப்பட்டு, மனச்சோர்வை அடைகின்றனர். இது குறித்து யாரிடமும் பேசாமல் தற்கொலையே சிறந்த வழி என்று நினைக்கிறார்கள். ஒரு சிலர் தாங்கமுடியாத நோயினால் அவதிப்படுவதால் பிள்ளைகளுக்குத் தொல்லையாக இருக்கக்கூடாது என்று தற்கொலை முடிவெடுக்கிறார்கள். மன அழுத்த பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ள சில அமைப்புகள் இருந்தாலும் மூத்தோர் அவ்வாறு செய்வது கௌரவக் குறைவு என்று கருதுகிறார்கள். அரசு ஏற்பாடு செய்யும் பல நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளத் தயங்குகிறார்கள். துடிப்புடன் மூப்படைதல் (active ageing) பற்றி அறிந்திருந்தாலும் அத்தகைய நிகழ்வுகளில் கலந்துகொள்வதிலும் ஆர்வம் காட்டுவதில்லை. பிள்ளைகளும் பல சமயங்களில் பெற்றோரின் நலனில் அக்கறை கொண்டாலும் அவர்களிடம் அன்பாகப் பேச நேரமின்றிச் சுழன்று கொண்டிருக்கிறார்கள்.

பல பிரச்சினைகளால் மன அழுத்தம் ஏற்பட்டுத் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் முதியோர்களில் பெண்களை விட ஆண்களே அதிகம். பொதுவாக ஆண்கள் தங்கள் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசத் தயங்குகிறார்கள். உலகில் எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் பிரச்சினைகள் தோன்றிக் கொண்டேதான் இருக்கும். தற்கொலை ஒன்றே அதற்குத் தீர்வென்றால் இவ்வுலகம் சுடுகாடாகிவிடும். தம்மால் இனி யாருக்கும் பயனில்லை என்ற நினைப்பால் மூத்தோர் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எந்த வயதிலும் மனிதன், இறைவன் கொடுத்த வாழ்வை ஏற்றுப் போற்றி, சவால்களை எதிர்த்துப் போராடி, எதையும் சாதிக்கும் மனபலம் பெற்றிருக்க வேண்டும்.

**காவேரி**

**பனுவல் 2**

| *வாழ்க்கைப் பயணம்* | கருத்துரிப்பு 2018 |
|---|---|

**முதியோர் – துடிப்புடன் மூப்படைதல்**

சிங்கப்பூரில் வயதான மக்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது. 2030 ஆம் ஆண்டில் ஐவரில் ஒருவர் மூத்தோராக ( 65 வயதிற்கு மேல் ) இருப்பார்கள். மக்கள் வளத்தை மட்டுமே நம்பி உள்ள நமது நாட்டில் மூத்தோர்கள் தங்கள் உடல் மற்றும் மன நலத்தைப் பாதுகாக்க வேண்டும். வாழ்க்கையை எப்போதும் ஆக்கப்பூர்வமான நோக்குடன் கண்டு, சவால்களைச் சமாளித்து வெற்றி நடை போடுவது அவர்கள் கைகைகளில்தான் உள்ளது. தொடர்ச்சியான மருத்துவ பரிசோதனைகளுக்குச் சென்று உடல்நலத்தைப் பேணி, உற்சாகமாகப் பல செய்ற்பாடுகளில் ஈடுபட்டுத் தங்களுக்கும் நாட்டிற்கும் நலம் சேர்க்கத் தயங்கக்கூடாது.

அதற்குப் பல வழிகளில் நமது அரசு உதவி வருகிறது. துடிப்புடன் மூப்படைதல் (active ageing) என்ற கோட்பாட்டை மூத்தோரிடையே பரப்பி வருகிறது. குறிப்பாக 'மூத்த குடிமக்கள் நிர்வாகக் குழு' முதியோரின் வாழ்க்கை அனுபவங்களைச் செறிவூட்டுவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை, பாடநெறிகளை ஒழுங்குபடுத்துகிறது. இதில், பங்கேற்பாளர்களின் ஆரோக்கிய வாழ்விற்காக, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விளையாட்டுகள், நடன நடவடிக்கைகள் உள்ளன. அத்துடன் ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொள்ளலாம்; சமையல் பயிற்சிகள் மேற்கொள்ளலாம். மேலும் வாழ்நாள் கற்றல் மூலம் கணினி, தொழில்நுட்பம் தொடர்பான திறன்களைப் பெறலாம். இத்தகைய நிகழ்வுகளில் பல முதியோர்கள் பங்கேற்றும் வருகிறார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அத்துடன் நம் நாட்டில் பல முதியோர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவீனத்திற்காக 70, 80 வயதிலும் வேலைகளுக்குச் சென்று முடிந்தமட்டும் பொருள் ஈட்டுகிறார்கள். *இதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும் அவர்களில் பெரும்பாலோர் இவ்வாறு வேலை செய்வது தங்கள் தனிமையைப் போக்குகிறது, சுதந்திரமாக இயங்க உதவுகிறது என்று கூறுகிறார்கள்.*

இவ்வாறு, வயதான காலத்திலும் தனித்து இயங்குவதற்கு மூத்தோர் தங்கள் உடல்நலத்தையும் மனநலத்தையும் நன்றாகக் கவனித்து வர வேண்டும். அதற்கு உறுதுணையாக நமது இளையோரும் அவர்களிடம் அன்பையும் ஆதரவையும் காட்டி உற்சாகமூட்ட வேண்டும். முதுமை என்பது ஒரு சாபம் அல்ல, அது வாழ்வின் ஓர் இனிய பயணமாக இருக்க வேண்டும்.

**முகிலன்**

**<u>வினாக்கள்</u>**

Q11 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் இரண்டு) (4 மதிப்பெண்கள்)

*இதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும் அவர்களில் பெரும்பாலோர் இவ்வாறு வேலை செய்வது தங்கள் தனிமையைப் போக்குகிறது, சுதந்திரமாக இயங்க உதவுகிறது என்று கூறுகிறார்கள்.*

(அ) வினையடை –
(ஆ) எழுவாய் --

Q12 முதியோர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதற்கான காரணங்கள் யாவை? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்)

Q13 கருத்துக்கள் அடிப்படையில் பனுவல் ஒன்று எவ்வகையில் பனுவல் இரண்டோடு வேறுபட்டிருக்கிறது? (6 மதிப்பெண்கள்)

Q14. *'முதுமை, வாழ்வின் ஓர் இனிய பயணமாக அமைய வேண்டும்'* என்று சொல்லப்படுவதை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம்? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்தைத் தக்க சான்றுகளுடன் **140** சொற்களுக்கு மிகாமல் எழுதுக.

(15 மதிப்பெண்கள்)

**ANS KEY -**

**வினாக்கள்**

Q11 கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் இரண்டு) (4 மதிப்பெண்கள்)

*இதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும் அவர்களில் பெரும்பாலோர் இவ்வாறு வேலை செய்வது தங்கள் தனிமையைப் போக்குகிறது, சுதந்திரமாக இயங்க உதவுகிறது என்று கூறுகிறார்கள்.*

(அ) வினையடை –**பரிதாபமாக**
(ஆ) எழுவாய் -- **பெரும்பாலோர்**

Q12 முதியோர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதற்கான காரணங்கள் யாவை? (பனுவல் ஒன்று) (5 மதிப்பெண்கள்)

- **பெரும்பாலோர் பிள்ளைகளையும் பெற்றோர்களையும் கவனித்து வருவதால் நேரமின்மை, மூத்தோர் தனிமைப்படுப்படுகின்றனர்.**
- **மனச்சோர்வு, யாரிடமும் மனம் திறந்து பேசுவதில்லை,**
- **தாங்கமுடியாத நோயால் அவதிப்படுவது, பிள்ளைகளுக்குத் தொல்லையாக இருக்கக்கூடாது.**

Q13 கருத்துக்கள் அடிப்படையில் பனுவல் ஒன்று எவ்வகையில் பனுவல் இரண்டோடு வேறுபட்டிருக்கிறது? (6 மதிப்பெண்கள்)

- **இரண்டும் மூத்தோரைப்பற்றி உள்ளது. <u>பனுவல் – 1</u> குறைகளைக் கூறுகிறது. மூத்தோர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதை விளக்குகிறது, கூடி வருகிறது தனிமை, மனச்சோர்வு, தாங்கமுடியாத நோயின் அவதி, பிள்ளைகளுக்குப் பாரமாக இருக்கக்கூடாது . தற்கொலை செய்தல் – பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளாமை, கௌரவம் பார்ப்பது, அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது இல்லை, பிள்ளைகளும் அன்புடன் பழகுவது இல்லை. ஆண்களே அதிக தற்கொலை, மனம் விட்டுப் பேசுவதில்லை , தன்னால் பயனில்லை**
- **பனுவல் 2 – துடிப்பான மூத்தோரைப் பற்றி உள்ளது. நிறைவுகளைக் கூறுகிறது. எப்படி ஆக்கப்பூர்வமாக மூத்தோர் வலம் வரலாம் என்று கூறுகிறது. துடிப்புடன் மூப்படைதல், அரசின் முயற்சிகள், ஆரோக்கிய வாழ்வு, சமையல் வகுப்பு, வாழ்நாள் கற்றல், கணினி தொழில்நுட்ப வகுப்புகள். வேலைகளுக்குப் போதல், இவ்வாறு துடிப்படன் வாழ் உடல்நலமும் மன நலமும் அவசியம். அதைப்பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் இளையர்களுக்கு உள்ளது.**

Q14. *'முதுமை, வாழ்வின் ஓர் இனிய பயணமாக இருக்க வேண்டும்'* என்று சொல்லப்படுவதை

எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம்? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்தைத் தக்க சான்றுகளுடன் **140** சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

- **ஏற்றுக்கொள்கிறேன் / ஏற்றுக்கொள்ளவில்லை –**
- **பல அனுபவங்கள், வழிகாட்டுதல், தற்கொலைக்குப் போகக்கூடாது. துடிப்புடன் மூப்படைதல் – ஆதரவு கொடுக்க வேண்டும். பிள்ளைகளும் பொறுப்பை உணர்ந்து ஆதரவு தர வேண்டும்.**
- **மனித வளம் நம்பியுள்ளது. வேலைக்குப் போகலாம். மன, உடல் நலத்தைக் காக்க வேண்டும்.**
- **வகுப்புகளுக்குப் போகலாம். மனம் விட்டுப் பேசுதல், பிள்ளைகளும் அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்.**
- **வேறு கருத்துகள்.**

## முக்கியக் குறிப்புகள்

**மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

### ‘அ’ பிரிவு

#### நாவல்

1. ‘பால்மரக்காட்டினிலே’ என்ற நாவலில் வலம் வரும் தோட்டத்து மக்களின் துனபங்களுக்கு அவர்களின் அறியாமையே காரணம்’ – கருத்துரைக்க.

(25 மதிப்பெண்கள்)

2. கண்ணம்மா, ராதா ஆகிய இரண்டு கதைமாந்தர்களின் பண்புநலன்களை ஒப்பிட்டு ஆராய்க. இவரகளில் யார் இக்கால இளையர்களுக்குச் சிறந்த படிப்பினையாக இருக்கிறார் என்று கூறுவீர்கள்? ஏன்?

(25 மதிப்பெண்கள்)

### ‘ஆ’ பிரிவு

#### சிறுகதை

3. ‘விடியுமா?’ என்ற சிறுகதையின் நாயகி, குஞ்சம்மாள், தன் வாழ்வில் சந்திக்கும் சிக்கல்கள் யாவும் மானிட வாழ்வின் இயல்பான பிரதிபலிப்புகளே’ – ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

4. ‘ஆயிஷா’ என்ற கதையின் கருப்பொருள் என்ன? அது கதையில் வெளிப்படுத்தப்படும் பாங்கினை விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## **‘இ’ பிரிவு**

**நாடகம்**

5. ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ என்ற நாடகம் நமக்கு உணர்த்த விரும்பும் கருத்துகளை விளக்கி அவற்றைக் குறித்த உங்கள் சிந்தனைகளையும் விவரிக்க.
(25 மதிப்பெண்கள்)

6. ‘வள்ளியம்மை ஆண் ஆதிக்கத்தை முழுமையாக வெறுத்தாள்’ – கருத்துரைக்க.
(25 மதிப்பெண்கள்)

## **‘ஈ’ பிரிவு**

**கவிதை**

7. (அ) ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருத்தமானவை’ – நிறுவுக.
(13 மதிப்பெண்கள்)

(ஆ) ‘புல்’ என்ற புதுக்கவிதையில் மிளிர்ந்து நிற்கும் அழகினை விவரித்து எழுதுக.
(12 மதிப்பெண்கள்)

8. பாரதிதாசன் தன் ‘எந்நாளோ?’ என்ற கவிதையில் சில எதிர்பார்ப்புகளை முன்வைக்கிறார். அவற்றை விளக்கி, நாம் அவற்றை அடைந்துவிட்டோம் என்று கூறுவது எவ்வகையில் பொருந்தும் என்பதையும் ஆராய்க.
(25 மதிப்பெண்கள்)

**முற்றும்**